# *மூன்றாம் யாத்திரை*

யாவும் கைகூடிடும், நம்பிடுவாய்.

நாம் ஜெப வார்த்தைக்காக இப்பொழுது நம்முடைய தலைகளை வணங்குவோமாக. நம்முடைய தலைகள் வணங்கியிருப்பதோடு, தேவனுக்கு முன்பாக தெரியப்படுத்தும்படியான விசேஷித்த விண்ணப்பங்கள் ஏதாகிலும் இருக்குமா என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படியே கரத்தை உயர்த்தி, உங்கள் கரத்தின் கீழே, மனதில் உள்ள உங்களுடைய விண்ணப்பத்தை நினைத்துக் கொள்ளுங்கள்.

2 பரலோகப் பிதாவே, நித்தியத்திற்கு இந்தப் பக்கத்தில், மற்றுமொருமுறை நாங்கள் ஒன்று கூடியிருப்பதற்காக நாங்கள் உமக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறோம். இன்று காலை, நீர் எங்கள் பெலனைப் புதுப்பிக்கவும், எங்களுக்கு முன்வைக்கப்பட்டுள்ள பயணத்தை மேற்கொள்ள எங்களுக்கு தைரியத்தையளிக்கவும், உம்மை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறோம். மன்னாவிற்காக அதிகாலையில் இஸ்ரவேல் ஜனங்கள் ஒன்று கூடினது போன்று, நாங்கள் இப்பொழுது ஒன்று கூடிவந்திருக்கிறோம். அந்த மன்னா அவர்களுக்கு முந்தைய இரவில் அளிக்கப்பட்டு, அடுத்த நாள் முழுவதிலும் அவர்களுக்குப் பெலனை அளித்தது. எங்கள் பயணத்திற்கான பெலனைப் பெற்றுக்கொள்ள, இந்தக் காலை ஆவிக்குரிய மன்னாவிற்காக நாங்கள் ஒன்று கூடியுள்ளோம்.

3 கர்த்தாவே, உயர்த்தப்பட்ட கரங்கள் ஒவ்வொன்றின் கீழுள்ள தேவைகளை நீர் அறிந்திருக்கிறீர். அவர்கள் தேவைகள் அனைத்தையும் நீர் சந்திக்கவேண்டுமாய், அவர்களுடைய விண்ணப்பங்களுடன் என்னுடைய விண்ணப்பங்களையும் சேர்த்து உமக்கு முன்பாக ஏறெடுக்கிறேன். கர்த்தாவே, வியாதியஸ்தரையும், அவதியுறுகிறவர்களையும் சுகப்படுத்தும். நீரே தேவனென்றும், நீர் வாக்களித்துள்ள எல்லாவற்றையும் நிறைவேற்ற உம்மால் கூடும் என்பதையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். ஆனால் அதற்கென, *விசுவாசிக்க மாத்திரம் செய்* என்னும் பாடல் எங்களுக்கு அறிவுறுத்துவதை நாங்கள் கடைபிடிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். *ராஜாவுடன் நடந்து அவருடன் உரையாடு* என்னும் பாடலில் அடங்கியுள்ள மகத்தான சொற்களையும் நாங்கள் கேட்டோம்.

4 இப்பொழுதும், பிதாவாகிய தேவனே, இன்று காலை புறப்பட்டுச் செல்லவிருக்கும் உமது வார்த்தையை ஆசீர்வதிப்பீராக! எங்கள் இருதயங்களில் அது இளைப்பாறும் ஸ்தலத்தை கண்டடைந்து, நாங்கள் கேட்பவைகளை அருளட்டும். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இவைகளைக் கேட்கிறோம். ஆமென்.

நீங்கள் அமரலாம். சகோதரியே, உங்களுக்கு நன்றி.

5 "'கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவோம் வாருங்கள்' என்று அவர்கள் சொன்னபோது நான் மனமகிழ்ச்சியாயிருந்தேன்" என்று உரைக்கப்பட்டுள்ளது என்று நான் நினைக்கிறேன்.

6 ஹாட் ஸ்பிரிங்ஸ் என்னுமிடத்தை நான் நேற்று விட்டபோது, சகோதரர் மூர் என்னிடம், "டெக்சாஸில் நடக்கும் சிறப்புக் கூட்டத்தில் என்னுடன் நீங்கள் கலந்துகொண்டு இரண்டு நாட்கள் அங்கு இளைப்பாறலாமே" என்று கேட்டுக்கொண்டார்.

7 அப்பொழுது நான், "நாளை எனக்கு இரண்டு ஆராதனைகள் இருக்கின்றன" என்றேன்.

அதற்கு அவரோ, "இரண்டு ஆராதனைகளா?" என்று கேட்டார்.

நான், "ஆம்" என்றேன்.

8 "அதற்கு அவர், கடினப்பட்டு நீங்கள் பிரசங்கம் செய்தீர்கள். அப்படிப்பட்ட ஒருவர் அத்தகைய கடின உழைப்பிற்குப் பின்பு ஒரு வாரமாவது ஓய்வுபெற வேண்டும். நீங்கள் சபை போதகரை எடுத்துக் கொள்ளுங்கள். அவர் ஞாயிறு காலை பிரசங்கம் நிகழ்த்திவிட்டு, அந்த வாரம் பூராவும் ஓய்வெடுத்துக்கொள்கிறார். சுமார் முப்பது நிமிடங்கள் மாத்திரமே அவர் பிரசங்கம் செய்வார். நீங்களோ அன்றாடம் ஒவ்வொரு முறையும் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் பிரசங்கம் செய்துவிட்டு, அதைத் தொடர்ந்து ஜெப வரிசையில் உள்ளவர்களுக்கு ஜெபம் செய்கின்றீர்கள். பகுத்தறிதலின் வரம் வேறு உங்கள் மூலம் அப்பொழுது கிரியை செய்கின்றது. அப்படியிருக்க, இப்பொழுது நீங்கள் வீடு திரும்பி, ஞாயிறன்று இரண்டு ஆராதனைகள் நடத்தப் போவதாகக் கூறுகின்றீர்களே!" என்றார்.

நான், "ஆம், ஐயா" என்று பதிலளித்தேன்.

அதற்கு அவரோ, "உங்களால் எப்படி முடிகின்றது?" என்று கேட்டார்.

அப்பொழுது நான், "கர்த்தரிடத்திலிருந்து எனக்கு ஒத்தாசை வருகின்றது" என்று கூறினேன். புரிகிறதா?

9 காலதாமதமாகிவிட்டது...என்று ஒருவர் சற்று முன்னர் நான் உள்ளே நுழையும்போது, ஜெபம் செய்தார். ஆம், காலதாமதமாகி விட்டது. ஊழியத்தின் அவசியமும் அதிகமாகிக் கொண்டு வருகின்றது. நாம் வாழும் இம்மகத்தான நேரத்தில், நமக்களிக்கப்பட்டுள்ள பாகத்தை நாம் வகித்து, உதவி செய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம்.

10 இப்பொழுது, கர்த்தருக்குச் சித்தமானால் இன்றிரவு, "உங்கள் வாழ்க்கை சுவிசேஷத்திற்குத் தகுதியாய் அமைந்துள்ளதா?" என்னும் பொருளின் பேரில் பேச விரும்புகிறேன். நான் அதை ஒலி நாடாவில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

11 இப்பொழுது, காலை செய்தியை அவர்கள் பதிவு செய்யப் போகின்றார்களா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஒலிப்பதிவு அறையில் சிலரை நான் காண்கிறேன். அங்கு—அங்கு சில நபர்கள் உள்ளனர்; அவர்கள்தான் என்று நான் நினைக்கிறேன். நான் நினைத்தேன்...சகோதரன் நெவில் இதை செய்வார் என்று நான் நினைத்தேன். சென்ற ஞாயிறன்று நான் அவரிடம், அவருடைய செய்திக்குப் பிறகு...என்னுடைய செய்தியையளிப்பேன் என்று கூறினேன். இந்த ஞாயிறு பள்ளி பாடத்தை அவர்கள் ஒலிப்பதிவு செய்ய விரும்பினால், அது அருமையாயிருக்கும்.

12 கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த ஞாயிறன்று, கர்த்தர் அனுமதித்தால், நாங்கள் இங்கிருப்போம். நீண்ட காலமாக நான் பேசவேண்டுமென்று விரும்பியுள்ள பொருளின் பேரில் பிரசங்கம் செய்வேன். நான் ஏற்கனவே உங்களுக்கு வாக்களித்தபடி, அத்தகைய செய்திகளை முதலில் இந்த கூடாரத்தில் பிரசங்கம் செய்து அவைகளைப் பதிவு செய்வேன். அடுத்த ஞாயிறு காலை, கர்த்தருக்குச் சித்தமானால், இயேசுகிறிஸ்துவை இச்சந்ததியார் சிலுவையில் அறைந்தார்கள் என்னும் குற்றச்சாட்டை அவர்கள் மேல் சுமத்தப்போகின்றேன்.

13 இன்றிரவு ஏழு அல்லது ஏழு—முப்பது மணிக்கு, "உங்கள் வாழ்க்கை நற்பெயருள்ளதாயுள்ளதா?" என்னும் செய்தியை அளிப்பேன்.

14 இப்படிப்பட்ட செய்திகளை நான் அளிக்கும்போது, சில சமயங்களில் நான் கடிந்துகொள்ளும் சொற்களை உபயோகிக்கிறேன். அது இங்கே இந்த சபையோருக்காக அல்லது வேறு எதற்கோ அதை நான் உண்மையாகவே பொருட்படுத்திக் கூறுகிறதில்லை. என் செய்தி உலகெங்கும் செல்கின்றது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளவும். புரிகிறதா? அந்த ஒலி நாடாக்களை உலகிலுள்ள மக்கள் அனைவரும் கேட்பதற்காக, அதற்கென்று ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இச்செய்திகளை அவர்கள் காடுகளில் வாழ்வோரிடத்திலும் கூட கொண்டு செல்கின்றனர். சில நேரங்களில், ஆஸ்திரேலியா அல்லது எங்கோ மற்ற பாகங்களில் உள்ளவர் கேட்கவேண்டுமென்று பரிசுத்த ஆவியானவர் விரும்புவதை, நான் இச்செய்திகளில் கூறவேண்டுமென அவர் என்னை ஏவுவதுண்டு. ஆகையால் ஒருகால் சில சூழ்நிலைகள், "அவர் குறிப்பிடும் சூழ்நிலை இங்கில்லையே! பின்னை ஏன் அவர் அவ்விதம் கூறுகின்றார்?" என்று நீங்கள் கூறலாம். அது வேறெங்காவது உள்ளவர்களுக்காக கூறப்படலாம். நீங்கள் பாருங்கள். எனவே, ஆம், நீங்கள் இதைப் புரிந்துகொள்வீர்கள் என்று நான் நம்புகிறேன். இச்செய்திகள் தனிப்பட்ட எந்த ஒருவருக்கும் விரோதமாக அளிக்கப்படுவதில்லை. பொதுவாக சபைக்காக இது அளிக்கப்படுகின்றது. நாங்கள் எதைக் கூறவேண்டுமென்று கர்த்தர் நடத்துகிறாரோ, அதையே நாங்கள் கூறுகின்றோம்.

15 ஹாட் ஸ்பிரிங்ஸில் நடைபெற்ற பழமையான பெந்தெகொஸ்தே கூட்டம் ஒன்றில், எங்களுக்கு மகிமையான நேரம் உண்டாயிருந்தது. அதில் பங்குகொண்ட உங்களில் சிலர், பெந்தெகொஸ்தேயினர் அநேகர் அக்கூட்டதிற்கு வந்திருந்ததைக் குறித்து…திருப்தியடைந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். அந்த குழுவைக் குறித்து எனக்கு அதிகம் தெரியாது. நான் ஒரு வாரம் அதில் பங்குகொண்டு, இரண்டு அல்லது மூன்று நாட்கள் செய்தியளிக்க வேண்டுமென்றிருந்தேன். ஆனால் நான் ஒரு காரியம் கூற விரும்புகிறேன். அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களிடம் விசுவாசிப்பதற்கான போதிய விசுவாசம் உண்டாயிருந்தது. உங்களில் எவரேனும் அங்கிருந்திருந்தால்…

16 இந்த மூலையில் அமர்ந்திருக்கும் அம்மையார் அங்கு வந்திருந்தார்கள். அவள் யாரென்று எனக்குத் தெரியாது. அதாவது இங்கிருக்கிறார்கள், அவள் அங்கிருந்தாள் என்பதை நான் அறிவேன். அங்கிருந்த இரண்டு சகோதரர்களான சகோதரர் ஜாக்சனும், சகோதரர் பாமரும் (Bro. Palmer) அங்கு வந்திருந்தனர் என்பதை நான் அறிவேன்.

17 விசுவாசம் உள்ளவர்கள் நன்மையைப் பெறுகின்றனர். சுகம் பெறுவதற்காக வரிசையில் அங்கு நின்றவர்களைக் கவனித்தீர்களா? ஒருவராவது தேவனிடம் சுகம் பெறாமல் அவ்விடம் விட்டுச் செல்லவில்லை. புரிகிறதா? பார்த்தீர்களா? எனவே, நீங்கள் விசுவாசமுடையவர்களாயிருக்கும்போது…

18 மற்றொரு காரியம், அவர்கள் உணர்ச்சிவசப்பட்டு, கூச்சலிட்டு, நடனமாடினது உங்களில் சிலருக்குப் புரியாமல் இருந்திருக்கும். பாருங்கள், அவர்கள் அப்படியே…அவர்கள் எந்த மனிதனையும் நோக்கிப் பார்க்கவில்லை. அவர்கள் தேவனுக்கு முன்பாக கூச்சலிட்டனர். புரிகிறதா? அவ்வளவுதான்.

19 நான் எப்போதும் கண்டிருந்த ஸ்திரீகளிலே அங்கிருந்த பெண்கள் கூந்தலை நீளமாக வளர்த்து, சுத்தமாகக் காணப்பட்டனர் என்பதை நான் கூற விரும்புகிறேன், அந்த ஜனங்கள் காடுகளிலிருந்தும், புதர்களிலிருந்தும் வந்திருந்தனர். ஆனால் நவீன நாகரீகம் கொண்ட எவரையும் நான் அங்கு காணவில்லை. நான் எதைக் குறிப்பிடுகிறேன் என்பது உங்களுக்குத் தெரியும், எல்லாவிதமான முக ஒப்பனைகளையும், மற்ற காரியங்களையும் உடையவர்களையேக் கூறுகிறேன். அது எதைக் காட்டுகிறதென்றால்…அவர்கள் போதிக்கிற அனைத்தும் நான் ஏற்றுக்கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் அங்கே நிச்சயமாக இதை ஒத்துக்கொள்ள முடிகிறது. அதாவது அவர்கள் கிறிஸ்தவர்களைப்போல் எனக்குக் காணப்பட்டனர்.

20 நேற்று அல்லது அதற்கு முந்தின நாள் பிற்பகல், *இன்னும் ஒரு முறை கர்த்தாவே* என்னும் ஒரு பொருளின் பேரில் கர்த்தர் என்னை

வழி நடத்தினார். ஒரு நோக்கத்திற்காக அப்படிச் செய்தேன் என்பதை அச்சபையோரில் சிலர் அறிந்து கொள்ளவில்லை, ஏனென்றால் கர்த்தர் அதைச் செய்யும்படி என்னை வழிநடத்தினார். அச்சிறு குழு எங்கோ வழிதவறி சென்றுகொண்டிருக்கின்றது. அதற்காகவே அச்செய்தியையளிக்க கர்த்தர் உதவி செய்தார். எனவே அது அப்படியே அற்புதமாயிருந்தது. நான் நிச்சயமாக…

21 உங்களுக்குத் தெரியும், நீங்கள் ஒரு ஆவிக்குரிய கண்ணைப் பெற்றிருக்கவில்லையென்றால், சம்பவிக்கிற காரியங்களை நீங்கள் புரிந்துகொள்ளுகிறதில்லை. புரிகிறதா? இவைகளை நீங்கள் எதிர்பார்க்கவேண்டும்.

22 நான் உள்ளே நுழைந்தபோது, இந்த சகோதரன் ஹங்ரைன் அவர்கள் பாடுவதை நான் இரண்டாம் முறையாகக் கேட்டேன். நான் அறைக்குள் நடந்து சென்றபோது, *நான் இராஜாவுடன் நடந்து உரையாடுகிறேன்* என்னும் பாடலை அவர் பாடிக் கொண்டிருந்தார். அப்பொழுது நானோ, “இது அழகாயுள்ளதல்லவா!” என்று நினைத்துக் கொண்டேன். எப்படி அந்த ராஜாவோடும் எப்போதும்…பார்த்தீர்களா? ராஜாவுடன் நடந்து உரையாடுவது என்பது எந்நேரமும் அவருடன் கொண்டுள்ள ஐக்கியத்தையேக் குறிக்கின்றது. சபையில் மாத்திரமல்ல, எல்லாவிடங்களிலும் ராஜாவுடன் நடந்து உரையாடுவதாகும்.

23 நாங்கள் அந்த சுவரை அங்கே பார்த்தபோது, ஜார்ஜ் டாட் (George Todd) என்பவர் எனக்காக வர்ணம் தீட்டிய ஓவியம் ஒன்று அங்கு மாட்டப்பட்டிருக்கிறது. ஏன் அவர் அந்த ஓவியத்தை வரைந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவேளை அவர் அதைக் குறித்து யோசிக்காமலிருந்திருக்கலாம், அவர் அதை வர்ணந்தீட்டி வரைந்தார். அங்கு காட்டினுள் ஒரு மலை காணப்படுகின்றது. அதனின்று ஒரு அருவி சலசலத்து கீழே பாய்ந்து வருகின்றது. அருவியின் மறுபக்கத்தில் ஒரு பெண்மானும், அதன் குட்டியும் காதுகளை மேல்தூக்கிய வண்ணம் அருவியை நோக்கிக் கொண்டிருக்கின்றன. திரு.டாட் இங்கு இருக்கிறாரா என்று எனக்குத் தெரியவில்லை. அவரை எனக்குத் தெரியாது. ஆனால் இதை நான் கூறவிரும்புகிறேன். அந்த ஓவியத்தை நான் பார்த்தபோது, கர்த்தர் என்னுடன் பேசினார். அவ்விதம் சம்பவிக்குமென்று, அந்த ஓவியத்தை தீட்டியபோது அவர் அறிந்திருக்கமாட்டார்.

24 ஒரு நபர் அந்த மானைப்போல சத்தமிட்டு கூப்பிட்டு, அதை சுடப்போவதாயிருந்தான் என்று நான் கூறின சிறு சம்பவம் உங்களுக்கு நினைவிருக்கிறதா? பாருங்கள், அந்த பெண்மான் குட்டியுடன் ஜீவத் தண்ணீர்களண்டையில் இருக்கின்றது. பார்த்தீர்களா? அந்த தாய் மானும், அதன் குட்டியும் அங்கிருந்தன என்ற ஒரு அகத்தூண்டுதல். அப்பொழுது நான் “ஆம், மறுகரையில் அங்கே என்றென்றும் பசுமையாயிருக்கும் மரங்களினண்டையில்

அங்கே காத்துக் கொண்டிருக்கின்ற ஒரு தாயையும் மகளையும் உடையவனாக உன்ளேனே” என்று நினைத்தேன்.

25 சகோதரன் ஜார்ஜ் டாட், இந்தக் காலையில் இங்கு இருப்பாரெனில், சகோதரனே, மிக்க நன்றி.

26 இப்பொழுது நான் ஞாயிறு பள்ளி போதனையை ஆரம்பித்திருக்கலாம். நான் வழக்கமாகவே அதனை ஒருவிதமாக நீடித்துவிடுகிறேன்.

27 நேற்று முதல் என் இருதயத்தில் ஒரு காரியம் தொடர்ந்து அசைவாடிக்கொண்டேயிருக்கின்றது. எனக்குத் தெரியவில்லை. இப்பொழுது, நாம்…கர்த்தர்…நாம் பேச வேண்டிய பொருளாயிருக்குமானால். எனக்கும் வயதாகின்றது, இன்னும் எவ்வளவு காலம் நான் இவ்வுலகில் இருக்கவேண்டுமென்று எனக்குத்—எனக்குத் தெரியாது. ஆனால் சபையில் ஒரு பெரிய கேள்வி உள்ளது, அதாவது வித்தியாசமான கருத்து வேற்றுமைக் கொண்டுள்ள மனிதர் உள்ளனர்.

28 “ஆப்பிள்” பழத்தை புசித்தது போன்றவை. நான் அதைக் குறித்த இந்த செய்தியைப் பிரசங்கித்தேன். அவள் ஆப்பிள் பழங்களை புசிக்கவில்லையென்று நான் உறுதியாக நம்புகிறேன். வேத வாக்கியங்களை ஆதாரமாகக்கொண்டு அதை என்னால் நிரூபிக்க முடியும். புரிகிறதா? அநேக குழப்பங்கள் ஏற்பட்டன.

29 நாங்கள் இவ்விடம் விட்டுச் செல்லும் முன்பு…இன்னும் முப்பது நாட்களில் நாங்கள் அரிசோனாவுக்குச் செல்லவேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே கர்த்தருக்கு சித்தமானால் நான் போவதற்கு முன்பு ஒரு வேதவாக்கியத்தை எடுத்துப் பேச விரும்புகிறேன். அதை ஒலிப்பதிவு செய்யாதீர்கள். அப்படி அவர்கள் ஒலிப்பதிவு செய்தால், அந்த ஒலி நாடாக்களை நீங்கள் விற்கவேண்டாம். அந்த செய்தி வெளியே செல்ல அனுமதிக்க வேண்டாம். விவாகமும் விவாகரத்தும் என்பதன் உண்மையான சத்தியத்தை நான் உங்களுக்கு விவரிக்க விரும்புகிறேன். அது ஒரு கேள்வியாய் உள்ளது. இது கடைசி மணி நேரங்களாக இருப்பதால், “தேவரகசியங்கள் அனைத்தும் நிறைவேறி முடிய வேண்டும்.” நேற்று ஏறக்குறைய பகலில் நான், மலைகளின் வழியாக வந்துகொண்டிருக்கும்போது, “அந்த செய்தியை ஒலிப்பதிவு செய்து வைத்து விடு,” என்று பரிசுத்த ஆவியானவர் என்னிடம் கூறினதுபோல தோன்றிற்று.எதற்கென்று எனக்குத் தெரியாது. ஆனால் “விவாகமும் விவாகரத்தும், என்பதைக் குறித்த உண்மையான சத்தியம்.”

30 அவர்களில் சிலர், “ஜனங்கள் விபச்சாரம் செய்ததாக அறிக்கை செய்தால், அவர்கள் விவாகம் செய்துகொள்ளலாம்” என்கின்றனர். வேறு சிலர் “பாருங்கள், ஒருவருக்கொருவர் கொடூரமாக நடந்து கொண்டு, அவர்களிருவரும் ஒன்றாக வாழ்க்கை

நடத்த முடியவில்லையென்றால், அவர்கள் பூமியில் நரகத்தை அனுபவிப்பதைக் காட்டிலும், சமாதானத்துடன் வாழ்வது, அதாவது பிரிந்துவிடுவது நல்லது" என்கின்றனர். இவ்விதம் வித்தியாசமான கேள்விகள் எழுகின்றன. சிலர் அவர்களை சரியான முறையில் விவாகம் செய்து வைக்கின்றனர். மற்றும் சிலர் பரிசுத்த ஜலத்தை அவர்கள் மீது தெளித்து, "அவர்கள் விவாகம் செய்தவர்களாகக் கருதப்படக்கூடாது" என்று கூறி, அவர்களுக்கு ஆசீர்வாதம் மாத்திரம் கொடுத்து, சபையில் மறுபடியும் சேர்த்துக் கொள்கின்றனர். எல்லாவித குழப்பங்களும் காணப்படுகின்றன. ஆனால் இவ்வளவு குழப்பம் இருக்குமென்றால், எங்காவது அதைக் குறித்த உண்மையும் இருக்கவேண்டும்.

31 இதை நான் பயபக்தியுடன் கூறுகின்றேன் என்று நினைக்கிறேன். கர்த்தர் இதைக் குறித்த...உண்மையை எனக்கு வெளிப்படுத்தித் தந்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன். இது சபைகளை அடைந்தால், அது அவர்களைக் கிழித்துவிடும். அது அப்படித்தான் நடக்கும். ஆனால் இது...சரியாகக் கூறினால், சபை போதகர்கள் இச்செய்தியை ஒலிநாடாவில் முதலில் கேட்டுவிட்டு, அதை சபையோருக்கு போட்டுக்காட்டி, பின்பு வேண்டுமானால் சபையோரை வழிநடத்தலாம்; இதைக் குறித்த உண்மையான சத்தியத்தை அறிவிக்கவே இதை ஒலிப்பதிவு செய்ய விரும்புகிறேன். "இந்த ரகசியங்கள் நிறைவு பெற வேண்டும்," முழுமை பெறப் போகிற மணி நேரம் இதுவே என்பதை நான் நம்புகிறேன். *ஏழு சபை காலங்களின்* பேரிலும், *ஏழு முத்திரைகளின்* பேரிலும் நாம் செய்தியளித்தது முதற்கொண்டே, அவை வெளியாகத் தொடங்கிவிட்டன.

32 இப்பொழுது நாம் *ஏழு எக்காளங்கள்*, *ஏழு கலசங்கள்* இவைகளில் அடங்கியுள்ள இரகசியங்களை அறிந்துகொள்ள காத்திருக்கிறோம். வேண்டுமானால் இரண்டு வாரக் கூட்டம் ஒன்றை நாம் ஒழுங்கு செய்து, இவ்விரண்டையும் ஒன்று சேர்த்து செய்தியளிக்கலாம். அது ஒலிப்பதிவு செய்யப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

33 அது மாத்திரமல்ல, *சபை காலங்களின்* செய்தியை புஸ்தக வடிவில் கொண்டு வர முயன்று, நான் இதை இப்பொழுது அதில் உள்ள பிழைகளை திருத்திக்கொண்டிருக்கிறேன். இச்செய்தியை ஏழு புஸ்தகங்களாக, ஏழு ஒலிநாடாக்களாக நம்மால் கூடுமான வரை மலிவான விலையில் தயாரித்தால், எல்லோரும் அவைகளை வாங்கிக்கொள்ள வாய்ப்புண்டாகும். கர்த்தருடைய வருகை தாமதித்து, நான் ஒருக்கால் இவ்வுலகை விட்டுக்கடந்து போக நேர்ந்தால், நான் கர்த்தரின் நாமத்தில் கூறின அனைத்தும் அவ்வாறே நிறைவேறுவதை நீங்கள் காண்பீர்கள். நான் கூறினவை இதுவரை தவறினதில்லை. அதே சமயத்தில் சில சம்பவங்கள் பிற்காலத்தில் நிகழவேண்டியவைகளாக இருக்கின்றன.

34 அதை இப்பொழுதே பிரசங்கிக்க கர்த்தர் அனுமதிப்பாரென்று நான்—நான் நம்புகிறேன். அது பிரசங்கிக்கப்படவிருக்கும் நாளை நாங்கள் ஜனங்களுக்கு அறிவிப்போம், ஏனெனில் அநேகர் வந்து, அந்தக் காரியங்களைக் கேட்க ஆவலுள்ளவர்களாயிருக்கின்றனர். அதை நான்—நான் பாராட்டுகிறேன்.

35 இதை யாருமே நம்பாமல் அல்லது கேட்க விரும்பாதவர்களாய் இருப்பார்களானால், அதைக் குறித்து நான் பிரசங்கிப்பதனால் என்ன பயன்? புரிகிறதா? அப்படியானால் அது தண்ணீர்கள் மேல் அப்பத்தை போடுவது போல் இருக்கும். அது…அதை யாருமே விசுவாசிக்கவில்லையென்றால், அப்பொழுது அது பன்றிகளுக்கு முன்பு முத்தைப் போடுவதற்கு சமானமாயிருக்குமே! ஆனால் ஆயிரக்கணக்கானவர் அதை விசுவாசிக்கின்றனர். ஆனால் அதை விசுவாசிக்கிறவர்கள் இலட்சக்கணக்காய் உள்ளனர். பார்த்தீர்களா? அவர்கள் ஒவ்வொரு வார்த்தையையும் இறுகப் பற்றிக்கொள்கின்றனர். எனவே கர்த்தருடைய மகிமைக்காக இவ்வாராதனைகள் ஒழுங்கு செய்யப்பட்டால், கூடுமானவரை அநேகர் கலந்து கொள்வதையே நாங்கள் விரும்புகின்றோம். அக்கூட்டங்களை ஒழுங்கு செய்ய கர்த்தர் அனுமதிப்பாரென்று நாங்கள் நம்புகிறோம்.

36 நான் அதைச் செய்ய தெய்வீக ஆவியின் ஏவுதலைப் பெறும்வரை நான் அதைச் செய்ய விரும்புகிறதில்லை. ஒவ்வொரு காரியத்திற்கும் தேவன் ஒரு நேரத்தை வைத்திருக்கிறார். புரிகிறதா? அதற்கு முன்பாக நாம் எதையும் செய்துவிடக்கூடாது. நீங்கள் உங்களுடைய கோதுமையை முன்னமே அறுத்தால்…அது முதிர்வடையும் முன்பே அறுவடைக் கருவி மூலம் அவர்கள் அறுவடை செய்தால், கோதுமையில் பெரும்பாலனதை நீங்கள் இழந்துவிடுவீர்கள். புரிகிறதா? எனவே அறுவடைக்கு அது ஆயத்தமாகும்போது தேவன் அரிவாளை நீட்டுவார். அப்பொழுது நாம் அறுவடை செய்ய செல்வோம்.ஆனால் நான்…

37 சில சமயங்களில் இதுபோன்ற தூண்டுதல் எனக்குத் தோன்றும்போது, அதை சற்று நேரத்தில் உதறிவிட வேண்டுமென்று நான் நினைப்பதுண்டு. நேற்று முழுவதும், நேற்று இரவும்கூட, என் சிந்தனையை விட்டு அது அகலவில்லை. சுமார் பன்னிரண்டு மணிக்கு நான் படுக்கைக்குச் சென்றேன். அதற்கு முந்தைய இரவும்கூட, மூன்று மணி நேரம் மாத்திரமே நான் உறங்கினேன். நேற்றிரவு எனக்கு உறக்கமே வரவில்லை. ஏதோ ஒன்று, "*விவாகமும் விவாகரத்தும்* என்பதை ஒலிநாடாவில் பதிவு செய்" என்று சொல்லிக்கொண்டேயிருந்தது.பார்த்தீர்களா? எனவே நான்—நான்…கர்த்தருக்கு சித்தமானால், அது என் இருதயத்திலேயே குடி கொண்டிருந்ததால், அதைக் குறித்து கர்த்தர் அதிகம் வெளிப்படுத்தித் தருவாரானால், பாருங்கள், அப்பொழுது நான்…நான்—நான் அதை ஒலிநாடாவில் பதிவு செய்வேன். பாருங்கள்?

38 ஆனால் அது சபை போதகர்களுக்கு மாத்திரமே என்பது நினைவிருக்கட்டும். வேண்டுமானால் நீங்கள் வந்து செய்தியைக் கேளுங்கள். ஆனால் அந்த ஒலிநாடா...பாருங்கள், ஏனெனில் அது சபையோரை அடைந்தால், ஒருவர் *இந்த* விதமாகவும், ஒருவர் *அந்த* விதமாகவும் அதை வியாக்கியானம் செய்து தங்கள் சொந்த கருத்துக்களை உண்டாக்கிக்கொள்வார்கள். சகோதரராகிய போதகர்கள் அதை தனியாகக் கேட்டு ஆராய்ந்து, பின்பு அதை சபையோருக்கு அறிவிக்கட்டும், ஏனெனில் அவர்கள் தாம் சபைக்குப் பொறுப்பாளிகள்; அவர்கள்தான்.இந்த ஒலிநாடாவை நீதிபதிக்கும், பட்டணத்திலுள்ள பெரியோர்களுக்கு சென்று போட்டுக் காண்பிக்கட்டும். ஆம்.

39 *விவாகமும், விவாகரத்தும்,* இதைக் குறித்து கர்த்தர் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம். ஆனால் ஜனங்கள் நினைப்பதைக் காட்டிலும் இது பரிசுத்தமானது. அது *சர்ப்பத்தின் வித்து* என்னும் சத்தியத்துடன் மிக நன்றாக இணையும். இவ்விரண்டும் ஒன்றாகவே இயங்கி வருகின்றன: அதுதான் அந்த பரமரகசியங்கள். நினைவிருக்கட்டும், "ஏழாம் தூதனுடைய நாட்களில் எல்லா தேவ ரகசியங்களும் நிறைவேற வேண்டும்." இதுவரை அந்த அறியாதிருக்கின்ற காரியங்களை கர்த்தர் வெளிப்படுத்தி முடிப்பார். இப்பொழுது, இதுவரை...

40 இப்பொழுது, நினைவில் கொள்ளுங்கள், நீங்கள் உங்களுடைய கூட்டத்தை ஏழு-முப்பது மணிக்கு ஆரம்பிக்கிறீர்களா? [சகோதரன் நெவில், "ஆம்" என்கிறார்.—ஆசி.] இப்பொழுது சகோதரர் நெவில், இன்றிரவு உங்களுக்கு ஒரு செய்தியிருக்குமானால், அதை பிரசங்கியுங்கள். புரிகிறதா? ["இல்லை ஐயா."] எனக்கு சுமார் ஒரு மணிநேரம் அல்லது நாற்பத்தைந்து நிமிடங்கள் கூட ஆகாது. நான் அதை ஒலிப்பதிவு செய்வேன்.

41 சகோதரன் நெவில் பிரசங்கிப்பதைக் கேட்க எனக்கு மிகவும் ஆவல். அவரை நான் நேசிக்கிறேன். அவன் என் சகோதரன். அவர் மிக அருமையான சொற்பொழிவாளர் என்றே நான்—நான் கருதுகிறேன், அற்புதமான ஊழியக்காரர். நான்...சகோதரன் நெவிலைக் குறித்து ஒரு காரியம் எனக்கு மிகவும் பிடிக்கும். அவர் ஏதாவதொன்றைக் கூறினால், அவர் எதைக் குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறாரோ, அதன்படியே ஜீவிக்கிறார். இப்பொழுது அது—அதுதான் மிகவும் முக்கியமானது.

42 உங்களால் ஒருவருக்கு பிரசங்கிக்க முடிந்ததைக் காட்டிலும், ஒரு பிரசங்கத்தைப் பின்தொடர்ந்து உங்களால் வாழ்ந்துகாட்ட முடியும் என்பதைச் செய்யலாம் என்பதை நீங்கள் அறிவிர்கள். "சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டும் இருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே." இப்பொழுது, நாம், நாம் முன்பு...

43 நாம் வேதாகமத்தின் பக்கங்களைப் புரட்டலாம், ஆனால் இந்த ஞாயிறுபள்ளி போதனையை தேவன்தாம் திறந்து கொடுக்க வேண்டும். எனவே அதை செய்ய அவரிடம் கேட்போமாக.

44 பரலோகப் பிதாவே, விசுவாசத்தின் மூலம் நாங்கள்—நாங்கள் எதிர்காலத்தை நோக்குகிறோம். கர்த்தாவே, உம்முடைய மக்களை ஒன்று சேர்க்கும் ஏதோ ஒன்று பூமியின் மீது வருவதை நான் விசுவாசத்தால் காண்கிறேன். நாங்கள் ஸ்தாபன சபைகள் ஜனங்களை நெருக்கி, ஒன்றுக்கொன்று வித்தியாசபேதங்கள் அதிகமாயிருப்பதைக் காணும்போது, அது ஜனங்களை புறம்பாக்குவதாய் அமைந்துள்ளது; அது எகிப்தில் யோசேப்பை அறியாத பார்வோன் தோன்றினது போலவே உள்ளது.

45 ஜெர்மனியில்…ஹிட்லரும், ருஷியாவில் ஸ்டாலினும் இத்தாலி நாட்டில் முசோலினியும் தோன்றினர். இவர்கள் எல்லோரும் யூதர்களை வெறுத்தனர். ஜனங்களிடைய யோசேப்புகள் எழும்ப, அவர்கள் தங்களுடைய சொந்த தேசத்திற்கு திரும்ப வேண்டியதாயிருந்தது. தேவனே, நீர் கையாளும் முறைகள் எங்களுக்குப் புரிவது கிடையாது. நீர்தான் யூதர்களின் மேல் அழுத்தத்தைக் கொண்டு வந்தீர். யூதர்களுக்கு ஜெர்மனியில் தங்குவதற்கு வீடுகளில்லாமற்போயின. அவர்களிடமிருந்து எல்லாம் பறிக்கப்பட்டது. அவ்வாறே இத்தாலியிலும், ருஷியாவிலும் அவர்கள் போவதற்கு இடமில்லை. வார்த்தை நிறைவேறவேண்டும் என்பதற்காகவே அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு விரட்டியடிக்கப்பட்டனர்.

46 ஓ, ஜனங்கள் துன்புறுவதைக் காணும்போது, தேவனுடைய அன்புள்ள கரமானது சில நேரங்களில் எவ்வளவு கொடூரமாகத் தென்படுகின்றன. ஆயினும், தமது சிறு பிள்ளைகளை வழி நடத்தும் யேகோவாவின் மிருதுவான கரங்களாகவே அவை இப்பொழுதும் அமைந்துள்ளன. கர்த்தாவே, நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

47 தேவனே, ஸ்தாபனங்கள் இப்பொழுது விசுவாசிகளை வற்புறுத்தி, அவர்களை தள்ளிவைத்து, "அவர்களுடைய பெயர்கள் தங்கள் புஸ்தகங்களில் எழுதப்பட வேண்டுமென்றும், இல்லையேல் அவர்கள் இழக்கப்படுவார்கள் என்றும் கூறி, மற்ற குழுவுடன் எவ்வித தொடர்பும் கொள்ளக்கூடாது" என்று கூறுகிற நாளை நான் காணும்போது, யோகோவாவின் மென்மையான கரமானது அவர்களை ஜீவ விருட்சத்திற்கு வழி நடத்துகிறது. தேவனே, அவர்கள் ஒவ்வொருவரும், அவர்கள் நிச்சயமாக ஜீவவிருட்சத்திற்கு வழிநடத்தப்படுவார்கள் என்று எனக்குத் தெரியும், ஏனெனில் அது உமது வார்த்தை, அது ஒருபோதும் தவறிப்போக முடியாது. நாங்கள் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ளவும், தேவனுடைய கரத்தைக் கண்டு, இப்பொழுது நாங்கள் நடந்துகொண்டிருக்கும் நிழல்களுக்கு அப்பாலுள்ள வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை

எங்கள் விசுவாசக் கண்களால் காண நாங்கள் ஜீவ விருட்சத்தண்டை வழிநடத்தப்படுவோமாக.

48 உம்முடைய வார்த்தையை ஆசீர்வதியும், இந்தக் காலையில் நான் இங்கே இந்த சில வேதவாக்கியங்களையும், குறிப்புகளையும் எழுதி வைத்திருக்கிறேன். நான் என்னையும், நாவையும், சிந்தனையையும், எண்ணத்தையும் விருத்தசேதனம் செய்ய அர்பணிக்கையில், பரிசுத்த ஆவியானவர் தாமே இறங்கி வருவாராக. சபையாகிய நாங்கள் எல்லோருமாக ஒன்றுசேர்ந்து எங்களுடைய புரிந்து கொள்ளும் செவிகளையும், எங்களுடைய இருதயங்களையும் அர்பணிக்கும்போது, உம்முடைய வார்த்தையின் மூலமாக எங்களிடத்தில் பேசும், ஏனென்றால் உமது வசனமே சத்தியம். நாங்கள் இதை இயேசு கிறிஸ்துவாகிய வார்த்தையின் நாமத்தில் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

49 இப்பொழுது உங்களுடைய வேதாகமங்களை யாத்திராகம புத்தகத்திற்கு திரும்புங்கள். இப்பொழுது நான் யாத்திராகமத்திலிருந்து ஒரு வேத பாகத்தைப் படிக்க விரும்புகிறேன், 3-ம் அதிகாரம், 1 முதல் 12 வரை, நாங்கள் படிக்கையில் கூர்ந்து கவனியுங்கள். யாத்திராகமம் 3-ம் அதிகாரம் 1 முதல் 12 வரை.

> *மோசே மீதியான் தேசத்து ஆசாரியனாயிருந்த தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்துவந்தான். அவன் ஆடுகளை வனாந்திரத்தின் பின்புறத்திலே ஓட்டி, தேவபர்வதமாகிய ஓரேப்மட்டும் வந்தான்.*
>
> *அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜுவாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான்; முட்செடி அக்கினியால் ஜுவாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது.*
>
> *அப்பொழுது மோசே: இந்த முட்செடி வெந்து போகாதிருக்கிறது என்ன, நான் கிட்டப்போய் இந்த அற்புதகாட்சியைப் பார்ப்பேன் என்றான்.*
>
> *அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார்...*

50 அதை முக்கியப்படுத்தி கூற விரும்புகிறேன்!

> *அவன் பார்க்கும்படி கிட்ட வருகிறதைக் கர்த்தர் கண்டார். முட்செடியின் நடுவிலிருந்து தேவன் அவனை நோக்கி: மோசே, மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றான்.*
>
> *அப்பொழுது அவர்: இங்கே கிட்டிச்சேராயாக; உன் கால்களில் இருக்கிற பாதரட்சையைக் கழற்றிப்போடு; நீ நிற்கிற இடம் பரிசுத்த பூமி என்றார்.*

*பின்னும் அவர்: நான் ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனும் யாக்கோபின் தேவனுமாகிய உன் பிதாக்களுடைய தேவனாயிருக்கிறேன் என்றார். மோசே தேவனை நோக்கிப்பார்க்கப் பயந்ததினால், தன் முகத்தை மூடிக்கொண்டான்.*

*அப்பொழுது கர்த்தர்: எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன், அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.*

*அவர்களை எகிப்தியனின் கைகளுக்கு விடுதலையாக்கவும், அவர்களை அந்தத் தேசத்திலிருந்து நீக்கி, கானானியரும் ஏத்தியரும் எமோரியரும், பெரிசியரும் ஏவியரும் எபூசியரும் இருக்கிற இடமாகிய பாலும் தேனும் ஓடுகிற நலமும் விசாலமுமான தேசத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கவும் இறங்கினேன்.*

*இப்பொழுதும் இஸ்ரவேல் புத்திரரின் கூக்குரல் என் சந்நிதியில் வந்து எட்டினது; எகிப்தியர் அவர்களை ஒடுக்கியிருக்கிற ஒடுக்குதலையும் கண்டேன்.*

*...உன்னைப் பார்வோனிடத்திற்கு அனுப்புவேன் வா என்றார்.*

51 நீங்கள் கவனித்தீர்களா? “நான் இறங்கி வந்திருக்கிறேன்.” ஆனால் “நான் உன்னை அனுப்புகிறேன்.” தேவன் ஒரு மனிதனின் ரூபத்தில் செல்லுதல். “போ.” 10-வது வசனத்தை நான் மீண்டும் வாசிக்கட்டும்.

*நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன் வா என்றார்.*

*அப்பொழுது மோசே தேவனை நோக்கி: பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம் என்றான்.*

*அதற்கு அவர்: நான் உன்னோடே இருப்பேன்; நீ ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்துவந்தபின்,...*

52 மன்னிக்கவும்.

*நீங்கள் இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்வீர்கள்; நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றார்.*

53 இதற்குமுன்பு இதை கவனித்ததில்லை, ஆனால் இன்று காலை பரிசுத்த ஆவியானவர் அதன் அர்த்தத்தை உணர்த்திக்

காண்பித்தபோது, நான் அதை நன்கு புரிந்து கொண்டேன். தேவன் அவருடைய தாசனை, அவன் எங்கிருந்து ஓடிவந்தானோ, அதே இடத்திற்கு அவனை மறுபடியும் அனுப்புகிறார். ஒரு மலையை அவனுக்கு அடையாளமாகத் தருகிறார். இதுவரை இதை நான் சரிவர கவனிக்கவில்லை. “இது உனக்கு ஒரு நித்திய அடையாளமாயிருக்கும்.” பார்த்தீர்களா?

54 இன்று காலை நாம் தேவனுடைய ஜனங்களின் இரண்டாம் யாத்திரை (Exodus) அல்லது, தேவனுடைய ஜனங்கள் வெளியே அழைக்கப்படுதல் என்னும் பொருளின் பேரில் பேசப் போகின்றோம். *யாத்திரை* என்னும் பதத்திற்கு “வெளியே கொண்டுவரப்படுதல், வெளியே அழைக்கப்படுதல், வெளியே எடுக்கப்படுதல்” என்னும் அர்த்தமுண்டு. நான் தேவனுடைய ஜனங்களின் இரண்டாம் யாத்திரை என்பதை ஒரு பொருளாக உபயோகித்துப் பேச விரும்புகிறேன். [சகோதரன் பிரான்ஹாம் *மூன்றாம் யாத்திரை* என்று மாலை ஆராதனையில் இதற்கு தலைப்பிடுகிறார்.—ஆசி.]

55 உண்மையாகவே அவர்களுக்கு அநேகமுறை யாத்திரைகள் உண்டாயிருந்தன. ஆனால் தேவன், அவர்கள் தங்கியிருந்த இடத்திலிருந்து அவர்களைப் பிரித்தெடுத்து, அவர்களை ஒரு யாத்திரைக்கு அழைத்ததன் பேரில் இப்பொழுது நான் பேசவிருக்கிறேன். தேவன் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, அவர்களுக்கு அளித்திருந்த தம்முடைய தெய்வீக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையை நிறைவேற்ற அங்கே ஆயத்தமாகின்றார். அவர் வாக்குத்தத்தம் அளித்த பின்பு எத்தனையோ நூற்றாண்டுகள் கழிந்தன. ஆயினும் தேவன் தமது வாக்குத்தத்தை ஒருபோதும் மறப்பதில்லை. ஏற்ற காலத்தில், ஏற்ற நேரத்தில், தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை எப்பொழுதுமே நிறைவேற்றுகிறார்.

56 எனவே தேவன் இந்த வேதத்தில் என்ன வாக்களித்துள்ளாரோ, அதை அவர் நிறைவேற்றப்போகிறார் என்று நீங்கள் நிச்சயம் நம்பலாம். “தீர்க்கதரிசி ஒருக்கால் தவறாக கூறியிருக்கலாம்” என்றோ அல்லது “இது இந்த நாளில் நிறைவேறாது” என்றோ எந்தக் காரியத்தையும் நீங்கள் நினைக்க வேண்டிய அவசியமில்லை. அது இப்பொழுதுள்ளதைக் காட்டிலும், அப்பொழுது அது கிட்டத்தட்ட கூடாதக் காரியம் போன்று அதிகமாகத் தென்பட்டது. ஆயினும் தேவன் அதை எப்படியும் செய்தார், ஏனென்றால் தேவன் அதைச் செய்வதாக வாக்களித்திருந்தார்.

57 அவர் எவ்வளவு எளிதாக அதை செய்கிறார் என்பதைக் கவனியுங்கள் “நான் இறங்கி வந்தேன்; ஜனங்களின் கூக்குரலை நான் கேட்டேன்; எனது வாக்கை நான் நினைவு கூர்ந்தேன். அதை நிறைவேற்றவே நான் இறங்கி வந்திருக்கிறேன். நான் உன்னை அனுப்புகிறேன். நீ அதை செய்வாய். நான் உன்னோடு கூட

இருப்பேன். நிச்சயமாக, நான் உன்னுடன்கூட இருப்பேன் என்றும், ஒருபோதும்—ஒருபோதும் தவறிப்போகாத என் பிரசன்னம் நீ எங்கு சென்றாலும் உன்னுடன் கூட இருக்கும். பயப்படாதே." பார்த்தீர்களா? "அவர்களை விடுவிக்கவே நான் இறங்கி வந்தேன்." ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்கள் அதைப் புரிந்துகொள்வார்கள் என்று நான் நிச்சயம் நம்புகிறேன். புரிகிறதா? புரிகிறதா? "என் ஜனங்களை யாத்திரைக்கு கொண்டுவர நான்—நான்—நான் உன்னை அனுப்புகிறேன்; அவர்களை வெளியேக் கொண்டு வா, நான் உன்னோடே கூட இருப்பேன்"

58 இப்பொழுது, எப்படி—எப்படி நாம் இளைப்பாற முடியும், எப்படி விசுவாசம் அங்கே அதைப் பற்றிக் கொள்ள முடியும். புரிகிறதா? தேவன் அதைச் செய்யப் போகிறார். அவர் அதை வாக்களித்தார். எப்படியிருந்தாலும் கவலைப்பட வேண்டியதில்லை, சூழ்நிலை என்னவாயிருந்தபோதிலும் மற்றவர் என்ன கூறினாலும் தேவன் அதைச் செய்யப்போகிறார், ஏனெனில் அவர் அவ்விதம் வாக்களித்துள்ளார். அவர் அதை மிக எளிய முறையில் செய்வதால், கல்வியறிவு கொண்டவர்களின் சிந்தைக்கு அது—அது, "அது எப்படி முடியும்?" என்று புரிந்துகொள்ள இயலாத ஒரு செயலாக அமைந்துள்ளது.

59 இப்பொழுது ஒரு நல்ல, உறுதியான சிந்தையோடு அருமையான கல்வி கற்கும் மனிதன், அந்த மனிதன் அதைப் புரிந்துகொள்ளமாட்டான் என்று நான் பொருட்படுத்திக் கூறவில்லை. அது சரியாயிருக்கலாம். அவன் பெற்றுள்ள ஞானத்தால் இதை யோசிக்காமல், தேவன் பேரில் விசுவாசிக்கும் வரையில் அது அற்புதமானது. தேவன் கூறியிருக்கிறதைக் கேட்டு அதை விசுவாசிக்கும் அளவிற்கு அவன் தன்மை எளிமையாக மாறுமென்றால், அப்பொழுது அவன் கல்வியறிவு அவனுக்கு பயனளிக்கும்.

60 கவனியுங்கள், ஆனால் "இது முடியவே முடியாது" என்று ஒருவன் தன் கல்வி ஞானத்தை உபயோகித்து யோசித்தால், அவன் தன் சுய புத்தியைக் கொண்டு அது என்னவென்று செவிகொடுக்க தொடர்ந்து முயற்சிக்கும்போது, அது அவனை தேவனிடத்திலிருந்து துரத்திவிடுகிறது. புரிகின்றதா? வேதம் கூறுகிற ஒரு குறிப்பிட்டக் காரியத்தை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையென்றால், அதற்கு "ஆமென்," என்று அப்படியே கூறிவிடுங்கள். அதை அப்படியே அந்தவிதமாகக் கூறி விட்டுவிடுங்கள்.

61 இப்பொழுது, இந்த வேதவசனங்களை திருப்பிப் பார்த்துக் கொண்டிருப்பதற்கு பதிலாக, இந்த ஞாயிறு பள்ளிப் பாடத்தில் நீங்கள் குறித்துக் கொள்ளலாம். ஆனால் நான், ஒருகால் நீங்கள் அதை பார்க்கக் கூடுமென்றால் நலமாயிருக்கும். ஆனால் முதலாவது இங்கே அநேக குறிப்புகளை நான் வைத்திருக்கிறேன். நாம்…

62 இந்த யாத்திரையின் அர்த்தம் என்னவென்று நாம் அறிந்து கொள்ளும் முன்பு…அன்று நிகழ்ந்த யாத்திரையுடன் இன்றைய யாத்திரையை நான் ஒப்பிட விரும்புகிறேன். இவ்விரண்டும் இணையாகச் செல்லவில்லையா என்பதைக் கவனியுங்கள். அவைகளில் ஒன்று உலகப் பிரகாரமான யாத்திரை; அவர் உலகப்பிரகாரமான யாத்திரையின் போது செய்தவைகளை முன்னடையாளமாக வைத்து, அதையே ஆவிக்குரிய, ஒரு ஆவிக்குரிய யாத்திரையிலும் செய்கிறார்.

63 தேவனுடைய வார்த்தை நிறைவேறுதலைக் காணும்போது, அது எவ்வளவு அற்புதமாயுள்ளது! அது தேவ ஆவியால் அருளப்படவில்லையென்று எப்படி எவரேனும் கூறமுடியும்? இது ஏறக்குறைய இரண்டாயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு நிகழ்ந்த ஒரு சம்பவமாகும், உங்களுக்குத் தெரியும். அவர் வாக்குத்தத்தம் செய்து, அதை நிறைவேற்றி, நமக்கு அதை திருஷ்டாந்தமாக வைத்திருக்கிறார்! உண்மையான சம்பவங்கள் நிகழுமென்பதற்கு அத்தாட்சியாக, எப்படியாய் அவர்—அவர்—அவர் நிழல்களை வைத்திருக்கிறார்! கர்த்தருக்குச் சித்தமானால் சந்திரனுக்கும் சூரியனுக்கும் இடையேயுள்ள காரியங்களின்பேரில் இன்றிரவு நான் பேசப் போகிறேன்.

64 முதலாவதாக, இஸ்ரவேல் புத்திரர் எதற்காக எகிப்திலிருந்தனர் என்று ஆதியாகமத்தைப் படித்து நாம் அறிந்துகொள்ள வேண்டும். தேவனுடைய ஜனங்கள் அவர்களுடைய சொந்த நாட்டினின்று ஏன் வெளியே இருக்க வேண்டும்? ஆனால் மொத்தத்தில், ஆபிரகாமுக்கும், ஈசாக்குக்கும், யாக்கோபுக்கும் கர்த்தர் பாலஸ்தீனாவை ஆணையிட்டுக் கொடுத்து, "இது தான் அது" என்று கூறினாரல்லவா? ஓ, அப்படியிருக்க, தேவன் அவர்களுக்கு அளித்திருந்த ஸ்தலத்தில் அந்த ஜனங்கள் ஏன் இருக்கவில்லை?

65 அதே கேள்வி இன்றைய சூழ்நிலைக்கும் கூடப் பொருந்தும். தேவன் நமக்கு ஒரு பெந்தெகொஸ்தேவை அருளினார். அப்போஸ்தலருடைய நடபடிகளின் புஸ்தகத்தை அவர் நமக்குத் தந்தார். நம்மை வழிநடத்தவும், நமக்கு வழிகாட்டவும் பரிசுத்த ஆவியையும் அவர் நமக்குத் தந்தருளினார். அவர் நமக்கு ஒரு ஸ்தலத்தையும் தந்தார். அப்படியிருக்க அதை விட்டு நாம் ஏன் வெளியே இருக்கிறோம்? சபை ஏன் அதைவிட்டு வெளியே இருக்கின்றது? இன்றுள்ள மகத்தான கிறிஸ்தவ சபை ஏன் அப்போஸ்தலருடைய நடபடிகளில் கூறியுள்ளதுபோல் மீண்டும் வாழ்ந்து, அதே கிரியைகளை இன்று செய்ய முடியவில்லை? அதற்கு ஏதாவதொரு காரணம் இருக்க வேண்டும்.

66 நாம் இப்பொழுது பிளவுப்பட்டு, பயங்கரமான நிலையில் உள்ளோம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். கிறிஸ்தவ மார்க்கம் இன்றுள்ள பயங்கரமான நிலையில் வேறு எப்பொழுதும் இருந்தது கிடையாது. சபையின் மீது பயங்கரமான நியாயத்தீர்ப்பு

விழப்போகும் விளம்பில் அல்லது ஓரத்தில் உள்ள…தருணத்தில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இது நிகழும் முன்பு, அன்று செய்தது போலவே இன்றும் தேவன் ஜனங்களை யாத்திரைக்கு அழைத்துக் கொண்டிருக்கிறார். எமோரியருடைய பாவங்கள் இப்பொழுது குவிந்துள்ளன. எனவே அவர்—அவர் ஒரு—ஒரு ஆவிக்குரிய யாத்திரைக்கு இப்பொழுது அழைத்துக்கொண்டிருக்கிறார். இப்பொழுது மறுபடியும் நாம் மாதிரியாயுள்ள இஸ்ரவேலரின் யாத்திரைக்குச் சென்று, அதை இதனுடன் ஒப்பிட்டு பார்ப்போம்.

67 ஒரு சகோதரன் மேல் பொறாமை கொண்ட விளைவால்தான் அவர்கள் எகிப்துக்குச் செல்ல நேர்ந்தது. அதன் காரணமாகவே இஸ்ரவேலர் தங்கள் நாட்டை விட்டு வெளியேறி எகிப்தில் தங்கியிருந்தனர். தேவனுடைய வாக்குத்தத்தங்கள், அவர்கள் தங்கள் தேசத்தில் இருக்கும்பொழுது மாத்திரமே உரியதாகும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

68 சற்று முன்பு நாம் செய்த ஜெபத்தில் கூறினது என்னவென்று உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? கர்த்தர் ஏன் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தவேண்டும்? தம்முடைய ஜனங்களை ஆசீர்வதிப்பதற்கென, அவர்களை மறுபடியுமாக வாக்களிக்கப்பட்ட தேசத்திற்குக் கொண்டு சென்று, அவர்களுக்கு மேசியாவை அளிக்கவே அவர் இவ்வாறு செய்தார்.

69 ஹிட்லர் பாதியூதனாயிருக்க, அவனுடைய இருதயத்தை அவர் ஏன் யூதர்களுக்கு விரோதமாக கடினப்படுத்த வேண்டும்? அவ்வாறே, ஸ்டாலின், முசோலினி போன்றவர்களின் இருதயத்தை அவர் கடினப்படுத்த வேண்டியதன் அவசியமென்ன? பார்த்தீர்களா? ஜனங்கள் ஒரு தேசமாக ஆகவேண்டுமென்னும் ஊக்கம் பெற்றிராமல் இருப்பார்களாயின், அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டின் சட்டதிட்டங்களை அவர் அனேக சமயங்களில் கடுமையாக்கி, அதன் மூலம் தேவன் அவருடைய வாக்குத்தத்தங்களை நிறைவேற்றியுள்ளார். எனவே, யூதர்கள் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு விரட்டியடிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் இந்த சர்வாதிகாரிகளின் இருதயங்களைக் கடினப்படுத்தினார்.அது அந்தவிதமாக இருக்க வேண்டியதாயிருந்தது.

70 இப்பொழுது யோசேப்பு சென்றதை…நாம் அறிந்துள்ளோம், ஆதியாகமத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ள யோசேப்பின் சம்பவம் நம்மெல்லோருக்கும் தெரியும். நீங்கள் அதை பின்னர் படித்துக் கொள்ளலாம். ஏனெனில் இந்த நீண்ட ஞாயிறுபள்ளி போதனையை சற்று தாமதித்து தொடங்கினதால், அதிக சமயமில்லை, எனவே நான் துரிதமாக முடிக்க வேண்டும்.

71 இப்பொழுது கவனியுங்கள், சமயமுள்ளபோது யோசேப்பின் வரலாற்றைப் படியுங்கள். அவன் கடைசி சகோதரனுக்கு

முந்தினவனாகப் பிறந்தான். ஆவிக்குரிய சிந்தையுள்ளோர் இதை உடனே புரிந்துகொள்வார்கள். அவன் கடைசி மகனல்ல. பென்யமீன் தான் எல்லாரிலும் இளையவன். யோசேப்பு புறம்பாக்கப்பட்டபின்பு என்ன நேர்ந்ததென்று கவனியுங்கள். யோசேப்பும், பென்யமீனும் ஒரே தாயின் வயிற்றில் பிறந்தவர்கள்; எனவே அவர்களிருவரும் தான் உண்மையில் சகோதரர்கள். யோசேப்பை சந்திக்கும் வரை பென்யமீனுக்கு எவ்வித அங்கீகாரச் சலுகையும் அளிக்கப்படவில்லை. அதன்பின்பு, யோசேப்பு மற்றெல்லா சகோதரரைவிட இரட்டிப்பான பங்கை பென்யமீனுக்கு அளித்தான்.சரி. இப்பொழுது கவனியுங்கள், நாம் அங்கு கண்டறிவது, அவர்கள் இருந்த…

72 யோசேப்பு ஆவிக்குரியவன் என்னும் காரணத்தால், தன் சகோதரரிடமிருந்து புறம்பாக்கப்பட்டான். சகோதரர் அனைவரிலும் அவன் மிகுந்த எளிமையானவனாயிருந்தபோதிலும், அவனே அவர்கள் எல்லோரைக் காட்டிலும் மகத்தான மனிதனாயிருந்தான். "அவனுடைய சகோதரர் அவனை முகாந்தரமின்றி பகைத்தனர்." அவர்கள் அவனைப் பகைத்திருக்கக்கூடாது. மாறாக அவர்கள் அவனுக்கு மரியாதை செலுத்தியிருக்க வேண்டும். அவர்கள் ஏன் அவனைப் பகைத்தனர்? அவன் சகோதரனாக இருந்த காரணத்தினாலா? சரியான காரணம் அது அல்ல. தேவன் மற்றவர்களைக் காட்டிலும் அவனுடன் அதிகமாக ஈடுபட்டிருந்த காரணத்தால்தான் அவர்கள் அவனைப் பகைத்தனர். பாருங்கள்? ஒரு—ஒரு—ஒரு ஆவிக்குரிய புரிந்துகொள்ளும் தன்மையை கர்த்தர் அவனுக்கு அருளினார். அவன் சொப்பனங்களுக்கு பிழையின்றி அர்த்தம் உரைத்தான். அவ்வாறே வரப்போகும் காரியங்களையும் அவன் எவ்வித பிழையுமின்றி முன்னதாகவே அறிவித்தான். அவைகள் அவ்விதமே நிகழ்ந்தன. அவனால்—அவனால் அதை அப்படியே எடுத்துரைக்காமல் இருக்க முடியவில்லை.

73 அவனுடைய கதிருக்கு முன்பாக மற்ற கதிர்கள் வணங்குவதாக அவன் சொப்பனம் கண்டான். இதனால் அவன் சகோதரருக்கு அவன் மேல் கோபம் மூண்டது. "பரிசுத்த உருளையே என்று ஒருக்கால் அப்பொழுது அவனை அவர்கள் அழைத்திருக்கலாம் என்று நான் யூகிக்கிறேன்," வேறு வார்த்தைகளில் கூறினால், "ஒரு நாளில் நாங்கள் உன்னை வணங்கவேண்டுமா என்ன?" என்று அவர்கள் கோபத்துடன் கேட்டனர்.ஆனால் அது போன்றே அது சம்பவித்தது. பார்த்தீர்களா? ஒன்றுமில்லாத ஒரு சிறுவனை மகத்துவம் வாய்ந்த அவர்கள் எங்ஙனம் வணங்க முடியும்? அவர்களோ அவனை அவ்வாறே வணங்கி, இரக்கத்துக்காக மன்றாடினர். ஆனால் நீங்கள் பாருங்கள், அவன் சொப்பனம் கண்ட சமயத்தில் அதிகாரத்துக்கு வரவில்லை. அப்பொழுது அவன் சிறுவனாக மாத்திரமே இருந்தான்.

74 இப்படிப்பட்ட ஒரு சொப்பனம் கண்ட காரணத்தால், ஸ்தாபனங்களின் சகோதரரிடமிருந்து அவன் அகற்றப்பட்டு,

வெளியே செல்ல நேர்ந்தது. புரிகிறதா? அவனுடைய சகோதரரோ தங்கள் நாட்டிலேயே வாழ்ந்தனர். அதன் பின்பு ஒரு முக்கியமான சம்பவம் நிகழ்ந்தது. இஸ்ரவேலர் தங்கள் சொந்த நாட்டில் தங்கும் வரைக்கும்...தேவனுடைய ஆசீர்வாதங்களுக்கு உரியவர்கள் என்பதை நாமறிவோம். அவ்விதம் அவர்களுடைய நாட்டிலேயே தங்குவது நல்லதுதான். அந்த நிலையிலிருப்பதே சரியானது. ஆனால் அவர்கள் ஆவியானவரைப் புறம்பே தள்ளிவிட்டனர்.

75 இன்றைய அடிப்படைவாதிகளாயுள்ளவர்களும் கூட தங்களிடமுள்ள கல்வியறிவினால், வேதத்திலுள்ளவைகளை அறியமுற்பட்டு, அவர்களுடைய நிலையை அறிந்துள்ளனர். ஆயினும் அவர்கள் மத்தியில் ஆவியானவர் இல்லை. அவர்கள் யோசேப்பைப் புறக்கணித்துவிட்டுப், புறம்பாக்கினர். இந்த “பரிசுத்த உருளுபவரின் குழு, அது ஒரு...இதனோடு நாங்கள் எதையும் செய்யவிரும்பவில்லை” என்று கூறி எவ்வித தொடர்பும் கொள்ள அவர்கள் விரும்புவதில்லை. அவர்கள் அவனை விலக்கிவிட்டு, உலகிற்கு விற்றுபோட்டனர். அவனுடைய ஐக்கியத்தை விட்டு அவர்கள் பிரிந்தனர்.

76 அவர்கள் அவ்வாறு செய்த காரணத்தால், பின்னொரு காலத்தில், தங்கள் இடத்தைவிட்டு அவர்கள் எகிப்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

77 இது பொறாமை கொண்ட இச்சகோதரரின் வரலாறு நிச்சயமாகவே ஆவிக்குரிய விதத்தில் இன்றைய காலத்திற்கு ஒப்புவமையாயுள்ளது. அது சுத்தப் பொறாமை, சுத்தமல்ல என்பதைக் குறித்து நாம்—நாம் யாவரும் அறிந்துள்ளோம். அது பண்டைய, அசுத்தமான, அருவருப்பான பொறாமையாயுள்ளது. புரிகிறதா? பொறாமையில் சுத்தமே கிடையாது. புரிகிறதா? அது அசுத்தமான பொறாமையேயன்றி வேறல்ல. அவர்கள் வேதத்தையும், வேதத்தை எழுதிய தேவனின் தன்மையையும் அறிந்த பின்பும், அதே தேவன் தம்மை இன்று அடையாளங்களினாலும், அற்புதங்களாலும் நிரூபிக்கிறார் என்பதை அவர்கள் காரணமின்றி நிராகரித்தால், அது சுத்தம்... பாருங்கள், சுத்தமல்ல. நான் கூறினதுபோல அது அசுத்தமான வெறும் பொறாமையே. தேவன் பிணியாளிகளை சுகப்படுத்தி, மரித்தோரை உயிரோடெழுப்புவதை அவர்கள் காண்கின்றனர். அப்போஸ்தலர்களின் காலத்திலிருந்த அதே தேவன்தானே! நமது ஆவிக்குரிய பயணத்திற்கென அவர்கள் எழுதிய சுவிசேஷம் இன்று நம்மிடையே உள்ளது, அதே தேவன் அன்று புரிந்த அனேக செயல்களை இன்றும் செய்கிறார். எனவே அவர்கள் ஒன்றுமே செய்யாமல் பொறாமையில் புறம்பே தள்ளிவிட்டு, “எங்கள் ஜனங்கள் மத்தியில் இவைகளை அனுமதிக்கமாட்டோம்” என்கின்றனர். புரிகிறதா? அவர்களைத் துரத்திவிடுங்கள்!

78 யோசேப்பின் சகோதரர், அதைப்போன்ற ஒரு மனிதனால், அவனால் எந்த உபயோகமுமில்லை, எனவே “நாம் ஏன் அவனைப் புறம்பாக்கிவிடக் கூடாது?” எனக் கருதினர்.

79 அதுதான், இன்றும் அதுவே சம்பவித்துள்ளது. “நமது ஸ்தாபன சபைகள் கல்வியறிவு பெற்ற, சிறந்த உடையணிந்தவர்களைக் கொண்ட கூட்டத்தாரைக் கொண்ட பெரிய ஸ்தாபனங்களாக விளங்கி, புத்திகூர்மை கொண்ட போதகர்கள் நமக்கு உள்ளனர் என்றும், முன்பு இருந்த விதத்தில் பரிசுத்த ஆவியை பெற்றிருப்பதில் எவ்வித உபயோகமுமில்லை” என்று அவர்கள் கருதுகின்றனர். அதாவது, அவர்கள் அதில் நிறைந்துள்ளனர். வேறு வார்த்தைகளில் கூறினால், வார்த்தைகளைவிட கிரியைகள் அதிகமாய் பேசுகின்றன; அதாவது அவர்களுடைய கருத்தரங்குகளில், அவர்களுடைய... அப்படியே ஆலோசித்து, தங்கள் சொந்த அறிவுபூர்வமான மூளையைக் கொண்டு சபையை பரிசுத்த ஆவியானவர் ஒழுங்கு செய்வதைவிட மேலாக நாம் ஒழுங்கில் வைத்துவிடலாம். எனவே அவர்களுக்கு அது இனிமேல் தேவைப்படுகிறதில்லை. “அது இன்றைக்கு எங்களுக்குத் தேவைப்படாத ஒரு காரியமாய் உள்ளது. அது, அந்த நாட்கள் கடந்துவிட்டன” என்று கருதுகின்றனர். இப்பொழுது, அது அப்படித்தானிருக்கவில்லையா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.] “வியாதியஸ்தரை சுகப்படுத்த நமக்கு பரிசுத்த ஆவி தேவையில்லை. நாம் மருத்துவர்களை உடையவர்களாயிருக்கிறோம். அன்னிய பாஷைகள் பேச பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தேவையில்லை. நாங்கள் புத்திசாலியான ஜனங்களாயிருக்கிறோம்” என்று அவர்கள் நினைக்கின்றனர். அவ்விதம் நீங்கள் செய்யும்போது, உங்கள் ஜீவ நாடியை நீங்கள் உங்கள் அமைப்பிலிருந்து எடுத்துப்போடுகின்றீர்கள்.

80 இயேசு அவருடைய காலத்தில் வாழ்ந்த யூதர்களிடம், “‘நீங்கள் ஆகாதென்று தள்ளின கல்லே. அதன் மேல் கட்டிடம் கட்டுவதற்கென, மூலைக்கு தலைக்கல்லாயிற்று’ என்று நீங்கள் வாசித்திருக்கவில்லையா?” என்று கேட்டார்.

81 இப்பொழுது, நான் என்ன பொருட்படுத்திக் கூறுகிறேனென்று புரிகின்றதா? உங்களால் அதை நிச்சயமாக, உங்களால் புரிந்து கொள்ளமுடியும் என்று நான் நம்புகிறேன். இப்பொழுதும் அதன் காரணம் அதுவாகவே உள்ளது, அதாவது அதற்குரிய ஒரு தேவை அவர்களுக்கு ஒருபோதும் தேவையில்லை என்று அவர்கள் எண்ணினர். “நமக்கு அன்னியபாஷையில் பேசுபவர்கள் அவசியமில்லை. அன்னிய பாஷையின் அர்த்தத்தை வியாக்கியானம் செய்தலும் எங்களுக்குத் தேவையில்லை. பரிசுத்த ஆவியானவரின் மூலம் எங்கள் சபைகளை சீர்படுத்த, பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசிகள் போன்ற தீர்க்கதரிசிகள் எங்களுக்கு அவசியமில்லை. எங்களுக்கு அது புரிகின்றது” என்று அவர்கள் கூறுகின்றனர். பார்த்தீர்களா? மனிதனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு

முறைமையை அவர்கள் பரிசுத்த ஆவிக்குப் பதிலாக நியமித்துக் கொண்டார்கள்.

82 ஆகையால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் இருக்கின்றனர். அவர்களுடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன, அவர்களால் அதற்காகச் செல்ல முடியாது, ஏனெனில் அவர்கள் ஆவிக்குரிய சிந்தையுள்ளவர்கள். எனவே அவர்களால் அதற்காகச் செல்ல முடியாது. அவர்களால் அதில் நிற்க முடியாது, அவர்களுடைய பெற்றோர் எத்தகைய ஸ்தாபன சபையைச் சேர்ந்திருந்து ஜீவித்தபோதிலும் அவர்களுக்குக் கவலையில்லை.

83 ஒரு சபை, செய்கிறது...ஸ்தாபன சபை சரியாக பேசாமலிருக்கலாம். ஓ, இல்லை. ஒருக்கால் ஸ்தாபனங்கள் வெளிப்படையாக பரிசுத்த ஆவியானவரை எதிர்த்துப் பேசாமல் இருக்கலாம். ஆனால் அவர்களுடைய செயல்கள் அதை நிரூபிக்கின்றன. *இதோ* வார்த்தை உள்ளது. பரிசுத்த ஆவியானவர் கூட்டின கூட்டங்களில், அவர் வார்த்தையை நிரூபித்து, அவர் பிணியாளிகளை சுகப்படுத்தி மரித்தோரை உயிர்ப்பித்து, அன்னியபாஷை பேசி, பிசாசுகளைத் துரத்துகின்றார் என்பதை ஊர்ஜிதப்படுத்துகின்றார். எனவே, ஒரு மனிதனுக்குள் என்ன இருக்கிறது...என்பதை பொறுத்துதான் அது உள்ளது.

84 திருமதி ஆர்கன்பிரைட், அங்கே உட்கார்ந்து அதை சிந்தித்துக் கொண்டே புல்வெளியில், புற்களை வெட்டிக் கொண்டிருந்தார்கள். நான் அவர்கள் அருகாமையிலே கடந்து சென்றேன், நான் இருப்பதை அவர்கள் அறியவில்லை, நான் அமைதியாக இருந்துவிட்டேன்; நான் கவனித்துக் கொண்டிருந்தேன்.

இப்பொழுது பரிசுத்த ஆவியானவரை அவருடைய மகத்தான கிரியையில் கவனியுங்கள்.

85 பரிசுத்த ஆவியானவர் அவசியமில்லையென்று சபைகள் கருதுகின்றன. அப்படித்தான் சபைகள் உங்களிடம் கூறும். ஸ்தாபனங்களில் மனிதர் எழுந்து நின்று, தங்கள் நுண்ணறிவினால் சொற்பொழிவாற்றுவார்கள். அவர்கள் கூறுவதே உண்மையென்று உங்களை ஏறக்குறைய நம்பச் செய்வார்கள். இப்பொழுது, இங்கு ஒரு நிமிடம் நிறுத்திக் கொள்வோம்.இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று மிக அருகாமையில் இருப்பதால், "அது கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்குமென்று" இயேசு கூறினாரல்லவா? [சபையோர், "ஆமென்" என்று கூறுகின்றனர்.] நுண்ணறிவினால் ஆற்றும் சொற்பொழிவு மிகச்சிறந்ததாய் அமைந்திருந்து, அது—அது ஜனங்களை வஞ்சிக்கும். அங்குள்ள மனிதர் திறம்பட தேவனுடைய சுவிசேஷ வார்த்தையைக்கையாண்டு சொற்பொழிவாற்றுவதால், எந்த புத்திசாலியையும் அது கவர்ந்துவிடும். அதாவது புத்திக் கூர்மையில்

நாட்டம் கொண்டவர்கள். அவர்கள் பரிசுத்த ஆவிக்கு எதிர்த்து நின்று, மனிதனுடைய வழியைக் கடைபிடிக்கின்றனர். அதை நாம் காண்கிறோம்.

86 யோசேப்பைக் குறித்து அவனுடைய சகோதரர் அதே விதமாக நினைத்திருந்தனர். எனவே அவர்கள் அவனைத் தொலைத்துவிட்டனர். ஓ, எகிப்திலே, ஓ எப்படியாய் அதைக் குறித்து சிந்திக்கக் கூடும். எப்படியாய் அதன் பேரில் என்னால் மணிக்கணக்கில் பேசக்கூடும். இதன் பேரில் இரவும் பகலுமாக மூன்று ஆண்டுகள் பேசினாலும், பரிசுத்த ஆவியானவரின் மகத்தான வெளிப்பாடுகள் இதைக் குறித்து இன்னமும் உண்டாயிருக்கும்.ஆவிக்குரிய சிந்தை எகிப்தை உற்று நோக்கி, அங்கு ஏற்பட்ட துன்புறுத்தல்களை உணர்ந்துகொள்ளும். துன்புறுத்தல்கள் உண்டாகவேண்டும் என்பதற்காகவே யோசேப்பு மரணத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டான் என்பதை ஆவிக்குரிய சிந்தை உணர முடியும். தேவன் சக்கரங்களுக்குள் தம்முடைய சக்கரத்துடன் இருப்பதை அதனால் காணமுடியும், எல்லாமே பிழையின்றி பரிபூரணமாக நிகழ்ந்து வருகின்றன. போத்திபார் யோசேப்பைப் புறக்கணித்ததையும், அங்கு கூறப்பட்ட பொய்யின் விளைவால் யோசேப்பு சிறைவாசம் செய்து, அங்கு அவன் தாடி வளர்ந்திருப்பதையும், அவனுடைய சகோதரரிடத்திலிருந்து அவன் வெளியேற்றப்பட்டதையுங் காணலாம். ஆனால் அப்பொழுது திடீரென்று அசைவாடினார். பாருங்கள்?

87 அந்த சக்கரங்களுக்குள் சக்கரம் நகர்ந்து செல்வதை நாம் எப்படியாய்க் காணமுடிகின்றது! தேவனுடைய மகத்தான திட்டம் எல்லாவற்றையும் இயங்கச் செய்து, யாத்திரை வரைக்கும் அவர்களை கொண்டுவந்து, அவருடைய ஜனங்களை தங்களுடைய தேசத்திற்கு செல்லும்படி அழைத்து, அவர்களுடைய ஸ்தானத்தை மீண்டும் அவர்களுக்களித்து, அவர்களை அவர் ஆசீர்வதித்து, அவர் வாக்குத்தத்தம் செய்த நபரை அவர்கள் மத்தியில் நிறுத்த விரும்புகிறார். அவர்கள் தங்களுடைய சொந்த தேசத்தில் இருக்கவேண்டியதாயிருந்தது. நினைவிருக்கட்டும், அவர்களுடைய வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா தோன்றும் முன்பு, முன்பிருந்த தேசத்தை விட்டு அவர்கள் வெளியே வந்து, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க வேண்டும்.

88 சபையும் அதேக் காரியத்தை செய்ய வேண்டியுள்ளது; மேசியா அவர்களுக்கு முன்பாக பிரத்தியட்சமாவதற்கு முன்பாக, புறக்கணிக்கும் குழுவை விட்டு அவர்கள் வெளிவந்து, வாக்குத்தத்தத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். உங்களால் அதைப் புரிந்துகொள்ள முடிகிறதா? [சபையோர், “ஆமென்” என்று கூறுகின்றனர்—ஆசி.] மேசியாவின் ஜீவன் வெளிப்படுத்தப்பட்டு, ஒரு சபையை, ஒரு மணவாட்டியை ஆயத்தப்படுத்துகின்றது.

89 ஒரு மனிதனை மணந்த ஸ்திரீக்கு அவனிடம் வித்தியாசபேதம் இருக்குமானால், அவர்களிடையே தொடர்ந்து ஒரு—ஒரு சச்சரவு உண்டாகிக்கொண்டேயிருக்கும். ஆனால் அதற்குப் பதிலாக ஒரு மனிதனுக்கும் அவனுக்கென்று நியமிக்கப்பட்ட பெண்ணுக்குமிடையே ஒருமனப்பான்மை இருக்குமானால், அவர்கள் ஒரே ஆத்துமாவும் ஒரே சிந்தையுள்ளவர்களாயுமிருந்தால் நலமாயிருக்கும், ஏனெனில் அவர்கள் ஒரே மாம்சமாகப் போகின்றனர்.

90 மணவாட்டிக்குள் மணவாளனின் வெளிப்படுத்துதல் வெளிப்படுத்தப்படும் வரைக்கும் அத்தகைய ஒருமனப்பான்மையை சபையானது தேவனிடம் கொண்டிருக்கும்போது, அவர்களிருவரும் ஒன்றாகப்போகின்றனர். ஓ, என்னே ஒரு மகத்தான பாடம். சரி.

91 இப்பொழுது ஆவிக்குரிய சிந்தைகொண்டவர்கள், முன்னடையாளத்தையும், அது நிறைவேறுவதையும் காண்பார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதைக்குறித்து மணிக்கணக்காக நாம் பிரசங்கிக்கலாம். என்ன நிகழ்கின்றது என்பதைக் கவனிக்கவும்.

92 இந்த வளமான காலம் வருவதற்கு, நாம் ஏன் இத்தனை ஆண்டுகள் காத்திருந்தோம்? சபையானது வனாந்தரத்துக்கு ஓடிப்போய், அங்கே காலங்களும் காலமுமாக போஷிக்கப்பட்டாள் என்று வேதம் கூறுவது உங்களுக்குத் தெரியும். ஏன் இவ்வாறு நிகழவேண்டும்? அதாவது நாம்…புரிகிறதா? இன்னமும் அது தேவனுடைய சக்கரங்களுக்குள் சக்கரமாயிருக்கிறது.

93 நீண்ட காலத்துக்கு முன்னரே மனிதர் மற்றும் ஸ்திரீகள் பென்சில்களோடு கணக்கிடும்படி அமர்ந்து கொண்டு, வருகையின் நேரத்தைக் கணித்துக் கூற முயன்றதை தேவன் ஏன் நிறைவேறச் செய்யவில்லை? நீதிபதி ருதர்ஃபோர்ட், மதர் ஷிப்டன் போன்றவர்கள், “1914-ஆம் ஆண்டில் இயேசு வருவார்.” அதற்கு முன்பும் கூட வருவார் என்று இந்த எல்லா நேரங்களையும் கணக்கிட்டுக் கூறிவந்தனர். பாருங்கள், இதன் மூலம், அவர்கள் வேதவாக்கியத்தைக் கொண்டு அதைக் கண்டறிய முயற்சித்து, பாருங்கள், அவர்கள் அதைக் குலைத்துப்போட்டனர். அது மறைக்கப்பட்டுள்ளது. அது உண்மையாகவே மறைக்கப்பட்டுள்ளது. “அந்த நாளையும் அந்த நாழிகையையும் எந்த மனிதனும் அறியான்” என்று இயேசு கூறியிருக்க, அதற்கு முரணாக வேதம் எப்படி செயல்பட முடியும்? புரிகிறதா? புரிகிறதா? அவர்கள் வேதத்தின் ஒரு பாகத்தை மாத்திரம் எடுத்துக்கொண்டு, அதைப் பிடித்துக் கொள்கின்றனர்.

94 நீங்களோ முழு காரியத்தையும் எடுத்துக்கொள்ளவேண்டும். தேவன் அதற்குள் இருந்தால், அது உண்மையென்பதை வெளிப்படுத்துவார்; உதாரணமாக தெய்வீக சுகமளித்தல்

என்பது, அது உண்மையல்லவென்றால், உண்மையல்ல. தேவன் அதனுடன் எவ்வித தொடர்பும் கொள்ளமாட்டார். ஆனால் அது உண்மையென்று தேவன் வெளிப்படுத்தினால், அப்பொழுது அது சத்தியமாயுள்ளது. இயேசுவைப் போல…

95 தேவன், "உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், அல்லது ஆவிக்குரியவனாயிருந்தால், நான் அவனோடே பேசுவேன். அவன் சொல்வது நிறைவேறினால், அவனுக்குச் செவிகொடுங்கள். அதுதான் அது. ஆனால் அவன் உரைக்கும் தீர்க்கதரிசனம் தவறாயிருக்குமானால், அப்பொழுது…" என்று கூறியுள்ளார். தேவன் தவறாயிருக்கமுடியாது. அவர் முடிவில்லாதவர், பிழையற்றவர், சர்வவல்லவர். அவர் தவறாயிருக்க முடியாது. எனவே ஒரு மனிதன் தன் சொந்த வார்த்தைகளைப் பேசினால், அவை தவறிப்போகும். ஆனால் அவன் தேவனுடைய வார்த்தைகளைப் பேசினால், அது தவற முடியாது, ஏனெனில் அது தேவன் பேசுவதாகும். அவனுடைய ஆவியின் ஏவுதல் தேவனிடத்திலிருந்து வருமானால், அது…அது சரியாகவே இருக்க வேண்டும். காரணம் தேவன் அவனுடன் அந்தவிதமாகக் கூறும்படி கூறினார். அந்தவிதமாகவே வேத…

96 பழைய ஏற்பாட்டில் தேவன், "வேதத்தின்படியும், தீர்க்கதரிசிகள் உரைத்தவைகளின்படியும் அவர்கள் உரைக்காவிட்டால், அவர்களுக்குள் ஜீவனில்லை, அவர்களுக்குள் விடியற்காலத்து வெளிச்சமில்லை" என்று கூறியுள்ளார். உண்மையே. அவர்கள் வேதத்தின்படியும் தீர்க்கதரிசிகள் உரைத்தவைகளின்படியும் பேசவேண்டும். ஒரு தீர்க்கதரிசனமோ அல்லது வேறெந்த காரியமாயினும் தேவனுடைய வார்த்தைகளின்படியே இருக்க வேண்டும். இல்லையேல் அது தவறாயிருக்கும். புரிகிறதா?

97 இப்பொழுது, இவையாவும் சம்பவித்ததை நாம் கண்டறிகிறோம், ஏனென்றால் காத்திருந்தோம். எழுப்புதல்கள்; மெதோடிஸ்டுகளும், லூதரன்களும், பாப்டிஸ்டுகளும், காம்ப்பெல்லைட்டுகளும், இன்னும் வித்தியாசமானவர்கள். அவர்கள் மகத்தான எழுப்புதல்களைப் பெற்றனர். நசரீன்கள், யாத்திரீக பரிசுத்தர், பெந்தெகொஸ்தேயினர் இவர்களிடையே மகத்தான எழுப்புதல்கள் உண்டாயின. ஆயினும் அந்த மகத்தான யாத்திரை இன்னும் நிகழவில்லை. ஏன்? எமோரியரின் அக்கிரமங்கள் நிறைவாகுமளவும் இஸ்ரவேலரை எகிப்தில் வைத்திருப்பாரென்று தேவன் ஆபிரகாமிடம் கூறியிருந்தார். தேவன் அதுவரைக்கும் பொறுமையுடன் காத்திருந்தார். ஜனங்கள் ஏதோ ஊகிக்கின்றனர். வேத வாக்கியங்கள் ஏதோ ஒன்றை நிறைவேற்றக் காத்திருக்கின்றன என்பதை அவர்கள் உணருகின்றனர். எனவே ஏதோ ஒரு காரியத்தை எடுத்துக்கொண்டு, அவர்கள், *"இதுவே அந்த நாள், இதுவே அந்த சமயம்"* என்று கூறுகின்றனர். ஆனால் எமோரியரின் அக்கிரமம்

இன்னும் நிறைவாகவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளத் தவறுகின்றனர்.

98 எகிப்துக்குச் சென்ற பின்பு நானூறு ஆண்டுகள் கழித்து அவர்கள் வெளியே கொண்டுவரப்படவேண்டும். அவர்கள் தீர்க்கதரிசியைப் புறக்கணித்ததால், நானூற்று நாற்பது ஆண்டுகள் உண்மையாகவே அவர்கள் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. வனாந்தரத்தில் அவர்கள் இன்னும் நாற்பது ஆண்டுகள் கழித்தப் பின்பே, தேவன் அவர்களை வெளியே கொண்டு வந்தார். இஸ்ரவேலரை விடுவிக்க வருவதற்கு முன்பு, மோசேயும் வனாந்தரத்தில் நாற்பது ஆண்டுகள் கழித்தான். நீங்கள் பாருங்கள்? செய்தியைப் புறக்கணித்த காரணத்தால், இஸ்ரவேலர் நாற்பது ஆண்டுகள் அதிகம் தங்க வேண்டியதாயிருந்தது.

99 தேவனுடைய கணக்கில் நாற்பது ஆண்டுகள் என்பது நம்முடைய நேரத்தில் சுமார் ஒன்றரை நிமிடங்களுக்குச் சமானம். அவ்வளவுதான் வித்தியாசம். காரணம் “தேவனுடைய பார்வைக்கு ஆயிரம் வருடங்கள் ஒரு நாளைப் போல் இருக்கின்றது.” புரிகிறதா? அந்த கணக்கின்படி, அது ஒரு நிமிட நேரம் கூட இருக்காது.அதை கவனியுங்கள்.

100 இப்பொழுது நாம் காலதாமதமாகிவிட்ட நிலையில் உள்ளோம். ஏன்? தேவன் நீடிய பொறுமையுள்ளவராய் காத்திருந்து, கவனித்துக்கொண்டே வருகிறார். லூத்தரன்களிடையே எழுப்புதல் உண்டாகி, அவர்கள் ஸ்தாபனம் உண்டாக்கிக்கொள்ளட்டும். மெதோடிஸ்டுகளிடையே எழுப்புதல் உண்டாகி, அவர்களும் ஸ்தாபனம் உண்டாக்கிக் கொள்ளட்டும். பாப்டிஸ்டு சபையின் ஜான் ஸ்மித் என்பவரும் மகத்தான ஒரு எழுப்புதலுடன் தோன்றி, பின்பு அவர்களும் ஸ்தாபனம் உண்டாக்கிக்கொள்ளட்டும். அவ்வாறே பெந்தெகொஸ்தேயினரும் வரங்கள் புதுப்பிக்கப்படுதல் என்பதுடன் எழும்பி, பின்பு ஸ்தாபனம் உண்டாக்கிக் கொள்ளட்டும். அக்கிரமம் நிறைவாகுமளவும். பின்னர் தேவனுக்கே களைப்புண்டாகி விடுகின்றது. அப்பொழுது ஒரு யாத்திரை உண்டாகின்றது.

101 நாம் அதைக் காண்கிறோம், அதாவது ஒவ்வொரு காலத்திலும் ஜனங்கள் பின்னோக்கிப் பார்த்து அந்தக் காரியம் சபிக்கப்பட்டது என்று அறிந்துகொள்ள முடிகிறது. ஆனாலும் அவர்கள் மறுபடியும் பாபிலோனிய சால்வையையும் பொன்பாளத்தையும் எடுத்துக் கொள்கின்றனர். மனிதன் தனது சொந்த கருத்துக்களைப் புகுத்த முயலும்போது, அந்தக் காரியமே ஜனங்களுக்கு மத்தியில் சாபமாக ஆகிவிடுகின்றது.

102 நாம் தேவனுடைய வார்த்தையோடு நிலைத்திருக்கவேண்டும். “சபிக்கப்பட்ட அந்த பட்டினத்திலுள்ளவைகள் யாதொன்றையும் தொடக்கூடாது என்பதே தேவனுடைய கட்டளையாகும். நீங்கள் தொடவேண்டாம். அவைகளை அப்படியே விட்டுவிடுங்கள்.”

103 அந்த பொன்பாளத்தையும் அழகிய பாபிலோனிய சால்வையையும் எடுத்துக்கொண்டு, மற்றவர்களைப் போன்று நல்லவிதமாக வாழலாமென்று ஆகான் எண்ணினான். ஓ, பாளையங்களிலுள்ள ஆகான்களே! புரிகிறதா? ஆனால் அந்தக் கரியம் சபிக்கப்பட்டது. அது சபிக்கப்பட்டதாகவே தொடர்ந்து இருக்கும். ரோமாபுரியிலுள்ள நிசாயாவில் நடந்த நிசாயா ஆலோசனை சங்கம் முதற்கொண்டே அது சபிக்கப்பட்டுள்ளது. ஆனால் தேவனோ எமோரியரின் அக்கிரமங்கள் நிறைவாகும் காலம் வரைக்கும் அதை அனுமதித்திருக்கிறார்.

104 ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலை பெற்றுள்ளவர் யாவரும் நான் திரும்பத் திரும்ப *ஆவிக்குரிய* புரிந்துகொள்ளுதல் என்று கூறுவதைக் கவனிக்கவும். இத்தேசத்தின் அக்கிரமம் நிறைவாகி வருவதை நீங்கள் காணமுடியும். அவள் ஸ்தாபித்துக்கொண்டு, மறுபடியுமாக ஸ்தாபனம் உண்டாக்கிக்கொண்டு, ஸ்தாபித்துக் கொண்டு, மறுபடியுமாக ஸ்தாபனம் உண்டாக்கிக்கொண்டாள். இப்பொழுது அவள் ஒரு குழுவின் அங்கத்தினராகி, மற்றோருடன் ஒன்று சேர்ந்துகொள்ளத் தலைப்படுகிறாள். அக்கிரமம் நிறைவாகிவிட்டது.யாத்திரையின் தருணம் இப்பொழுது வந்துவிட்டது. வெளியே அழைக்கப்பட்ட, வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு கொண்டு செல்லப்படுவதற்கு சமயமாகிவிட்டது. மற்றொரு தேசத்திற்கு செல்வதற்காக வாக்குத்தத்தம் அல்ல, நமது வீட்டிற்கு, ஆயிர வருட அரசாட்சிக்கு வெளியே அழைக்க சமயம் வந்துவிட்டது. இந்த நாட்டின் அக்கிரமம் (கர்த்தருக்கு சித்தமானால் இன்றிரவு மறுபடியும் அதைக் குறித்து பேசலாம்.) அவளுடைய அக்கிரமம் நிறைவாகிவிட்டது! அவள் அசுத்தமாயிருக்கிறாள்.

105 நீங்களோ, “சகோதரன் பிரான்ஹாமே, நீங்கள் வாழும் தேசத்தையா பழிக்கிறீர்கள்?” என்று கேட்கலாம். ஆம், ஐயா. நிச்சயமாக. “அமெரிக்க ஐக்கிய நாடுகளின் ஒரு குடிமகனாயிருந்து கொண்டு, நீர் இப்படிச் சொல்லக் கூடாது” என்று கூறலாம்.அப்படியானால் எலியா இஸ்ரவேலனாக இருந்துகொண்டு, இஸ்ரவேல் நாட்டைச் சபித்திருக்கக்கூடாது. மற்ற தீர்க்கதரிசிகளும் கூட இஸ்ரவேலருக்கு கீழ் அவர்கள் வாழ்ந்து வந்த அந்த தேசத்தை சபித்திருக்கக்கூடாது.

106 ஆனால் அவர்கள் தங்களுடைய சொந்த கருத்துக்களை உரைக்கவில்லை, ஆனால் கர்த்தருடைய வார்த்தையையே உரைத்தனர். பாருங்கள்? உங்களுடைய ஆவியின் ஏவுதலை நீங்கள் எங்கிருந்து பெறுகின்றீர்கள் என்பதை அது பொறுத்தது. அது எப்படி உண்டாகிறது என்பதன்பேரில் சார்ந்துள்ளது. அது தேவனுடைய வார்த்தைக்கு முரணாக இருந்தால், அதை தனியே விட்டுவிடுங்கள். நான் கூறுவது தேவனுடைய வார்த்தைக்கு முரணானது என்று நிரூபிக்கும்படி எவரையும் நான் கேட்கிறேன்.

107 வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தில், வேதம் இவ்வாறு கூறியுள்ளதல்லவா? அங்குதான் இந்த தேசம் தோன்றுகிறது. இந்த தேசத்தின் எண் பதின்மூன்றாகும், ஒரு ஸ்திரீயின் தேசம், வேதத்தில் அது ஸ்திரீயாக எழுதப்பட்டுள்ளது. நமது நாணயத்தில் ஸ்திரீயின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஸ்திரீயின் தேசமாகும்.இங்குதான் பெண்ணின் அசுத்தம் ஆரம்பித்து, தொடங்கி, இங்கே முடிவடைகிறது, முதன் முதலில் இந்த அசுத்தம் தேவனுடைய வார்த்தையை அவிசுவாசித்ததினால் ஏதேன் தோட்டத்தில்தான் தோன்றினது. இந்த தேசத்தில் அது பகிரங்கமாகி, பெண் பிரசங்கிகள் தோன்றி, மற்ற காரியங்களும் நிகழ்கின்றன. உலகத்தின் அசுத்தமே நவநாகரீக திரைப்படத் துறையான ஹாலிவுட்டிலிருந்து புறப்பட்டு செல்கின்றது. உலகிலேயே மிகவும் மோசமான நாடு இது. உலகின் மற்றெல்லா பாகங்களைக் காட்டிலும், நமது தேசத்தில்தான் விவாகரத்து அதிகமாக நேரிடுகின்றது. புரிகிறதா? ஏன்? கர்த்தருக்குச் சித்தமானால் என்றாவது ஒரு நாளில் இதன் காரணத்தை அறிந்து கொள்வீர்கள். இந்த சபிக்கப்பட்ட காரியத்திற்கான காரணத்தை நீங்கள் காண்பீர்கள். சாத்தான் ஜனங்களின் கண்களைக் குருடாக்கி, குருட்டுத்தனமாக இந்த விவாகரத்தில் ஈடுபட வைக்கிறான் என்பதை உங்களால் காணமுடியும். நாம் பயங்கரமான ஒரு நேரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். முடிவு மிகவும் அருகாமையிலுள்ளது என நான் நம்புகிறேன். அவர்கள் மிகவும் அழிவுக்கேதுவாக மோசமாயிருக்கின்றனர்.

108 அவள் வெளிப்படுத்தின விசேஷம் 13-ம் அதிகாரத்தில் தோன்றுகிறாள், பதின்மூன்று என்னும் எண். அது ஒரு ஆட்டுக்குட்டியாக எழும்பி வந்தது என்பதை நினைவில் கொள்ளவும், மத வழிபாட்டின் சுதந்தரம். ஆனால் பின்னர் அது மிருகத்தினிடமிருந்து வல்லமையைப் பெறுகின்றது. மிருகத்திற்கொப்பான ஒரு சொரூபத்தை உண்டாக்கவேண்டுமென்று கூறுகின்றது. அது சகல அதிகாரத்துடனும் பேசி, அதற்கு முன்பாக தோன்றின மிருகம் செய்த அதே அசுத்தமான கிரியைகளைச் செய்கிறது. அப்படியானால், இது இந்த தேசத்தைக் குறித்த தீர்க்கதரிசனம் அல்லவென்று என்னிடம் கூறுங்கள் பார்க்கலாம். எமோரியரின் நிலைமை முதிர்வடையும் சமயம் வந்துவிட்டது, ஏனெனில் அவர்கள் ஏற்கெனவே அதற்குள் கிரியை நடப்பித்து வருகின்றனர்.

109 இப்பொழுது புதிதாக நியமிக்கப்பட்ட போப்பாண்டவரும் கூட எல்லா சகோதரரையும் ஒருங்கே இணைக்க வேண்டுமெனும் நோக்கங்கொண்டவராயிருக்கிறார். மாம்சபிரகாரமான கண்ணிற்கு, அது செய்யப்பட வேண்டிய காரியமாயிருக்கலாம். ஆனால் தேவனுடைய கண்களில், அது பரிசுத்த ஆவிக்கு முரணான ஒரு செயலாகும். அதனுடன் நாம் கலந்துவிடக்கூடாது. ஒவ்வொரு

சபையும் அந்த சங்கத்திற்குள்ளாக அழைக்கப்படும். எவ்வளவு வேகமாக முடியுமோ, அவ்வளவு வேகமாக அதைவிட்டு வெளியே வாருங்கள். இல்லையேல் நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள் என்று அறியாமலேயே மிருகத்தின் முத்திரையை நீங்கள் தரிக்க நேரிடும். அதை விட்டு வெளியே வாருங்கள்.

110 ஆவிக்குரிய சிந்தை இதை கிரகித்துக்கொள்ளுமென்று நான் நம்புகிறேன். அதை புரிந்து கொண்டீர்கள் என்னும் நிச்சயம் எனக்குண்டு. ஆனால் ஏனைய நாடுகளில் உள்ளவர்கள் இதை புரிந்து கொண்டார்களோ என்று நான் எதிர்பார்க்கிறேன். எப்படியாயினும் உங்களால் ஒவ்வொரு தேசத்திற்கும் செல்ல முடியாது. ஆனால் உங்களால் அந்த தேசத்திற்கு ஒலிநாடாக்களை அனுப்ப முடியும். இந்த விதை, அது விதைக்கப்பட்ட சிந்தையைக் கவர்ந்துகொள்ள தேவன் ஏதாவதொரு வழியை ஏற்படுத்தவேண்டும். உண்மையே. வெளிச்சம் அதன் மேல் பட்டவுடனே அது உயிர்பெறுகின்றது. [சகோதரன் பிரான்ஹாம் தன்னுடைய கரங்களை ஒன்று சேர்த்து ஒருமுறை தட்டுகிறார்—ஆசி.] கிணற்றடியிலிருந்த ஸ்திரீக்கும் அதுவே சம்பவித்தது. அவள், “இதோ அது உள்ளது” ஏன்றாள். அவள் உடனே அதை கிரகித்துக்கொண்டாள்.

111 அதை விட்டு வெளியே வாருங்கள். அது சபிக்கப்பட்டது, “சபிக்கப்பட்டதா?” விழுந்துபோன ஏதாவதொரு ஸ்தாபனம் மீண்டும் எழும்பினதை எனக்குக் கூறுங்கள். அவ்வாறே எழும்பி விழாத ஒரு ஸ்தாபனத்தை எனக்குக் கூறுங்கள். எனவே அது தவறென்பதை நீங்கள் புரிந்துகொள்ள முடியும். சரி.

112 எமோரியரின் அக்கிரமங்கள் நிறைவாகாததன் காரணத்தால் இஸ்ரவேல் யாத்திரைக்கு முன்னர் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. ஆனால் எமோரியர் அக்கிரமங்கள் நிறைவானவுடனே, இஸ்ரவேலருக்கு ஆவிக்குரிய யாத்திரை அல்லது இயற்கையான யாத்திரை ஒன்றுண்டாகி, உலகப்பிரகாரமான எமோரியர் தங்களுடைய தேசம் என்று அழைத்துக்கொண்டு, அவர்கள் வாசமாயிருந்த அந்த இயற்கை நாட்டிற்கு இஸ்ரவேலர் நடத்திச் செல்லப்பட்டனர்.

113 அது போன்று, தங்களை “சபையென்று” அழைத்துக்கொள்ளும் எமோரிய ஸ்தாபனங்களில் அக்கிரமங்கள் நிறைவாகும் சமயம் வந்துவிட்டது.

114 எனவே ஒரு யாத்திரை இப்பொழுது நேரிடவிருக்கிறது. அப்பொழுது யார் யாரென்பதை தேவன் வெளிப்படுத்துவார். சபைதாமே, இயேசு கிறிஸ்துவின் மணவாட்டி அப்பொழுது அதனின்று வெளிவந்து வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குப் யாத்திரையாக கொண்டு செல்லப்படுவாள். “என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு.” இஸ்ரவேலர் யுத்தம்பண்ணினது போன்று, நீங்கள் அத்தேசத்திற்குச் சென்று யுத்தம்பண்ண வேண்டிய

அவசியமில்லை. அது ஏற்கனவே ஆயத்தமாகிவிட்டது. பூமிக்குரிய கூடாரமாகிய இவ்வீடு அழிந்துபோனாலும் நமக்காக ஒரு வீடு அங்கு காத்துக்கொண்டிருக்கிறது. “நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே நீங்களும் கூட இருப்பீர்கள்.” அந்த மகத்தான யாத்திரை சமீபத்துவிட்டதே!

115 இஸ்ரவேலருடைய பிரயாணத்தை தேவன் எவ்விதம் வாய்க்கச் செய்தார்; அதற்கென்று அவர் என்னென்ன ஆயத்தங்கள் செய்தார் என்றெல்லாம் ஒரு நிமிடம் சிந்தனை செய்துவிட்டு, இன்றுள்ள நிலையை நோக்குங்கள்.சரி, கவனியுங்கள், இந்த யாத்திரை தொடங்கும் முன்பு, “யோசேப்பை அறியாத ஒரு—ஒரு பார்வோன் தோன்றினான்.” பார்த்தீர்களா? யோசேப்பை அறியாத ஒரு பார்வோன். யோசேப்பை அறியாத ஒருவன். *யோசேப்பு* எதை பிரதிநிதித்துவப்படுத்தினான்? இந்த ஆவிக்குரிய யாத்திரையில் உள்ள ஆவிக்குரிய பாகம்.

116 அங்கே இப்பொழுது “நாம் சுதந்தரமாயிருக்கிறோம்” என்பது எழும்பியுள்ளது. (“ஸ்திரீயானவள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் போஷிக்கப்பட்டாள்.”) ஆனால் முடிவில் மதவாழிபாட்டின் சுதந்தரம் என்பதை அறியாத ஒரு—ஒரு யோசே…இல்லை ஒரு பார்வோன் சர்வாதிகாரி தோன்றினான். அவன் அவர்களை ஒன்றாக இணைக்கிறான். நீங்கள் புரிந்துகொள்ளாமலேயே, அது உங்கள் சிந்தனைகளைக் கடந்து செல்ல விட்டு விடவேண்டாம். ஒரு பார்வோன் முதலில் அங்கே தோன்ற வேண்டியிருந்த ஒரு நேரம் உண்டாயிருந்தது.

117 ஸ்தாபனங்கள், உண்மையான கிறிஸ்தவ மார்க்கம் என்னும் திராட்சை செடியில் ஒட்டு போடப்பட்ட கிளைகளாக செழித்து வாழ்ந்து, தங்களுடைய சொந்த கனிகளை ஈந்து வந்துள்ளன. ஸ்திரீகள் பாதி—உடையணிந்து, மனிதர் தங்கள் நுண்ணறிவை உபயோகித்து ஆவியின் வல்லமையை மறுதலிக்கின்றனர். ஆனால் அதே சமயத்தில் அது கிறிஸ்தவ சபை என்னும் பெயரின் கீழே செயல்பட்டு வருகிறது. அது ஒரு ஒட்டு போடப்பட்ட திராட்சை கிளையாகும். ஆனால் திராட்சை தோட்டக்காரன், அவர் கூறியுள்ளபடி அவர் செய்ய, திராட்சை செடியை சுத்தம் செய்ய வரப்போகிறார். கனி கொடுக்காத கிளைகளெல்லாம் வெட்டுண்டு தீக்கிரையாக்கப்படும்.

118 அது கூறுவதற்கு பயங்கரமாயுள்ளது. ஆனால் சத்தியம் சில சமயங்களில், நான் உங்களுக்கு கூறியுள்ளதுபோல, பயங்கரமாக தென்படும். தேவன் தமது பிள்ளைகளை ஆழமான தண்ணீர்களின் வழியாகவும், உளையான சேற்றின் வழியாகவும் கொண்டு செல்லுகிறார். அவர் அந்தவிதமாகவே அதைச் செய்கிறார். ஒரு பானை மறுபடியும் வனையப்படுவதற்கு முன்பாக, அது சிறு சிறு துண்டுகளாக உடைக்கப்பட்டு, மறுபடியும் அரைக்கப்பட வேண்டும். அதை உடைப்பது ஒரு பயங்கரமான

காரியமாகத் தென்படலாம். ஆனால் அழகான பாண்டமாக அதை மறுபடியும் வனையவேண்டுமானால், குவளையாகவோ அல்லது நீங்கள் என்னவாக செய்யவேண்டுமானாலும், அது அவ்வாறு நொறுக்கப்பட வேண்டும்.

119 “யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் எழும்பினான்.” அதுவே துவக்கத்தின் துவக்கமாயிருந்தது. அதுவே யாத்திரையின் துவக்கமாயிருந்தது. அந்தக் காரியம் உருவாகத் துவங்கும்போது, ஒரு—ஒரு அரசியல் வல்லமையின் கீழ் உருவாகத் துவங்கும்போது, தேவனும் அப்பொழுது ஆயத்தமாகத் துவங்கினார். எமோரியரின் அக்கிரமம் அப்பொழுது நிறைவாக்கப்பட்டது. ஆபிரகாமுக்கு அவர் வாக்குத்தத்தம் செய்த அந்த சமயம் வந்துவிட்டது, விடுதலையின் நேரம் சமீபித்துவிட்டிருந்தது.

120 யோசேப்பை அறியாத ஒரு பார்வோன் தோன்ற தேவன் அனுமதித்தார். அதன் விளைவாக ராமசேஸ் பிறந்தான். சேட்டி (Seti) க்குப் பிறகு ராமசேஸ் தோன்றினான். இந்த ராம்சேஸ் யோசேப்பின் ஆசீர்வாதகளை அறியாத ஒருவனாயிருந்தான். ஆவிக்குரிய பாகம் என்னவாயிருந்தது என்பதை அவன் அறியாதவனாயிருந்தான். அவன் ஒரு அரசியல் மேதையாக மாத்திரம் இருந்தான், அவனுடைய இராணுவ வல்லமையைக் கொண்டு அவன் எத்தியோப்பியாவையும் ஏனைய நாடுகளையும் கைப்பற்றினான். அவனுக்குத் தெரிந்ததெல்லாம் இராணுவ வல்லமை மாத்திரமேயாகும்.

121 ஆவிக்குரிய சிந்தை கொண்ட எந்த மனிதனும் இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அறிந்துகொள்வான் என்று நான் நினைக்கிறேன். மதவழிபாட்டின் சுதந்தரம் என்னவென்று அறியாத ஒரு பார்வோனை நாம் பெற்றிருக்கிறோம். நமது ஜனாதிபதி பதவிப்பிரமாணம் செய்தபோது மதவழிபாட்டின் சுதந்தரத்தில் அவர் நம்பிக்கை கொண்டிருப்பதாக பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுத்துவிட்டார்.

122 அன்றொரு நாள் கறுப்பு மனிதர்களை ஒதுக்கி வைத்தல் என்னும் பிரச்சினை தென்பாகத்தில் உண்டானபோது என்ன நேர்ந்தது? அலபாமாவின் ஆளுநர்…நான் மார்டின் லூதர்கிங் என்னும் போதகருடன் பேச விரும்புகிறேன். தன் ஜனங்களை மரணக் கண்ணிக்குள் வழி நடத்தும் ஒருவர் எவ்விதம் தலைவராக இருக்கமுடியும்? அவர்கள் அடிமைகளாக இருப்பார்களானால், நானும் அங்கு சென்று அவர்களுடன் போராடுவேன். ஆனால் அவர்கள் அடிமைகளல்லவே; அவர்கள் பிரஜைகள். அவர்கள் இந்நாட்டின் பிரஜைகள். பிரச்சனை, “பள்ளிக்கு செல்வதைக்” குறித்ததாகும்.

123 அந்த ஜனங்கள், அவர்கள் ஒரு கடின இருதயத்தைப் பெற்று, அந்தக் காரியங்கள் இன்னதென்று அறியாமலிருக்கின்றனர்.

அரசியல் ஆதிக்கங்களை தங்கள் மனதில் கொண்டுள்ள அத்தகையோருக்கு ஆவிக்குரிய காரியங்களை நுழைக்க முடியாது. ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுபடியும் பிறக்கவேண்டும். அப்பொழுதுதான் இவைகளை அவர்கள் புரிந்துகொள்ள முடியும்.

124 இந்த மார்டின் லூதர் கிங் என்பவருடன் பேசத் தருணம் கிடைத்தால் நலமாயிருக்கும். மார்க்கத்தின் பெயரால் அவர் இந்த விலையேறப்பெற்ற மக்களை மரணக்கண்ணிக்குள் வழி நடத்துவதனால் ஆயிரக்கணக்கானவர் கொல்லப்படுகின்றனர். அவர்கள்…அவர்கள் மாம்சப்பிரகாரமானவைகளையே நோக்குகின்றனர்.

125 இந்த கறுப்பு சகோதரன், லூசியானாவில் கறுப்பு மனிதர்களின் பெரிய எழுச்சி உண்டானபோது, நான் அப்பொழுது அங்கிருந்தேன். அங்கு வயோதிப கறுப்பு சகோதரன் ஒருவர், ஒரு போதகர் எழுந்து நின்று இராணுவ சேவகர்களிடம், “அவர்களிடம் நான் பேசலாமா? அவர்கள் என் ஜனங்கள்” என்று உத்தரவு கேட்டார். அந்த வயோதிகப் போதகர் எழுந்து நின்று அங்கு குழுமியிருந்த கறுப்பு சகோதரர்களிடம், “நான் இந்தக் காலையில் கூற விரும்புவது, என் நிறத்தைக் குறித்து நான் ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை. என் சிருஷ்டிகர் என்னை இவ்விதமாக சிருஷ்டித்தார்” என்றார்.

126 அந்தவிதமாகவே, அவன் சிருஷ்டிக்கப்பட்டவிதமாகவே இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அந்தவிதமாகவே ஒவ்வொரு மனிதனும் தரித்திருக்க வேண்டும் என்று விரும்புகிறார். அவர் வெள்ளை பூக்களையும், நீல நிறப்பூக்களையும் மற்றெல்லா வண்ணங்களிலும் பூக்களைப் படைத்திருக்கிறார். இனக்கலப்பு செய்ய வேண்டாம். அவைகளை ஒன்றுக்கொன்று சேர்த்து, வேறுபல இனங்களை உண்டாக்கவேண்டாம். அப்படி செய்வதனால், நீங்கள் இயற்கைக்கு விரோதமான செயல்களைப் புரிகின்றீர்கள்.

127 அந்த வயோதிகப் போதகர், “இன்று காலை வரை என் நிறத்தைக் குறித்து ஒருபோதும் நான் வெட்கப்பட்டதில்லை. ஆனால் என்னுடைய ஜனங்கள் எழும்பி, அவர்கள் இப்பொழுது செய்துகொண்டிருக்கிற காரியங்களை செய்யும்போது, அது அவர்களைக் குறித்து என்னை வெட்கமடையச் செய்கின்றது” என்றார்.

நான், “தேவன் அந்த சத்தத்தை ஆசீர்வதிப்பாராக” என்று எண்ணிக்கொண்டேன்.

அவர் கறுப்பு மனிதர்களை நோக்கி, “நீங்கள் சச்சரவுதான் உண்டாக்கப்போகின்றீர்கள். நமக்கென்று இருக்கும் பள்ளிக்கூடங்களைப் பாருங்கள். நமக்குப் பள்ளிகள் இல்லையென்றால், அது வித்தியாசமாயிருக்கும். ஆனால் லூசியானாவில் மிகச்சிறந்த பள்ளிகளை யார் பெற்றுள்ளனர்?” என்று

கேட்டார்.அவர் மேலும், “ஷ்ரீவ்போர்ட் என்னும் பட்டிணத்தை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். அங்கு வெள்ளையருக்கென ஒரு பள்ளிக் கூடம் இருக்கின்றது. அது ஒரு பழைய பள்ளிக் கூடம். அவர்கள் வேறொரு பள்ளிக்கூடத்தை நமக்கு அங்கு கட்டியுள்ளனர். பிள்ளைகள் விளையாட ஒரே ஒரு கருவி கூட அங்கு இல்லை. ஆனால் நமக்கோ முற்றம் நிறைய விளையாட்டுக் கருவிகள் உள்ளன. அது மாத்திரமல்ல, நம் பிள்ளைகளுக்கு அவர்கள் சலவைக் கற்களினால் நீச்சல்குளம் ஒன்றைக்கட்டிக் கொடுத்திருக்கின்றனர். நமக்கு மிகச்சிறந்த ஆசிரியர்கள் இருக்கின்றனர். மேன்மையானவைகள் நமக்கிருக்க, அங்கு செல்வதற்கு நீங்கள் ஏன் விரும்புகின்றீர்கள்? உங்களுக்கு என்ன நேர்ந்தது?” என்று அவர் கேட்டார்.

128 ஆனால் ஜனங்களோ, “ஆர்ப்பாட்டம் செய்து,” அவர் குரலை அடக்கிவிட்டனர். அங்குதான் உங்கள் காரியமே உள்ளது, பாருங்கள், தவறான ஏவுதல்.

129 அவர்கள் அடிமைகளாயிருந்தனர். ஆனால் அவர்கள் என் சகோதர சகோதரிகளுமாவர். அவர்கள் அடிமைகளாயிருந்தால், “நாமும் அவர்களுடன் சேர்ந்துகொண்டு, வீதிகளில் அந்த காரியத்திற்கு எதிர்த்துப் போராடுவோம்” என்று நான் கூறியிருப்பேன். ஆனால் அவர்கள் அடிமைகளல்லவே! அவர்களுக்கு இந்நாட்டின் குடிமக்கள் மற்றவரைப்போல் இவர்களுக்கும் சம உரிமையுண்டு. லட்சக்கணக்கானவர் கொல்லப்பட வேண்டும் என்பதற்காகவே பாதாளத்திலிருந்து புறப்பட்டுவரும் தவறான ஏவுதலாக இது அமைந்துள்ளது. அவர்கள் புரட்சி உண்டாக்க துவக்குகிறார்கள். நிச்சயமாக. அதுதான் அது. அது சரியல்ல.

130 மனிதருக்கும் பெண்களுக்கும் அவரவர் உரிமையுண்டு. அவர்கள் எவ்வித நிறமுடையவர்களாயிருந்தாலும் சரி. கறுப்பு நிறமுள்ள நமது சகோதரர், மஞ்சள் நிறங்கொண்ட ஜப்பானியர், வெள்ளையர், யாராயிருந்தாலும் சரி; தேவனுடைய பார்வையில் நிறத்தின் அடிப்படையில் எவ்வித வேறுபாடும் கிடையாது. நாமனைவரும் ஆதாமினின்று, ஒரே மனிதனிலிருந்து தோன்றினவர்கள். ஆனால் தேவன், நம்மை வேறு பிரித்து, வெவ்வேறு நிறங்களை அளித்திருப்பாரானால், நாம் அவ்வாறே நிலைகொள்வோம். நான் ஒரு—ஒரு மஞ்சள் நிறம் கொண்டவனாயிருந்தால். நான் ஜப்பானியனாகவோ அல்லது சீனனாகவோ இருக்கவே விரும்புவேன். நான் ஒரு—ஒரு—ஒரு கறுப்பு நிறத்தவனாக இருந்தால், நான் அவ்வாறே நிலைகொள்ள விரும்புவேன். காரணம் தேவன் என்னை அவ்வாறே படைத்திருக்கிறார்.

131 வெளிப்படையாகக் கூறப்போனால், கறுப்பு இனத்தவரின் அனேக பண்புகளை வெள்ளையர் பெற்றுக்கொள்ள

வேண்டியவராயிருக்கின்றனர். அவர்களுக்கு எவ்வித கவலையும் கிடையாது. வெள்ளையரைக் காட்டிலும் அவர்கள் ஆவிக்குரியவராகத் திகழ்கின்றனர். வெள்ளையர் நெருங்கவும் கூட முடியாத ஆயிரக்கணக்கான காரியங்களை கறுப்பு நிறமுள்ளவர்கள் கொண்டுள்ளனர். தேவன் அவர்களை அவ்விதம் படைத்திருக்கிறார்.

132 கறுப்பு நிறத்தவரின் பாட்டுக் குழுவுடன் யார் போட்டியிட்டு பாடல்களில் வெல்லமுடியும்? அவர்களுக்குள்ள குரல்களை நீங்கள் வேறு எங்கு கண்டறிய முடியும்? தங்கள் நாட்டிலிருந்து அவர்கள் இங்கு குடியேறினபோது, வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத நிலையில் இருந்தனர். அவர்களிடையே முப்பது அல்லது நாற்பது இனங்கள் உண்டு. அவர்கள் ஒன்று சேர்ந்து பாடும்போது, அவர்கள் எழுப்பும் உச்ச சாரீரத்தை பாடற்குழுவின் தலைவர்களும்கூட, "அவர்கள் எழுப்பும் உச்ச சாரீரத்தை எங்களால் எட்டி பிடிக்க முடியாது" என்கின்றனர். அனேக ஆண்டுகளாக நன்கு பயிற்சி பெற்ற பாடற்குழு அவர்களுக்குண்டு. ஒருவர் உச்ச தொனியில் பாடுவார். மற்றொருவர் தாழ்ந்த தொனியில் பாடுவார். அதைக் கேட்பவர்கள், "அதை கவனியுங்கள், எவ்வளவு பரிபூரணமாக வித்தியாசமான இக்குரல்கள் ஒன்றிணைகின்றன" என்பார்கள். அவர்கள் வரம் பெற்றவர்கள்.

133 ஆனால், நீங்கள் பாருங்கள், இத்தகைய எழுச்சிகள் அனைத்தும் சம்பவிக்க வேண்டியவைகளாயிருக்கின்றன. இதற்கெல்லாம் காரணம் ஜனங்களாகிய நீங்கள் நேர்மையற்ற இயந்திரங்களின் மூலம் தேர்ந்தெடுத்த ஒரு அரசியல்வாதியே.

134 அன்றொருநாள் ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, பதவிப் பிரமாணம்செய்து, ஆளுநராக நியமிக்கப்பட்ட ஒருவர் எழுந்து நின்று, இந்த இனப்பிரச்சினைக்கு ஒவ்வொரு—ஒவ்வொரு மாநிலமும் அதனதன் அபிப்பிராயப்படி விடை காணலாம் என்று அரசியல் சாசனம் (Constituion) கூறுகின்றது என்றார். அவர் எதற்கும் கவலைகொள்ளவில்லை, ஆனால் அவர் அரசியல் சாசனத்தைப் படித்துவிட்டு, "இப்பொழுதுள்ள பள்ளிக்கூடங்கள் கறுப்பு இனத்தவரை ஒதுக்கிவைத்தலுக்கு எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன" என்று கூறினார். அங்கு ஒரு பள்ளிக்கூடம் உண்டு. அது இரண்டு கறுப்பு சிறுவர்கள் மாத்திரம் கொண்டது, அவர்களுக்கென பிரத்தியேக பள்ளிகள் இருந்தபோதிலும், மற்ற பள்ளிக்கூடங்களில் சேரவேண்டுமென அவர்கள் விரும்பினர். ஆளுநர் எழும்பி நின்று, "என்ன?" என்று கேட்டுவிட்டு, அவரும் கூட அந்த அரசியல் சாசனத்தைப் படித்தார்.

135 அதன்பின்னர் இங்கு யோசேப்பை அறியாத இந்த நபரை நாம் இங்கே திரும்பப் பெற்றுள்ளோம், சுதந்தரம். கறுப்பு இனத்தவரின் வாக்குகளை பெற ஆசிக்கிறான். குடியரசு கட்சிதான் அவர்களுக்கு விடுதலையையளித்தது என்பதை அறியாதவர்களாயுள்ளனர். அவர்கள் தங்கள் பிறப்புரிமையை, தங்களை மரணக் கண்ணிக்கு

வழிநடத்தும் அத்தகைய காரியங்களுக்கு, இதன்மூலம் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட எந்த முறைமையும் விழுந்துபோகும் என்பதைக் காண்பிக்கும்படி விற்றுப் போடுகின்றனர். அது முற்றிலும் உண்மை. தேசியமயமாக்கப்பட்ட காவலர்களை திரு.கென்னடி அங்கு அனுப்பி, அந்த அரசியல் சாசனத்தின் கீழ் இருந்த அவர்களுடைய சொந்த தகப்பனார்களுக்கு விரோதமாக திருப்பி, அரசியல் சாசனத்திற்கு விரோதமாக மீண்டும் செயல் புரிந்தார்.

136 அவர்களோ, “நாங்கள் சண்டையிடமாட்டோம். இல்லை, ஐயா” என்றனர். மேலும் “நாம் ஜனநாயகத்தின் கீழிராமல் இராணுவ சர்வாதிகாரத்தின் கீழ் உள்ளோம் என்பதை இந்த தேசம் கண்டுகொள்ள முடியும் என்று நாம் நம்புகிறோம்” என்று கூறினர்.

137 “ஜனநாயகக் கட்சியிலுள்ள தென்னாட்டு மனிதன் எப்பொழுதுமே ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்திருப்பான்” என்னும் பழமொழியை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். தற்பொழுது எப்படியோ எனக்குத் தெரியாது. உ—ஊ. நடப்பவைகளை கண்டு விழித்தெழ ஒரு மனிதனுக்கு நிச்சயமாக போதிய ஞானமிருக்கும். புரிகிறதா? இந்த அருமையான கறுப்பு இனத்தவரை விட்டுவிடுங்கள். அவர்களை அங்கே கொன்று போட வேண்டாம்.

138 ஒருவன், கறுப்பு சகோதரன் ஒருவனை அன்றொரு இரவு துப்பாக்கியால் முதுகில் சுட்டு கொன்றுவிட்டான். கொல்லப்பட்டவனுடைய மனைவியும் பிள்ளைகளும் அப்பொழுது வீட்டில் இருந்தனர். அவன் யாராயினும் எனக்குக் கவலையில்லை. அது மிகவும் ஈனமான செயலாகும். ஆம் ஐயா. அந்த வழக்கில் ஒரு தடவை நான் நீதிபதியாக இருக்க விரும்கிறேன். உ—ஊ, உ—ஊ. தன் மனைவி பிள்ளைகளோடு வீட்டிற்கு வந்து கொண்டிருக்கின்ற அந்த மனிதனை சுடுவது, அவன் நாட்டின் குடிமகன். சரி என்று அவன் நினைக்கின்ற ஒன்றிற்காக நிற்க அவனுக்கு உரிமையுண்டு, ஒரு நல்ல மனிதன். *ஃலைப்* பத்திரிகையில் அந்த புகைப்படத்தைப் பிரசுரித்திருந்தனர், அதாவது அந்த சிறு பையன் தன் தகப்பனார் வேண்டும் என்று அழும் காட்சி. ஏதோ ஒரு துரோகி பதுங்கியிருந்து அவனை முதுகில் சுட்டுவிட்டான்.

139 நீங்கள் கிறிஸ்துவைப் புறக்கணிக்கும்போது, அதுதான் உங்களுக்கு கிடைக்கும். அது உண்மை. தேசம் முழுவதும் அரசியலின் கீழ் செயல்புரிகின்றது. இது மிகவும் அவமானமான ஒரு செயல். ஆனால் அதைத்தான் நாம் விரும்பினோம். அதை நாம் இந்த தேர்தலில் நிரூபித்து காண்பித்துவிட்டோம்.

140 என் சிறிய மகன் இன்று காலை என்னிடம், “அப்பா, யாத்திரீக பிதாக்கள் இங்கு வந்தபோது, அவர்கள் *இந்த* குறிப்பிட்ட ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தனரா? அவர்கள் எல்லோரும்…அவர்கள் நீளமான மேலாடைகளை (Coats) அணிந்திருக்கின்றனரே” என்று கேட்டான்.

141 நான், "இல்லை, தேனே, அவர்கள் மதவழிபாட்டின் சுதந்தரத்தை நாடி இங்கு வந்தனர். அந்த விதமான காரியத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று இங்கு வந்தனர்" என்றேன். ஆனால் இப்பொழுது எந்நிலையை அடைந்துள்ளது என்பதை உங்களால் காணமுடிகின்றதா? இந்த ராஜ்யங்கள் அனைத்தும் விழுந்து போகவேண்டும் என்பதையே அது காண்பிக்கின்றது.

நான் துரிதமாக முடிக்கவேண்டும்.

142 ஒரு காரியம், சகோதரன் மார்டின் லூத்தர் கிங் நிச்சயமாகவே சீக்கிரத்தில் விழிப்படைய வேண்டும் என்றே நான் ஜெபிக்கிறேன். அவர் தமது ஜனங்களை நேசிக்கிறார். அதில் எவ்வித சந்தேகமில்லை. ஆனால் அவருடைய திடீர் கிளர்ச்சி எண்ணத்தை மாத்திரம் அவர் புரிந்துகொண்டால் நலமாயிருக்கும். பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற்குச் சென்று, அதே சமயத்தில் லட்சக்கணக்கானோர் மடிவதனால் என்ன பயன்? அந்தவிதமாக பள்ளிக்குச் செல்வது பயனளிக்காது. பசிக்காக, வேறு ஏதோ ஒன்றிற்க்காக, அடிமைகளுக்காக ஒரு மனிதன் தன் உயிரைத் தியாகம் செய்தால், அப்படிப்பட்ட ஒரு காரணத்துக்காக, ஒரு தகுதியான காரணத்துக்காக உயிரைத் தியாகம் செய்வது, அது ஒரு தகுதியான பாத்திரமாயிருக்கும். ஆனால் வெள்ளையனின் பள்ளிக்கூடங்களுக்குப் போகவேண்டும் என்பதற்காக இத்தனை பேர் மடிந்தால், அதை என்னால்— என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை. புரிகிறதா? இந்த விஷயத்தில் பரிசுத்த ஆவியானவர் அவரோடு ஒருபோதும் உடன்படமாட்டார் என்று நான் கருதுகிறேன். அது ஜனங்களை ஒரு வித உணர்ச்சிவசப்படச் செய்து, ஒரு கீழ்தர ஆரவார விளம்பர கூட்டமாக்கிவிடுகிறது. நீங்கள் பாருங்கள்.

143 ஜெர்மனியில் ஹிட்லரும் அவ்விதம் செய்து, அந்த விலையேறப்பெற்ற ஜெர்மானியரை மரணக் கண்ணிக்குள் வழி நடத்தினான். கோடிக்கணக்கானவர் கொல்லப்பட்டு அவர்களுடைய பிரேதங்கள் ஒன்றின் மேல் ஒன்று குவியலாக்கப்பட்டன.

144 அதேக் காரியமாகத்தான் இதுவும் உள்ளது. நான் பேசுவது ஒலிப்பதிவு செய்யப்படுகின்றது என்பதை நினைவில் கொள்ளுங்கள். நான் கடந்து சென்ற பிறகு, ஒருக்கால் இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அதுவே இங்கும் சம்பவிக்கப்போகின்றது. அந்த விலையேறப்பெற்ற ஜனங்கள் ஈக்களைப்போல் கொல்லப்படுவார்கள். புரட்சி எழும்பி, வெள்ளையரும் கறுப்பரும் ஒருவரோடொருவர் சண்டையிட்டு, ஈக்களைப் போல் மடிவார்கள். அது முடிவுறும்போது, நீங்கள் என்ன பெற்றுக்கொள்வீர்கள்? மரித்த ஜனங்களின் ஒரு குவியல் மாத்திரமே.

145 "யோசேப்பை அறியாத பார்வோன் தோன்றினான்." இன்றும் அதுவே சம்பவித்துள்ளது. ஒரு மனிதன் எழும்பி வெள்ளை

மாளிகையில் பதவிப்பிரமாணம் செய்யும்போது, மதவழிபாட்டின் உரிமையை அவர் நம்புவதாக பிரமாணம் எடுத்துக்கொள்ள மறுக்கிறார்.

146 புதிதாக நியமிக்கப்பட்ட போப்பாண்டவர் என்ன சொல்கிறார்? அவர் மனதில் நான்கு காரியங்கள் உள்ளன. அவைகளில் ஒன்று கத்தோலிக்கரையும் பிராடெஸ்டெண்டுகளையும் ஒருங்கே இணைப்பதாகும். மனித அறிவு கொண்டு நோக்கும் யாருக்கும் இது சரியென்று தென்படும். ஆனால் வேதாகமத்தின்படி, அதைச் செய்வது தவறான காரியமாகும். அவர்கள் அதைச் செய்வார்கள் என்று வேதம் உரைத்துள்ளது.

147 நாம் இன்னும் சற்று பார்ப்போம். இந்த நேரத்தில் எகிப்தில் ராமசேஸ் வளர்ந்து வந்தான். அவனுடைய ஆதிக்கமும் வளர்ந்து வந்தது. மாம்சப்பிரகாரமான ராம்சேஸ் வளர்ந்து வந்தான்.

148 அது போன்று மாம்சப்பிரகாரமான மனிதன், அந்திக் கிறிஸ்து, இப்பொழுது வளர்ந்துகொண்டிருக்கிறான். அரசியலின் மூலமாக, அவன் ஏற்கனவே வெள்ளை மாளிகையில் நுழைந்து விட்டான். மார்க்க சம்பந்தமான விஷயங்களில் அவன் ஜனங்களை குழப்பியுள்ளதன் காரணத்தால், அவர்களனைவரும் அதை ஏற்றுக் கொள்வார்கள். ஸ்தாபன தலைவர்கள், தேசத்திலுள்ள ஒவ்வொரு ஸ்தாபனமும் சபைகளின் சங்கக் குழுவில் (Confederation of Churches) அங்கத்தினராகிவிட்டது. ராமசேஸ் வளர்ந்து வருகிறான். அவர்கள் எல்லாரும் ஒன்று சேருகின்றனர். அதைத்தான் அவர்கள் செய்ய வேண்டியவர்களாயுள்ளனர். பின்பு அது என்ன செய்கின்றது? அது ஒரு ஆதிக்கத்தை பிறப்பிக்கின்றது, முதலாவது தோன்றின மிருகத்தைப்போல்.

149 இந்த ஐக்கியத்தில் சேராத அனைவருக்கும் ஒரு துன்புறுத்தல் உண்டாகும், ஒரு விலக்கி வைக்கப்படுதல் உண்டாகும். அப்பொழுது அது மிகவும் தாமதமாகியிருக்கும், ஏனெனில் அதில் சேர்ந்தவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்கின்றனர். “அப்பொழுது நான் வெளியே வருவேன்” என்று சொல்ல வேண்டாம். அதை இப்பொழுதே செய்யுங்கள். ராமசேஸ் வளர்ந்து கொண்டிருந்தான்.

150 ஆனால் நினைவிருக்கட்டும், ராமசேஸ் எகிப்தில் ஆதிக்கத்தில் வளர்ந்துகொண்டு வந்த அதே சமயத்தில், தேவன் மோசேயை வனாந்தரத்தில் வைத்திருந்தார். அவனும் கூட வளர்ந்துகொண்டு வந்தான். ராமசேஸுக்கு ஒரு அரசியல் முறைமை இருந்தது. ஆனால் தேவனுக்கு ஒரு ஆவிக்குரிய முறைமை இருந்தது; அதன் கீழே ஒரு தீர்க்கதரிசி புறப்பட்டு வந்து ஜனங்களிடம் பேச ஆயத்தப்படுத்தினார்.

151 அவர்களிருவரும் ஒரே நேரத்தில் வளர்ந்து வந்தனர். ஒரு நாளில் இவ்விருவருடையே பலப்பரீட்சை உண்டாகும்.

அந்தப் பலப்பரீட்சை உண்டாகும் நேரம் வெகுதூரத்தில்லை. இயற்கையான... “இயற்கை சம்பவங்கள் ஆவிக்குரிய சம்பவங்களுக்கு முன்னடையாளமாயுள்ளன” என்று வேதம் கூறுகின்றது. அதிலிருந்து நீங்கள் தப்பமுடியாது. அங்குதான் உங்கள் காரியமே உள்ளது. உங்கள் கண்களுக்கு முன்பாகவே அது நிறைவேறி வருகின்றது. அது உண்மை. உண்மையான சபை வெளியே அழைக்கப்பட்டு வல்லமையைப் பெறுவதைப் பாருங்கள். பரிசுத்த ஆவியானவர் இறங்கி வந்து, தேவனுடைய இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டு ஒழுங்குபடுத்தப்படுகின்றன. புரிகிறதா? இங்கே அவள் ஏற்கெனவே வெள்ளை மாளிகையில் இருக்கிறாள்; உண்மையான சபை தாமே ஒன்றாக இணைந்து கொண்டிருக்கிறது, ஆமென், ஒரு ஸ்தாபனமாக அல்ல, எமோரியரின் அக்கிரமங்களின் கட்டுகளினின்று வெளியேறுகின்றது. ஜனங்கள் சுயாதீனம் பெறுகின்றனர். ஓ!

152 தம்முடைய தீர்க்கதரிசியாகப்போகும் மோசேயைத் தேவன் கொண்டிருந்தார். அவன் ஏற்கனவே தீர்க்கதரிசனம் உரைத்து, அவன் கூறியது சரியென்று நிரூபிக்கப்பட்டிருந்தபோதிலும், அவன் வனாந்தரம் என்னும் பள்ளியில் பயின்று, உலகத்தினின்று பிரிந்து மறைந்திருக்கவேண்டியதாயிருந்தது. ஆனால் அவன் அந்த வனாந்தரத்தில் பயிற்சி பெற்று பழக்குவிக்கப்பட்டான்.

153 சத்துரு எப்பொழுதுமே அவனுடைய முறைமையைத் தெரிவிப்பான். அவிசுவாசம் என்பது அதை ஏற்றுக்கொள்ளும், ஏனென்றால் சத்துரு உலகப்பிரகாரமான ஞானத்தின் அடையாளத்தைக் கொண்டிருக்கிறான்.

154 இப்பொழுது, இரண்டு வல்லமைகள் மாத்திரமே உள்ளன. இதை மறந்து போக வேண்டாம். இரண்டு வல்லமைகள் மாத்திரமே உள்ளன. ஒன்று பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய வல்லமை; மற்றொன்று உலகப்பிரகாரமான ஞானம் என்னும் வல்லமையின் மூலம் பிசாசு கிரியை செய்தல். ஏதேன் தோட்டத்தில் அவன் அதைக் கொண்டே நுழைந்தான், மாம்சீக ஞானத்தின் மூலம் அவன் நுழைந்து ஏவாளை, தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக, மாம்சீக ஞானத்தின் கருத்தை நம்பச் செய்தான். சிறுவரும் புரிந்துகொள்ளக் கூடிய அளவிற்கு அது அவ்வளவு வெளிப்படையாய் அமைந்துள்ளது. புரிகிறதா? புரிகிறதா? அந்தவிதமாகவே இது இதுவரைக்கும் தொடர்ந்து இருந்து வருகிறது.

155 இதோ அது எகிப்திலே இந்தக் காலையில் உள்ளது. அங்கு ராமசேஸின் மூலம் மாம்ச ஞானத்தின் வல்லமை கிரியை செய்து, அவனை ஆதிக்கத்திற்குக் கொண்டு வருகின்றது. அவன் யோசேப்பு செய்திருந்ததை அறியாமல், அந்தக் காலத்து சபை, துவக்கத்தில் செய்து வந்ததை செய்யக் கூடாதென்று அவர்களுடைய வழிபடும் உரிமையைப் பறிக்கிறான்.

156 இன்றும் நாம் அதையே காண்கிறோம், மாம்சீக ஞானத்தின் வல்லமை சபைக்குள் நுழைந்து, வேதம் கூறுவது என்னவென்று கவலைகொள்ளாத ஒரு மதத் தலைவனை எழுப்பியுள்ளது. அவர்கள் தங்கள் சொந்த முறைமைகளைக் கொண்டுள்ளனர். வேதம் கூறுவதையல்ல, அவர்களுடைய சபை கூறுவதை. பிராடெஸ்டெண்டுகளும், தங்களுடைய சிறு சிறு குழுக்கள் உட்பட எல்லோரும் அதனுடன் இணைந்துவிட்டனர், “ஆம், நிச்சயமாக. பாருங்கள், வேதம் *இதை* கூறுகின்றது என்று நான் அறிவேன். ஆனால் அந்த நாட்கள் கடந்துவிட்டன என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்” என்கின்றனர்.

157 “தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்கள்.” வேதத்தில் உள்ள ஒவ்வொரு வேதவாக்கியமும் அதையே சுட்டிக் காண்பிக்கின்றது.

158 இதை ஒலிப்பதிவு செய்து ஜனங்களுக்கு அனுப்பவேண்டுமென்று நான் விரும்பிய காரணம் உங்களுக்குப் புரிகின்றதா? அந்த மணி நேரம் வந்துவிட்டது! சத்தியம் அறிந்து கொள்ளப்பட வேண்டும். யாத்திரையின் தருணம் அருகாமையில் வந்துவிட்டது. புரிகிறதா?

159 மாம்ச ஞானம் பரிபூரணமாகிவிட்டது என்பது போல் காணப்படுகின்றது. அது பரிபூரணமாயுள்ளது, அது சரியாக உள்ளது, ஆனால் அது பரிபூரணமான சாத்தானின் ஆவியின் ஏவுதலாயுள்ளது.

160 அதன்பின்னர் மாம்சீக ஞானம் கொண்ட இந்த ராம்சேஸ் வளர்ந்து சிம்மாசனத்திற்கு வந்து கொண்டிருந்தான். பாருங்கள், அவன் மோசேக்கு ஒரு சகோதரனாக, அவன் மோசேயின் சகோதரனாக வளர்ந்து வந்தான் என்பதை நினைவில் கொள்ளவும். யோசேபுக்கும் அவன் சகோதரருக்குமிடையே உண்டாயிருந்த அதே தொடர்பு போன்று, இவ்விருவரில் ஒருவர் மாம்சீக ஞானம் என்னும் ஸ்தானத்தை வகிக்க வேண்டியதாயிருந்தது. யோசேப்பின் சகோதரர் யோசேப்புக்கு என்ன செய்தனர்? அவர்கள் அவனுடைய வார்த்தையை விலக்கி வைத்துவிட்டனர். வார்த்தையே தேவன். எனவே அவர்கள் வார்த்தையை விலக்கிவிட்டு, அதற்குப் பதிலாக மனிதக் கோட்பாடு ஒன்றினை ஏற்றுக்கொண்டனர். அந்தக் கோட்பாடு வல்லமையுள்ளதாய் வளர்ந்துவிட்டது.

161 ஓ, தேவனே, ஜனங்கள் இதைப் புரிந்துகொள்ளட்டும்! நான் இதற்குமேல் எப்படி என் சத்தத்தை உபயோகிக்க முடியும்? இதைக் காட்டிலும் வெளிப்படையாய், நாம் இங்கிருக்கிறோம் என்பதை பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலால் வேத வாக்கியங்களின் மூலம் எப்படி விவரிக்க முடியும்?

162 “ஓ” நீங்களோ, “பாருங்கள், இப்பொழுது, அது போப் ஜானிடமிருந்து அல்லது போப் *இன்னார்—இன்னாரிடமிருந்து*

அல்லது பேராயர் *இன்னார்—இன்னாரிடமிருந்து* அது வந்தால் நலமாயிருக்குமே” என்று நீங்கள் கூறலாம்.

ஆனால் தேவன் ஒரு அற்பமான வனாந்தரவாசியைத் தெரிந்து கொண்டார் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்களா?

நீங்களோ, “அப்படியானால் இது எங்ஙனம் தவறாயிருக்க முடியும்?” என்று கேட்கலாம்.

163 தேவன் தனிப்பட்ட நபருடன் ஈடுபடுகின்றாரேயன்றி, குழுவோடல்ல, தனிப்பட்ட நபர்களோடே; தேவன் தம்முடைய—தம்முடையவனை தெரிந்துகொள்கிறார், தம்முடையவனைத் தெரிந்துகொள்கிறார். அவர் கிரியை செய்ய தனிப்பட்ட ஒரு மனிதனே அவருக்கு வேண்டியதாயிருக்கிறது. அவருக்குத் தேவையெல்லாம் ஒரு மனிதனே. ஒவ்வொரு காலத்திலும் தனிப்பட்ட ஒரு மனிதனைத் தெரிந்துகொள்ள அவர் முயன்று வந்திருக்கிறார். அவர் ஒரு மனிதனைத் தெரிந்துகொள்ளக் கூடுமானால் போதுமானதாகுமே! நோவாவின் காலத்தில் ஒரே ஒரு மனிதனை மாத்திரம் அவர் இதற்கென்று தெரிந்துகொண்டார். எலியாவின் காலத்திலும் ஒரு மனிதனையேத் தெரிந்துகொண்டாரே! யோவான் ஸ்நானனின் காலத்திலும் அவர் ஒரு மனிதனையே தெரிந்துகொண்டார். அவருக்கு தேவையானதெல்லாம் ஒரு மனிதன்தான். நியாயாதிபதிகளின் காலத்திலும் அவர் சிம்சோன் என்னும் ஒரு மனிதனையே தெரிந்துகொண்டு அவனுக்கு மிகுந்த பலத்தை அளித்தார். அவனோ அதை ஒரு ஸ்திரீக்கு விற்றுபோட்டு, அதன் விளைவால் குருடாக்கப்பட்டான். அது நியாயாதிபதிகளில் உள்ளது, அவ்வண்ணமாயிருந்ததல்லவா? தேவனே நியாயாதிபதி, பாருங்கள்?

164 நீங்கள் பாருங்கள், இன்றைக்கு அவர் சத்தியத்தை உரைத்து, அதனோடு பயமின்றி தரித்திருந்து, அதனை முழுவதும் உரைத்து, ஸ்தாபன கோட்பாடுகளில் பங்குகொள்ளாத ஒரு மனிதனையே தன்னுடைய கரங்களில் வைத்துக்கொள்ள முயன்றுகொண்டிருக்கிறார். ஒரு மனிதனை அவருடைய கரங்களில் ஏந்திக்கொண்டு, அவருடைய வார்த்தை ஜீவனுள்ளதென்றும், அவரும் ஜீவிக்கிறார் என்பதையும் காண்பிக்க முடியும். அத்தகைய ஒருவனை அவரால் ஆயத்தம் செய்யமுடியும் என்பதை நான் நம்புகிறேன். நான் நம்புகிறேன். விசுவாசிக்கிறேன். நான்…வேதத்தை ஆதாரமாகக் கொண்டு சத்தியத்தை அறிவிக்கும் ஒரு மனிதனை அவரால் ஆயத்தம் செய்யமுடியுமென்று என்னால் உறுதியாக நம்பமுடியும். அது உண்மையே.

165 கொஞ்சம் கழித்து இந்த எல்லா பள்ளிகளினூடாக நாம் கடந்து சென்றதை நாம் கண்டறிகிறோம். இப்பொழுது கவனியுங்கள். சத்துரு ஏதோ ஒன்றை அறிவிக்கிறான், மாம்சீக ஞானம் கொண்டவர் அதை ஏற்றுக்கொள்கின்றனர், ஏனெனில் சத்துரு எப்பொழுதும் மனித

ஞானத்தின் பேரிலேயே கிரியை செய்கிறான். மனித சிந்தனை அதை ஏற்று, ஆரய்ந்து பார்க்கத் தலைப்பட்டு, “இப்பொழுது ஒரு நிமிடம் பொறுங்கள். அது அவ்வண்ணமாயில்லையா, அதாவது ஒரு ஆலோசனை…” என்று கூறுகின்றனர்.

166 அன்றொரு நாள் ஒரு மனிதனிடத்தில் பேசினேன். அவர், “பாருங்கள், பில்லி! அவர் பொது நிர்வாக நிறுவனத்தில் பணிபுரிகிறார், ஒரு அருமையான மனிதன்” என்றார். மேலும் அவர், “நான் உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். நீங்கள் அயர்லாந்து நாட்டவர்தானே?” என்று கேட்டார்.

நான், “ஆம் ஐயா, அதைக் குறித்து நான் வெட்கமடைகிறேன். ஆனால் அதே சமயத்தில் நான் அயர்லாந்துக்காரன்” என்று பதிலளித்தேன்.

167 அதற்கு அவர், “சரி, நீர் உண்மையான ஒரு கத்தோலிக்கனாக இருக்கவேண்டுமென்பது உமக்குத் தெரியாதா?” என்று கேட்டார்.

168 நான், “உ—ஊ, நான் மூல கத்தோலிக்கன், உ—ஊ” என்று விடையளித்தேன். முதலாம் சபை கத்தோலிக்க சபை என்று உங்களுக்குத் தெரியும்.

169 அது தற்பொழுது எந்நிலையடைந்துள்ளது என்பதை நீங்கள் காண்கிறீர்களா? அது பெந்தெகொஸ்தே நாளன்று தொடங்கினது. ஆனால் ஸ்தாபனங்கள் அதை இந்நிலைக்குக் கொண்டு வந்துவிட்டன. பெந்தெகொஸ்தேவைப் பாருங்கள். அதுவும் திரும்ப வந்து ஸ்தாபனமாக்கிக்கொண்டு, முதலாம் கத்தோலிக்க சபை செய்தது போல செய்தது. வார்த்தைக்கு அப்பாற்பட்ட கத்தோலிக்கரின் இன்றுள்ள நிலைமைக்கு இரண்டாயிரம் ஆண்டுகள் ஆனது, ஆனால் பெந்தெகொஸ்தேவின் இந்த நிலைமைக்கு ஐம்பது வருடங்கள் மாத்திரமே பிடித்தது.புரிகிறதா?

170 அவர் பின்னும், “மத சம்பந்தமான தலைவர்கள் கொண்ட குழு ஒன்று தங்கள் ஞானத்தினால் ஆலோசனை செய்து பொதுவான ஒரு முடிவுக்கு ஆமோதம் தெரிவித்தால், அது மிகவும் நன்றாயிருக்கும் என்று நீங்கள் நம்பவில்லையா? அவர்கள் சற்று…என்று நீங்கள் கருதவில்லையா? காரணம் உங்கள் பிரசங்கத்தைக் கேட்க நான் வருகிறேன். ஆயினும் உங்களிடம் இவ்விஷயத்தில் எனக்கு வித்தியாச பேதம் உண்டு” என்றார்.

171 அதற்கு நான், “அவ்வித வித்தியாசபேதம் நியாயமென்று நீங்கள் கருதினால் அதை வேதத்தைக் கொண்டு மாத்திரம் நீங்கள் நிரூபிக்க வேண்டும்” என்றேன்.

அவரோ, “வேதத்திற்கும் இதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை” என்றார்.

172 அதற்கு நான், “ஒருக்கால் நீங்கள் அத்தகைய கருத்து கொண்டிருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரையில்

ஏல்லாவற்றிற்குமே அதனோடு சம்மந்தமுண்டு. பாருங்கள், அது தேவனுடைய வார்த்தை” என்றேன்.

173 அவர், “கல்வியறிவு கொண்ட மதத்தலைவர்கள் ஒன்று கூடி ஆலோசனை செய்து முடிவுக்கு வருவது, சாதாரண படிப்பில்லாத உம்மைப் போன்ற நபரின் கருத்தைக் காட்டிலும் அது நிச்சயம் சரியாக அமைந்திருக்கும் என்று நீர் கருதவில்லையா?” என்று கேட்டார். நான், “இருக்கலாம்…” என்றேன். மேலும் அவரோ, “எங்கள்—எங்கள் சபைக்கு விரோதமாக பேசுவதற்கு உமக்கு என்ன வேலை? அங்கே ஒரு இரவு…நீர் பேசினது போன்று, முதல் சபை சங்கம் உருவானபோது, காலங்களினூடாக இருந்து வந்த…” அதாவது அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ரோமாபுரியிலிருந்த நிசாயாவில் ஒரு ஆலோசனை சங்கம் கூடி, ரோமன் கத்தோலிக்க சபையை ஸ்தாபித்தது என்பதையும், சபைக் காலங்களைக் குறித்து பிரசங்கித்ததையும் கேட்டேன். அப்பொழுது, “தேவனால் அனுப்பப்பட்ட, ஆவியைப் பெற்ற ஆயிரக்கணக்கானவர் அந்த ஆலோசனை சங்கத்தில் அமரவில்லையா? அவர்களுடைய சிந்தை, உம்மைக் காட்டிலும் மேலான விதத்தில், தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள ஏதுவுண்டாயிருக்கும் என்றும் சபை கூறுவது சரியானதே என்று தேவன் இந்த இரண்டாயிரம் ஆண்டு காலமாக நிரூபித்துள்ளார் என்று நீர் எண்ணிப் பார்க்கவில்லையா?” என்று கேட்டார்.

174 அப்பொழுது நான், “அவர் அதை ஒருபோதும் நிரூபிக்கவேயில்லை” என்றேன். மேலும் நான், “அந்த சபை ஒரு தேவனுடைய சபையாயிருக்குமானால், அப்பொழுது ஆதி சபை செய்த கிரியைகளைப் போன்ற அது செய்வதை நாம் பார்ப்போமே. அது முதலில் அவர்கள் செய்த காரியங்களை அது செய்வதை நாம் பார்ப்போம். வேதம், ‘வேதத்திலுள்ள ஒரு எழுத்தின் உறுப்பு கூட அவமாய்ப் போகாது’ என்று உரைக்கின்றது. அவர், ‘அதனுடன் ஒரு வார்த்தை கூட்டினால் அல்லது குறைத்தால் அவனுடைய பாகம் எடுத்துப் போடப்படும்’ என்று கூறியுள்ளார். அது உலக சபை ஆலோசனை சங்கம் அல்லது யாராயிருந்தாலும் சரி, ‘ஜீவ புஸ்தகத்திலிருந்து’ அவனுடைய பங்கு எடுக்கப்படும். அவன் முடிவுற்றுவிடுகிறான்.” என்றேன்.

அவரோ, “பில்லி, நீர் தவறாகக் கூறுகின்றீர்” என்றார்.

175 அப்பொழுது, நான் “ஒருகாலத்தில் இஸ்ரவேலர் இன்றுள்ளதைப் போல பிராடெஸ்டெண்டுகள், கத்தோலிக்கர் என்னும் சாராரைப் போன்று இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். இஸ்ரவேல் கோத்திரத்தார் அவ்வாறே பிரிந்து இருக்க விரும்பினர்” என்றேன். மேலும் நான் தொடர்ந்து, “அவர்கள் யோசபாத் என்னும் பெயர் கொண்ட ஒரு இராஜாவை உடையவர்களாயிருந்தனர் என்றும், அவன் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ள முயன்ற ஒரு நீதியுள்ள மனிதன் என்பதையும் நாம் கண்டறிகிறோம்.

ஆனால் ஆகாப் என்னும் பெயர்கொண்ட வேறொரு அரசனும் இருந்தான். அவன் அரசியல் காரணமாக மற்றொரு நாட்டுடன் நட்பு கொள்ள வேண்டும் என்பதற்காக வேறொரு நாட்டின் பெண்ணை, யேசபேல் என்பவளை மணந்து கொண்டு, அவளை தேவனுடைய ஜனங்களின் மத்தியில்...கொண்டு வந்தான்" என்றும் கூறினேன். நாம் செய்துகொண்டும், செய்து உள்ளே கொண்டு வந்துள்ளதுமான அதேக் காரியம். "அவள் ஆளுகை செய்பவளானாள். *இதை* சொல்ல, *அதை* சொல்ல அவள் ஆகாபைத் தூண்டினாள்." இப்பொழுது அவர்கள் அதேக் காரியத்தை செய்துகொண்டிருக்கிறார்கள். அப்பொழுது நான், "பலபரீட்சை உண்டானது" என்றேன்.

176 அவர்கள் இரு சபைகளையும் ஒன்றாக இணைக்க விரும்பினர், அதாவது இன்று அவர்கள் இப்பொழுது செய்ய முயன்று வருவது போன்றேயாகும். ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஆகாப் யோசபாத்தினிடம், "ஆம். அது அருமையாயிருக்கும். உம் ஜனங்கள் என் ஜனங்கள். நாமெல்லாரும் கிறிஸ்தவர்கள். நாம் அனைவருமே விசுவாசிகள். நாம் ஒன்று சேருவோம்" என்றான். ஆனால் அவன் பலப்பரீட்சைக்கு வந்தபோது, அவன், "இதைக் குறித்து நாம் ஜெபம் செய்ய வேண்டும் என்று நீர் நினைக்கவில்லையா? கர்த்தருடைய ஆலோசனையை நாம் பெற வேண்டும்" என்றான்.

ஆகாபும், "ஆம்" என்று கூறினான்.

எனவே யோசேபாத், "என்ன செய்ய வேண்டும் என்பதை நான் உனக்கு கூறுவேன். நாம் கர்த்தருடைய தீர்க்கதரிசியை கண்டுபிடிப்போம்" என்றான்.

177 ஆனால், நீங்கள் பாருங்கள், ஆகாபோ, கர்த்தரால் உண்டானதென்று அவன் கருதியிருந்த ஒரு முறைமையைக் கையாண்டிருந்தான். அவன் யோசபாத்திடம், "நன்கு பயிற்சி பெற்ற நானூறு தீர்க்கதரிசிகளை நான் கொண்டு வருகிறேன்." என்றான். அவர்கள் எபிரெய தீர்க்கதரிசிகளென்று தங்களை உரிமைகோருகின்றனர். இன்றுள்ள ஊழியக்காரக் குழுக்குள் செய்கிறது போலவே.

178 அவர்கள் அந்த தீர்க்கதரிசிகள் கொண்டு வந்தபோது, யுத்தத்தில் என்ன நேரிடுமென்று அவர்களைக் கேட்டனர். அவர்களனைவரும், உலகசபை ஆலோசனை சங்கம் இன்று செய்வதுபோல், ஒன்று கூடி, அவர்கள் கேட்டதற்கான பதிலை அளித்தனர். அதாவது, "நீங்கள் போங்கள், கர்த்தர் உங்களுடனே கூட இருக்கிறார். அந்த தேசம் உங்களுக்கே சொந்தமானது. அங்கிருந்து சீரியரை, இல்லை, பெலிஸ்தியரை வெளியே தள்ளுங்கள், ஏனெனில் தேசம் நமக்கு சொந்தமானது" என்றனர். அது மிகவும் நியாயமாகத் தென்பட்டது. புரிகிறதா?

179 ஆயினும் அதே சமயத்தில் யோசபாத்தின் இருதயத்தில் அது சரியென்றுபடவில்லை. அவன் ஆகாபிடம், "உம்மிடம் நன்கு

பயிற்சி பெற்ற நானூறு பேர் கொண்ட ஆலோசனை சங்கம் உண்டு என்பது எனக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் ஒரே சிந்தையுடையவர்களாயிருக்கின்றனர், அவர்கள் ஒரு ஜோடி இரும்புக் கொம்புகளை உண்டாக்கி, **'கர்த்தர் உரைக்கிறதாவது',** என்றும் கூறினார்கள். ஆனால் வேறு யாராகிலும் ஒருவரை நாம் கண்டறியக் கூடுமா?" என்று கேட்டான்.

180 ஆனால் அரசியல்வாதியான ஆகாப், "இராஜா, அப்படி சொல்லாதிருப்பீராக" என்றான். "இராஜா அப்படி சொல்லாதிருப்பாராக, ஏனென்றால் இவர்கள் அனைவரும் நன்கு பயின்றவர்கள். நானே அவர்களுக்குப் பயிற்சியளித்திருக்கிறேன்." அதுதான் இது. புரிகிறதா? அதுதான் இது. "நானே இவர்களுக்கு பயிற்சியளித்துள்ளேன். ஆனால் இன்னும் ஒருவன் இருக்கிறான். அவனை நான் வெறுக்கிறேன்" என்றான். புரிகிறதா? "அவன் பெயர் மிகாயா, இம்லாவின் குமாரன். அவனை நான் வெறுக்கிறேன். அவன் துரோகியல்லாமல் வேறல்ல. அவன் எப்பொழுதும் அவர்களிடத்தில் கடிந்து பேசிக்கொண்டிருக்கிறான். நான் தவறாயிருக்கிறேன் என்று அவன் எபொழுதும் என்னிடத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறான். என்னுடைய ராஜ்யத்தைப் பாருங்கள்" என்றான். ஆம், அந்த ராஜ்யத்தைப் பார்த்தால் எல்லாமே என்ன ஒரு குழப்பமாக அமைந்திருந்தது.

181 இன்றுள்ள உங்கள் ஸ்தாபனங்களைப் பாருங்கள், "அவர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களாயிருக்கின்றனர்." புரிகிறதா? ஓ, நீங்கள் பத்து இலட்சத்திற்கு மேல், ஆயிரத்துக்கு மேலான பேர்களைக் கொண்டவர்களாயிருந்து சிறந்த பயிற்சி பெற்றவர்கள் உங்களுக்கு இருக்கலாம். ஆனால் ஆவிக்குரிய விஷயத்தில் உங்கள் நிலையென்ன? சிம்சோன் பெற்றிருந்த வல்லமை உங்களிடம் எங்கே? அன்று நான் கூறினது போன்று, சிம்சோன் அங்கு நின்று கொண்டிருந்தபோது, அவனுடைய பெரிய தேக அமைப்பு கொண்ட ஒவ்வொரு நரம்பும் புடைத்திருந்த சரீரம் மாத்திரமே அங்கு இருந்தது. ஆனால் அதற்குள் ஜீவன் இல்லை. ஆவியானவர் அவனை விட்டுப் போய்விட்டார். அவன் உதவியற்றவனாயிருந்தான். சிறு பிள்ளை அவனுக்கு கைலாகு கொடுத்து நடத்தி சென்றது; கண்கள் குருடாக்கப்பட்டிருந்தன, இது அனைத்திற்கும் ஒரு ஸ்திரீயே காரணமாயிருந்தாள். இன்றைய ஸ்தாபன சபைகளும் அதே நிலையில் உள்ளன. அவர்கள் அரசியல் பேராயர்கள், மூப்பர்கள் போன்றவர்களால் வழி நடத்தப்படுகின்றனர். அவர்கள் சம்மந்தமில்லாத காரியத்தையே ஒவ்வொன்றிலும் செய்கின்றனர். நாம் எந்நிலையிலுள்ளோம்? எனவே நாம் இந்த இடத்திற்கு வரும்போது…

182 ஆகவே அவர்கள் இம்லாவை இல்லை இம்லாவை அல்ல; இம்லாவின் குமாரனாகிய மிகாயாவுக்கு ஆள் அனுப்பி அழைத்து

வந்தனர். ஆகாப் யுத்தத்திற்குச் சென்றால் அவன் கொல்லப்படுவான் என்று மிகாயா தீர்க்கதரிசனம் உரைத்தான்.

183 இதைக் கேட்ட பிரதம பேராயர் அவனைக் கன்னத்தில் அடித்தான். அவன் அதை உத்தமமாகவே செய்தான். அவன், “தேவனுடைய ஆவி என்னை விட்ட பின்பு எங்கு சென்றது?” என்று கேட்டான்.

அதற்கு மிகாயா, “நீ அதைக் காண்பாய்” என்றான். உ—ஊ. உ—ஊ.

184 ஆகாப், “இவனை சிறையில் வையுங்கள். இவனை உட்காவலறையில் வைத்து, இடுக்கத்தின் அப்பத்தையும், இடுக்கத்தின் தண்ணீரையும் இவனுக்குச் சாப்பிடக் கொடுங்கள். நான் சமாதானத்துடன் திரும்பி வரும்போது இவனைக் கவனித்துக் கொள்வேன்” என்றான்.

185 இமலாவின் குமாரன் மிகாயா தேவனுடன் சரியாக பொருந்தியிருப்பதை நன்கு உணர்ந்திருந்தான். ஏன்? ஏனெனில் அவன் கண்ட தரிசனம் தேவனுடைய வார்த்தையுடன் ஒன்றாக இணைந்தது. அவன் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தான். அவனுடைய ஆவியும் அவனுடைய தரிசனமும் தீர்க்கதரிசி எலியாவுக்கு இருந்ததைப் போலவே இருந்தன. எனவே அவன், “நீர் சமாதானத்தோடே திரும்பி வந்தால், கர்த்தர் என்னைக் கொண்டு பேசினதில்லை” என்றான்.

186 நான் இந்த நபரிடம், “யார் சரி? மனிதனால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒன்று கூடி அமர்ந்துள்ள இந்த நானூறு பேர் கொண்ட ஆலோசனை சங்கமோ, அல்லது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு, துரோகியெனக் கருதப்பட்ட ஒரு மனிதனா?” என்று கேட்டேன்.

“பாருங்கள்,” அவரோ, “பாருங்கள், எப்படி உங்களுக்கு வித்தியாசம் தெரியும்?” என்றார்.

187 நான், “திட்ட வரைப்படத்துக்கு செல்லுங்கள்!” என்றேன். ஒரு வரைபடமிருந்தாலொழிய நாம் ஒரு கட்டிடத்தை கட்ட எப்படி அறிவோம்? என்று கேட்டேன்.

188 அவர்கள் மாத்திரம் ஒரு நிமிடம் நின்று, தீர்க்கதரிசி எலியா ஆகாபை சபித்தான் என்பதை கண்டறிந்திருந்தால் நலமாயிருந்திருக்கும். “அவன் இரத்தத்தை நாய்கள் நக்கும்” என்று கூறியிருந்தான். “அவன் இரத்தத்தை நாய்கள் நக்கும்” என்று எலியா கூறியிருந்தான். அவன் உரைத்தவாறு, நாய்கள் அவன் இரத்தத்தை நக்கின. தேவன் சபித்திருந்ததை அவன் எப்படி ஆசீர்வதிக்க முடியும்?

189 தேவன் சபித்திருக்கிற எந்தக் காரியத்தையும் நீங்கள் எப்படி ஆசீர்வதிக்க முடியும்? அந்த காரியத்திலிருந்து வெளியே வாருங்கள்; அதிலிருந்து புறம்பே செல்லுங்கள். கிறிஸ்தவுக்குள்ளாக வாருங்கள். ஆமென்.

190 இப்பொழுது கவனியுங்கள். ஆனால் சத்துரு முன்மொழிவான். சத்துரு ஒரு காரியத்தை முன்மொழிந்து, அதற்கு ஆயத்தப்படுத்துவான். மாம்சப்பிரகாரமான சிந்தையோ "அது சரியே" என்று கூறும்.

191 இந்த அருமையான சகோதரனும் கூட அப்படித்தான். இந்த மனிதன், அவர், "பாருங்கள்...இங்கே பாருங்கள். உங்களுக்குத் தெரியுமா? அதாவது நாமெல்லோரும் ஒரே சபையாக இருந்துவிட்டால், நாம் சிதறப்பட்டுள்ளதைக் காட்டிலும் அது சிறந்ததாக இருக்குமல்லவா?" என்றார்.

192 கத்தோலிக்கர்களும் பிராடெஸ்டெண்டுகளும், அவர்கள் ஒருவருக்கொருவர் ஆமோதம் தெரிவிக்கும் ஆதாரத்தின் பேரில் ஒன்றாக இணைவது என்பது நியாயமாகத்தான் தோன்றுகிறது அல்லவா? ஆனால் "இரண்டு பேர் ஒருமனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ?" ஒரு சாரார் தெய்வீக சுகமளித்தலில் *இங்கே* விசுவாசம் கொள்ளாமலிருக்க, *மற்றொரு* சாரார் தெய்வீக சுகமளித்தலில் விசுவாசம் கொண்டிருக்க, *மற்றொரு* சாரார் அது வேறொரு காலத்துக்குரியது என்று கூறும்போது எப்படி உங்களால் இசைந்து செல்ல முடியும்? சிலரோ வேதத்தையே நம்புவது கூட கிடையாது. இவ்விருவரையும் ஒருங்கே இணைத்தால் உங்களுக்கு என்ன நேரிடும்? தேவன் குழப்பத்திற்கு ஆக்கியோன் அல்ல.

193 தேவன் தமது சபையை சீர்படுத்துவதற்கு முன்பாக அவர்கள் எல்லோரும் பத்து நாட்கள் இரவும் பகலும், "ஓரிடத்தில் ஏக சிந்தையுடன்" காத்திருந்தனர். பரிசுத்த ஆவியானவர் அவர்களுடைய வழிநடத்தும் தன்மையாக அப்பொழுது இறங்கி வந்தார், சபைகளின் ஆலோசனை சங்கம் அல்ல. புரிகிறதா? நீங்கள் இதைப் புரிந்துகொள்ளுகிறீர்கள் என்று நான் நம்புகிறேன். கவனியுங்கள்.

194 இந்த அவிசுவாசி தேவனுடைய வார்த்தைக்கு உண்மையில்லாதவனாய், தேவனுடைய வார்த்தை கூறுவது என்னவென்பதைக் கவனியாமல், அது கூறுவதை விசுவாசிக்காமல், மாம்ச சிந்தை கூறுவதை ஏற்றுக்கொள்கிறார். ஏவாளும் முதலாவதாக அதைத்தான் செய்தாள். அவளும் கூட தன் மாம்ச சிந்தை கூறுவதன் பேரிலேயே சார்ந்திருந்தாள்.

195 சாத்தான் அவளிடம், "இப்பொழுது, இங்கே பாருங்கள், அது நியாயமாகத் தென்படவில்லையா? தேவனுடைய வார்த்தை *அதைக்* கூறுகின்றது என்று எனக்கும் தெரியும். ஆனால் ஒரு நிமிடம் கேள். நன்மை தீமை என்னவென்பதை நீ அறிந்தாயானால் நலமாயிருக்குமல்லவா?" என்று கேட்டான்.

"ஏன்? ஆம்," என்று பதிலளித்தாள். அதன்பின்னர் ஏவாள் அதை ஏற்றுக் கொண்டாள். புரிகிறதா? நிச்சயமாக.

196 அப்படியே தான் அவர்களும் மாம்ச சிந்தை கொண்டு யோசனை செய்கின்றனர். அவிசுவாசம் என்பது அத்தகைய யோசனைக்கு வழிநடத்தும், ஆனால் விசுவாசமோ அதை தொடவும்கூட செய்யாது.

197 நம்முடைய விசுவாசத்தின் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு அது சரியென்றே தோன்றியிருக்காது. நாம் “கிறிஸ்துவுக்குள்” அவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். அறுபத்தைந்து வயது சென்ற கிழவிக்கு குழந்தை பிறக்கும் என்பது, முக்கியமாக அவன் அவளுடைய வாலிப பருவம் முதற்கொண்டு அவளுடன் வாழ்ந்து வந்திருக்கும்போது, நம்முடைய தகப்பனுக்கு அது யோசனையாயிருந்திருக்காதா? அவனுக்கு நூறுவயதாகி, அவளுக்குத் தொண்ணூறு வயதானபோது, அப்பொழுதும் அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. மருத்துவ வல்லுநர்களும், விஞ்ஞானிகளும் சாராளைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, யோசித்துப் பார்த்திருக்கமாட்டார்களா? “அவள் கர்ப்பம் உலர்ந்து விட்டது. நாற்பது ஆண்டுகளுக்கு முன்னமே அவளது பால் சுரப்பிகள் காய்ந்துவிட்டன” என்று கூறியிருப்பார்கள். அவளுடைய இருதயம் அந்த வயதில் பிரசவிக்ககூடாதபடிக்கு பலவீனமாயிருந்தது. இவையனைத்தும் மாம்ச சிந்தையின் யோசனைகள்தான்.

198 ஆனால் ஆபிரகாமோ அதை நம்ப மறுத்துவிட்டான். “தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவன் தடுமாறி எதிராக யோசிக்காமல், அது என்னவாயிருந்தபோதிலும் பொருட்படுத்தாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார் என்று அவன்—அவன் முழு நிச்சயமாய் நம்பினான்.”

199 இப்பொழுது, இந்தக் காலை ஆபிரகாமின் சந்ததியார் எங்கே? ஊழியக்காரர்களே, அந்த பாபிலோனை விட்டு வெளிவந்தால், உங்களுக்கு உண்ண உணவும் குடிக்கத் தண்ணீரும் கிடைக்காமல் வீதிகளில் இருக்க நேரிடும் என்று ஐயமுறுகின்றவர்களே, உங்கள் விசுவாசம் எங்கே? தாவீது “நான் இளைஞனாயிருந்தேன், முதிர்வயதுள்ளவனுமானேன்; ஆனாலும் நீதிமான் கைவிடப்பட்டதையும், அவன் சந்ததி அப்பத்துக்கு இரந்து திரிகிறதையும் நான் காணவில்லை” என்று கூறினான். ஆகவே பயப்படாதிருங்கள். கிறிஸ்துவுக்கு உண்மையாக இருங்கள்.

200 ஆனால் அவிசுவாசம் என்பது மாம்ச சிந்தையின் யோசனையை பிடித்துக்கொள்ளும். அதைத்தான் அது செய்தது. இப்பொழுது நீங்கள் அதைப் புரிந்துகொள்ளுகிறீர்களா? அவிசுவாசம் யோசனைகளின் பேரில், நிகழ்கால காரியங்களில் சார்ந்திருக்கும். ஆனால் விசுவாசமோ அதைச் செய்யாது.

201 விசுவாசம் தேவனுடைய வார்த்தையையே நோக்கிப் பார்க்கின்றது. ஆனால் விசுவாசம் அசைக்கமுடியாத கன்மலையாகிய தேவனுடைய நித்திய வார்த்தையின் பேரில் தன்னை வைக்கிறது. ஆமென். விசுவாசம் யோசனையை நோக்கிப் பார்ப்பதில்லை. அதைக் காட்டிலும் இதுவே மேலானது என்று நீங்கள் எவ்வளவுதான் காண்பித்தாலும், எனக்குக் கவலையில்லை. "அது தவறு" என்று வேதம் உரைத்தால், விசுவாசம் அதைத் தான் நம்பும். விசுவாசத்தினுடைய இளைப்பாறுதலின் ஸ்தலம் அதுவே.

202 லூத்தரன்களே, பாப்டிஸ்டுகளே, கத்தோலிக்கர்களே, இவ்வுலகிலுள்ள ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்களே, நீங்கள் எதைச் சார்ந்தவர்களாயிருந்தாலும், உங்களை இன்று காலை ஒன்று கேட்க விரும்புகிறேன். உங்கள் ஸ்தாபனங்கள் தேவனுடைய வார்த்தைக்கு முரணாக செயல்படும்போது, உங்கள் விசுவாசத்தை நீங்கள் எப்படி அவைகளின் பேரில் வைக்க முடியும்? உங்களுக்கு எத்தகைய விசுவாசம் உள்ளது? உங்களுக்கு மாம்ச சிந்தை கொண்டு யோசிக்கும் திறன் உள்ளதேயன்றி, விசுவாசம் கிடையாது, "விசுவாசம் கேள்வியினால் வரும்," மதபோதகர்களின் ஆலோசனைச் சங்கம் கூறுவதைக் கேட்பதனாலா? நீங்கள்… ஒருக்கால் அவ்விதம் வயோதிப ஸ்திரீகளின் பிறந்த நாள் பஞ்சாங்கத்தில் (Old Ladie's Birthday Almanac) எழுதப்பட்டிருக்கலாம். ஆனால் தேவனுடைய வார்த்தையில் அடிப்படையொன்றை நீங்கள் ஒருபோதும் காணமுடியாது.

203 "விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தை கேட்கிறதனாலே வரும்." ஆமென். யாராவது ஒருவர் அதற்கு முரணாகப் பேசி, அது தேவனுடைய வார்த்தை என்று கூறட்டும் பார்க்கலாம். "வானமும் பூமியும் ஒழிந்துபோம், ஆனால் தேவனுடைய வார்த்தையோ ஒருக்காலும் ஒழிந்துபோவதில்லை."

204 தேவனுடைய வார்த்தையே இளைப்பாறும் ஸ்தலம் என்பதை விசுவாசம் கண்டறிகிறது. அது வார்த்தையாகிய கிறிஸ்து இயேசு என்னும் நித்திய கன்மலையின் மேல் ஏறிச்சென்று உச்சியையடைந்து, அங்கு இளைப்பாறிக்கொண்டிருக்கிறது.பலத்த காற்று பயங்கர சத்தமிட்டு அடிக்கட்டும். புயல் வீசி அசைக்கட்டும். விசுவாசம் எப்பொழுதும் பாதுகாப்பாக உள்ளது. அங்கு அது வார்த்தையின்பேரில் இளைப்பாறிக்கொண்டிருக்கிறது. அங்குதான் விசுவாசம், அசலான உண்மையான விசுவாசம் இளைப்பாறுகிறது. அதற்கு இளைப்பாறும் தலமாய் வார்த்தை உள்ளது, ஏனெனில் தேவன் அவருடைய எல்லா சத்தருக்களைக் காட்டிலும் மேன்மையானவர் என்று நிரூபிப்பாரென்று அதற்குத் தெரியும். நிலைமை எவ்வளவு மோசமாயிருப்பினும், சத்துருக்கள் எவ்வளவாக சூழ்ந்துகொண்டாலும், நீங்கள் தோல்வியடைந்ததுபோல் தோன்றினாலும் விசுவாசம் என்பதற்கு அது வெற்றியடையும் என்று தெரியும்.

205 இப்பொழுது, வியாதியுள்ள ஜனங்களாகிய நீங்கள், ஓ, இதை எவ்வளவாக உங்களுக்கு அறிவுறுத்த விரும்புகிறேன்! நீங்கள் நிச்சயம் சுகமடையப்போகிறீர்கள் என்று விசுவாசித்து, அதை இறுகப் பிடித்துக்கொள்ளும்போது, எல்லா—எல்லா சூழ்நிலைகளும், மற்ற ஒவ்வொன்றும், எல்லா அடையாளங்களும், எல்லா அறிகுறிகளும் நீங்கள் மரித்துக்கொண்டிருக்கின்றீர்கள் என்று சுட்டிக் காட்டினாலும், நீங்கள் ஒருக்காலும் அசைக்கப்படுவதில்லையே! விசுவாசம், உண்மையான விசுவாசத்தின் புகலிடம், இளைப்பாறும் ஸ்தலம் தேவனுடைய வார்த்தையே; இப்பொழுது விசுவாசிப்பது போன்று காண்பிக்கும் பாவனை விசுவாசம் (Make-believe) அல்ல; உண்மையான விசுவாசம், நம்பிக்கை அல்ல; விசுவாசம். நம்பிக்கை *இங்கே* வெளியேறிவிடும். ஒருக்கால் இருக்கலாமே என நம்பிக்கை எண்ணி, சில சமயங்களில் வெளியே சென்றுவிடும். ஆனால் விசுவாசமோ உள்ளே நுழைந்து, "அது ஏற்கனவே நிறைவேறிவிட்டது" என்று கூறும். புரிகிறதா? அதுதான் விசுவாசம்! அங்குதான் விசுவாசம் இளைப்பாறிக்கொண்டிருக்கிறது, ஏனெனில் சத்துரு மேற்கொள்ள தேவன் ஒருக்காலும் அனுமதிக்கமாட்டார் என்று அதற்குத் தெரியும். அவர் ஒருபோதும் அப்படி செய்ததில்லை. விசுவாசம் அதை அறிந்திருக்கிறது, எனவே சூழ்நிலை எவ்வாறு காணப்பட்டாலும், அது எதையும் பொருட்படுத்துகிறதில்லை.

பேழை மிதக்கும் என்று நோவா நன்கு அறிந்திருந்தான். புரிகிறதா? நிச்சயமாக அறிந்திருந்தான்.

தேவன் சிங்கங்களின் வாயைக்கட்டிப் போடுவாரென்று தானியேல் அறிந்திருந்தான்.

அக்கினியின் உக்கிரத்தைக் கர்த்தர் எடுத்துப் போடுவாரென்று எபிரெயப் பிள்ளைகள் அறிந்திருந்தனர்.

206 தம்மை தேவன் மறுபடியும் உயிரோடெழுப்புவாரென்று இயேசுவுக்குத் தெரியும், ஏனெனில் "என் ஆத்துமாவை பாதாளத்தில் விடீர், உம்முடைய பரிசுத்தர் அழிவைக் காணவொட்டீர்" என்று தேவனுடைய வார்த்தை கூறியுள்ளது. அழிவு எழுபத்திரண்டு மணி நேரம் கழித்தே தொடங்கும் என்று அவருக்குத் தெரியும், எனவே "மூன்று நாட்களுக்குள் நான் உயிரோடெழுவேன்" என்று அவர் கூறினார். பாருங்கள்? தேவனுடைய வார்த்தை என்னும் புகலிடத்தில் அது நித்திய இளைப்பாறுதலை எடுத்துக் கொண்டது. அது அங்கே உறுதியாய் நின்றது.

207 ஆனால் மாம்ச சிந்தனையின் யோசனையோ, "பாருங்கள், *இந்த* முறைமை மேலானதாகக் காணப்படுகின்றது. *இது* தான் சரி" என்று அதனுடைய மிகச்சிறந்ததை அடையாளங் கண்டுகொள்ள முயற்சிக்கும். நீங்கள் மாம்ச சிந்தைக் கொண்டு யோசிப்பதினால் அது மேலானதாகத் தோற்றமளிக்கின்றது. விவேகத்தை நீங்கள் நிரூபிக்க முடியும்.

208 ஆனால் விசுவாசத்தை உங்களால் நிரூபிக்க முடியாது. காரணம், நீங்கள் அப்படி செய்ய முடிந்தால், அது விசுவாசமாயிராது. விசுவாசம் என்பது தேவனுடைய வார்த்தையையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் மாத்திரமே அறிந்திருக்கும். நீங்கள் காணமுடியாததை அது காண்கிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது." நீங்கள் உங்கள் மனித சிந்தை கொண்டு அதற்குக் காரணம் கண்டுபிடிக்க முடியாது. அது எப்படி செய்யப்படும் என்று என்னால் நிரூபிக்க முடியாது. அது எப்படி செய்யப்படப்போகிறது என்பது எனக்கு தெரியாது. அதைக் குறித்து எனக்குத் தெரியாது, ஆனால் நான் அதை விசுவாசிக்கிறேன். அது அவ்வண்ணமாயுள்ளது என்று நான் விசுவாசிக்கிறேன், ஏனென்றால் தேவன் அவ்வண்ணமாய்க் கூறினார். அத்துடன் அது முடிவு பெறுகின்றது.

209 அந்தக் காரணத்தினால்தான் அது சரியென்று எனக்குத் தெரியும். தேவனுடைய வார்த்தை உண்மை என்று எனக்குத் தெரியும்! செய்தி உண்மையென்று எனக்குத் தெரியும்! ஏனெனில் அது வார்த்தையில் இருக்கின்றது, மேலும் ஜீவிக்கின்ற தேவன் அதை நிரூபிக்கத்தக்கதாக அது மத்தியில் அசைவாடுவதை நான் காண்கிறேன். நாம் உண்மையாகவே, நிச்சயமாகவே ஒரு யாத்திரையில் இருக்கிறோம்.

210 மரணம் கூட விசுவாசம் என்பதை அசைக்க முடியாது. மனிதர் மரண நேரத்தில் நின்றுகொண்டு…மரண வாசலில் உயிர்த்தெழுதலின் வெற்றியை ஆர்ப்பரிக்க முடியும். பவுல், "ஓ, மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயம் எங்கே?" என்றான். பார்த்தீர்களா? "காரணம் கிறிஸ்து உயிரோடெழுந்தார். எனவே கிறிஸ்துவுக்குள் மரித்தவர்களையும் அவருடனே கூட அவர் கொண்டு வருவார்." பாருங்கள்? அது ஒருக்காலும் மாற முடியாது. ஆம்.

211 விசுவாசம் தேவனுடைய வார்த்தையை தனது நித்திய இளைப்பாறுதலின் புகலிடமாகக்கொண்டுள்ளது. அது தேவனுடைய வார்த்தையிலேயே நிலைகொள்கிறது. மறுபடியும் கவனியுங்கள்.

212 இப்பொழுது நமக்கு கிட்டத்தட்ட சற்று நீண்ட நேரம், இருபத்தைந்து நிமிடங்கள் உள்ளன. நீங்கள்—நீங்கள் பொருட்படுத்தாமலிருந்தால், [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] இந்த ஒலிநாடாவை இன்னும் சில நிமிடங்கள் பதிவு செய்யவே நான்—நான் விரும்புகிறேன்.

213 கவனியுங்கள், யோசேப்பை அறியாத ஒரு ராஜா, அந்த புதிய ராஜா எழும்பினான். இஸ்ரவேலின் வல்லமையை அழிக்க அவன் கையாண்ட முதலாவது திட்டம் எது? அது அவர்களுடைய பிள்ளைகளோடிருந்தது. அது சரியா? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] அவன் அவர்களுடைய பிள்ளைகளை அழிக்க முயற்சித்தான். இப்பொழுது கூர்ந்து கவனியுங்கள். அதே

பிசாசு வேறொரு ராஜாவின் உருவத்தில் தேவனுடைய ஒரே பேறான குமாரனை அழிக்கத் திட்டமிட்டான். பார்த்தீர்களா? “அவர்கள் ஏற்படுத்திய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்பு, முதலாவதாக குழந்தைகளை அழித்தல்.” பிசாசு மிகவும் சாமார்த்தியமுள்ளவன், புத்திக்கூர்மையான பறவையைப் போன்றவன். ஒரு காரியத்தைத் தொடங்குவதற்கு முன்பு, முதலில் எப்படி செய்யவேண்டுமென்று அவனுக்குத் தெரியும். அவன் அதை அறிந்திருக்கிறான். புரிகிறதா?

214 அவனை மேற்கொள்ள வேண்டுமானால் நீங்கள் செய்யவேண்டிய ஒன்றே ஒன்று, கிறிஸ்துவின் மேல் சார்ந்து, உங்களைத் தாழ்த்தி, அவர் உங்களை வழிநடத்த அனுமதிப்பதேயாகும். புரிகிறதா? வேறு எந்த வகையிலும் நீங்கள் அவனை மேற்கொள்ள முடியாது. உங்கள் புத்தி சாதுரிய வல்லமைகளால் ஒருபோதும் அதைச் செய்யவே முடியாது. நீங்கள் அதை விசுவாசிக்க வேண்டும். அவர் மேல் சார்ந்திருக்கவேண்டும். அவரே மேய்ப்பன். ஓநாய்களை விலக்குவது ஆடுகளின் வேலையல்ல. அது மேய்ப்பனுடைய வேலை. ஆனால் பாதுகாப்பாக இருக்க வேண்டுமானால், ஆடுகள் மேய்ப்பனுடன் கூடவே தரித்திருக்கவேண்டும். அதுவே என்னுடைய பாதுகாப்பு மண்டலம், அது கிறுஸ்துவுக்குள் இருக்கிறது. கிறிஸ்துவே வார்த்தை, அதுவே பாதுகாப்பான ஸ்தலம்.

215 கவனியுங்கள். ராமசேஸ் என்னும் ராஜாவின் உருவில் பிசாசு கிரியை செய்கின்றான். முதலாவதாக அவன் ஒரு மாம்சபிரகாரமான மரணத்தினால் பிள்ளைகளைக் கொன்றுபோட்டான். தேவனுடைய குமாரன் பிறந்தவுடனே...அவர் எகிப்தை விட்டு மாற்றப்பட்டார், ஏனெனில் தேவன் எகிப்தை அழித்துப்போட்டு, அதை சபித்தார். அதற்குப் பின்பு அது பழைய நிலைக்குத் திரும்பவேயில்லை. அப்பொழுது சாத்தான் ரோமாபுரியில் இருந்தான்; சாத்தான் தன்—தன் இருப்பிடத்தை ரோமாபுரிக்கு மாற்றிக் கொண்டான். ரோமாபுரி முதலாவதாக எல்லாவற்றையும் அழிக்க முற்பட்டது. நிச்சயமாக, ரோமாபுரி முறைமையில் குடிகொண்டிருந்த சாத்தான் (எதை?) அழிக்க முற்பட்டான்? முதலாவதாக தேவனுடைய குமாரனை. அதே பிசாசு தான்!

216 இன்றைக்கும் அவன், தன் ஆவியைக் கொண்டு கிறிஸ்தவ மதத்தைத் தழுவினவர்களின் மூலம் அதையே செய்துள்ளான். அவன் நமது பெண்களை கத்தோலிக்க வாலிபர்களுக்கு மணம் முடித்து கொடுத்து, கிறிஸ்துவத்தின் வல்லமையை முறியடிக்க எண்ணி, அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகளை கத்தோலிக்க விசுவாசத்தில் கொண்டு சேர்க்கிறான். அங்குதான் உங்கள் பிசாசு உள்ளது. அங்குதான் உங்கள் பிசாசு மூன்று கிரீடங்களைச் சூடிக்கொண்டு ஏழு குன்றுகளின் மேல் அமர்ந்திருக்கிறான், அவன் சர்ப்பத்தைப் போலவே தந்திரமுள்ளவனாகவும், சாமார்த்தியமுள்ளவனாகவும், புத்திசாதுர்யம் உள்ளவனாகவும் இருக்கிறான். அவன் பிள்ளைகள்

சர்ப்பத்தின் வித்து. அவன் அதே புத்திசாதுர்யமுள்ள முறைகளை இப்பொழுதும் கையாண்டு வருகிறான். பாருங்கள்.

217 அப்பொழுது, இருமுறை பிள்ளைகள் கொல்லப்பட்டனர். எதனைக் கொண்டு அவர்கள் பிள்ளைகளைக் கொன்றனர். இரண்டு முறை. இப்பொழுது நினைவிருக்கட்டும், அந்த இரண்டு முறை செய்ததையும், அதன்பின்னர் மூன்றாம் முறை செய்வதையும் கவனியுங்கள். புரிகிறதா? அவன் முதல் இரண்டு முறைகளிலும் பிள்ளைகளை உலகப்பிரகாரமான மரணத்தால் கொன்று போட்டான். ஆனால் இந்த கடைசி முறை அவன் பிள்ளைகளை ஆவிக்குரிய மரணத்தால், அவர்கள் ஒருவருக்கொருவர் விவாகம் செய்து கொள்வதன் மூலம் கொன்று போட்டுக்கொண்டிருக்கிறான்.

218 இந்த இரும்பும் களிமண்ணுமான இந்த ராஜ்யத்தில், அவர்கள் அந்த விதைகளை ஒன்றிணைத்து மற்ற மக்களின் வல்லமையை உடைக்க முயற்சித்துக்கொண்டிருந்தார்கள் என்ற அதே காரியத்தை தானியேல் கூறினானல்லவா? அதைத் தான் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள், அந்த காரியத்தை அவர்கள் பெற்றுக் கொள்ளும் வரை; இப்பொழுது ஒரு ஜனாதிபதியைக் கொண்டிருக்கிறார்கள்; அடுத்ததாக செய்ய வேண்டியது போப்பாண்டவருக்கு அடுத்த பதவியில் உள்ள ஒருவரை உள்ளே கொண்டு வருவது. முழு மந்திரி சபையையும் வைப்பது, பிறகு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்?

219 அடுத்தப்படியாக அவர்கள் தங்கள் பணத்தை எடுத்து, அமெரிக்கா பட்ட கடன்களை செலுத்தி தீர்த்துவிட்டு, சபையிலிருந்து கடன் வாங்குவார்கள். அப்பொழுது நீங்கள் விற்கப்படுவீர்கள். ஆம். இன்று நாம்—நாம் நமது வரிப்பணத்திலிருந்து அன்னிய நாடுகளுடன் பட்ட கடன்களைச் செலுத்தி வருகின்றோம். அதை செலுத்தித் தீர்க்க இன்னும் நாற்பது ஆண்டுகள் செல்லும். நம்மிடம் பணம் இல்லை. ஆனால் ரோம சபை அதிக செல்வத்தைப் பெற்றுள்ளது. "அவள் பொன்னினால் அலங்கரிக்கப்பட்டுள்ளதாக" வேதம் கூறவில்லையா? ஓ, என்னே! ஆனால் நீங்கள்…

220 உங்கள் குமாரத்திகளை கத்தோலிக்க பையன்களுக்கு மணம் முடித்து, பாருங்கள், அந்தவிதமாகத்தான் அது செய்கிறது, அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் கத்தோலிக்க முறைமைகளில் வளர்க்கப்படுகின்றனர். சரியாக அவர்கள் ஆவிக்குரிய மரணத்தால் கொல்லப்படுகின்றனர். "அவர்களை உலகமென்னும் கட்டில் கிடையாக்கி, அவளுடைய பிள்ளைகளை ஆவிக்குரிய மரணத்தால் கொன்றுபோடுவதாக" வேதம் உரைத்திருக்கவில்லையா? வெளிப்படுத்தின விசேஷம் 17-ம் அதிகாரம். பாருங்கள்?

221 இது எப்பொழுதுமே வார்த்தையாக உள்ளது. நீங்கள் எங்கே சென்றாலும் எனக்குக் கவலையில்லை, அது இன்னும் வார்த்தையாயுள்ளது. அந்த படத்தில் அது சரிவர பொருந்த

வேண்டும். அப்படி பொருந்தாவிட்டால். அது தேவனுடைய வார்த்தையல்ல, அது தேவனுடைய வார்த்தை அல்ல. நீங்கள் ஏதாகிலும் ஒன்றை நீங்கள் வேதாகமத்தினூடாக பொருத்த முடியாவிட்டால், அப்பொழுது அது தவறாயுள்ளது.

222 கவனியுங்கள், அந்த சமயத்தில் தேவன் தமது ஊழியக்காரனாகிய மோசேக்கு, தமது பணிக்காக பயிற்சியளித்துக் கொண்டிருந்தார். அவர்களுடைய கண்களுக்கு மறைவாகவும், அவர்களுடைய திட்டமிடுதல்கள், அவர்களுடைய திட்டங்களுக்கு அப்பாற்பட்ட விதத்தில் அவனுக்கு பயிற்சி அளித்தார். நீங்கள் அதை புரிந்துகொள்ளுகிறீர்களா? அவர்களுடைய ஸ்தாபன முறைமைகளுக்குப் புறம்பே தேவன் ஒரு மனிதனுக்கு தம்முடைய நோக்கத்திற்காக பயிற்சியளித்துக்கொண்டிருந்தார். அவன் விருப்பப்படி செய்ய முதலில் அவனை விட்டுக்கொடுக்கிறார். அவனை திருமணம் செய்யவிட்டு, அவன் தன் மனைவியையும், பிள்ளைகளையும், கெர்சோம் என்னும் பிள்ளையைப்பெற அவர் அனுமதித்தார். அவன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தி வந்தான், கர்த்தர் அவனை அங்கே ஆசீர்வதித்தார். ஆனாலும் அவர் எல்லா நேரத்திலும் அவனை ஆயத்தப்படுத்தி பயிற்சி அளித்துக்கொண்டே வந்தார்.

223 தேவனும் அவருடைய சத்துருவும், உலகப்பிரகாரமான விதத்தில் அப்பொழுது கிரியை செய்து வந்தனர். ஆனால் இப்பொழுது தேவனும் அவருடைய சத்துருவும் ஆவிக்குரியபிரகாரமாக கிரியை செய்து கொண்டிருக்கின்றனர். புரிகிறதா? அன்று உலகப் பிரகாரமான மரணத்தால் அவர்கள் கொல்லப்பட்டனர். இன்று ஆவிக்குரிய மரணம் எய்துகின்றனர். புரிகிறதா? தேவன் மாம்சபிரகாரமான ஒரு மனிதனை, தமது தீர்க்கதரிசியை எகிப்துக்கு அனுப்ப எண்ணி, அவனை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார். அதே சமயத்தில் சாத்தானும் தன்னைச் சார்ந்த மாம்சத்திலுள்ள ஒருவனை- ராமசேஸ் என்பவனை, பாருங்கள், ஒரு மாம்சபிரகாரமான மனிதனை ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தான். (எதற்காக?) அவர்களைக் கொன்று போடுவதற்காக: இல்லையேல், எகிப்தியரையும் எபிரெயரையும் ஒன்றாக இணைத்து, அவர்கள் எகிப்தியர்களை சேவிக்க செய்யவே.

224 அந்தக் காரணத்தினால்தான் மாம்ச சிந்தை இன்றைய கல்வி முறையை சுட்டிக்காட்டி நிரூபிக்கக்கூடிய செய்திக்கூறுகளுக்கு விரோதமாக யோசிக்கமுடியவில்லை. புரிகிறதா? அது உண்மை. மாம்சசிந்தை எப்பொழுதும் கல்வியையே நாடும். புத்திசாதுர்யமுள்ளவர்களும், அவர்கள் பெற்றுள்ள சிந்தையும், தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொள்ள முடிகிறதில்லை.

225 சிசில் டிமில் (Cecil Demille) என்பவரின் *பத்து கட்டளைகள்* (Ten Commandments) என்ற திரைப்படத்தை நீங்கள் பார்த்தீர்களா?

உங்களில் அநேகர் பார்த்திருப்பீர்கள் என்று நான் யூகிக்கிறேன். எனக்கு திரைப்படங்களைக் காண செல்வதில் விருப்பமில்லை. ஆனால் இந்த பத்துக் கட்டளைகள் என்ற திரைப்படத்தைக் காணும்படி நான் சபைக்கு பரிந்துரை செய்கிறேன். உங்களுக்கு வேறெந்த வேலையும் இல்லாமலிருந்தால், உங்களுக்கு ஆட்சேபனை இல்லையென்றால், நீங்கள் காணவிரும்பினால் பாருங்கள், ஏனென்றால் நான்…முதலாவது, சில சகோதரர் அதைப் பார்த்துவிட்டு வந்து, என்னிடம் கூறினார்கள். அநேக ஆண்டுகளாக நான் திரைப்படத்திற்குச் செல்வதில்லை. முடிவில் நான் சென்று அதைப் பார்த்தேன். அதில் என்ன உள்ளது என்பதைக் கண்ட பிறகே சபையோரிடம், “நீங்கள் அதைக் காண வேண்டுமானால் சென்று பாருங்கள்” என்று கூறினேன். அது நன்றாயிருந்தது. அது அழகானதும், அருமையாயுமாயிருந்தது.

226 பிசாசின் தந்திரம் எப்படி என்பது அதில் மிகவும் அழகாக படம் பிடிக்கப்பட்டுள்ளது. எப்படி குழந்தைகளைக் கொன்று போட அவன் புறப்பட்டது போன்ற காட்சிகள். மாம்ச சிந்தை, அந்த படத்தைக் கண்டு அதை எளிதில் நம்ப முடியும், ஏனென்றால் அவர்களால் அதைக் காண முடிகிறதே! அது அறிவிற்கு ஏற்புடையதாயிருந்தது. ஓ, எப்படியாய் தேவன் இந்தத் தீர்க்கதரிசிக்கு எல்லா நேரத்திலும் பயிற்சி அளித்து கொண்டிருந்தாரே! அதே சமயத்தில் எகிப்து ராமசேஸுக்கு, அவனை ராஜாவாக்க, அரசியலில் பயிற்சி அளித்துக்கொண்டிருந்தே! ஒரு நாள் மாம்ச சிந்தையின் வல்லமைக்கும் ஆவிக்குரிய வல்லமைக்குமிடையே ஒரு பெரிய போட்டி உண்டானது. ராமசேஸ் தன் தெய்வங்களை வழிபட்டு, அங்கு நின்றுகொண்டு, நீல நதியின் தெய்வத்திற்குத் தண்ணீர் வார்க்கிறான். கர்த்தர் அவனை அடிக்கிறார், அவனிடமிருந்து இரத்தம் வெளிவருகின்றது. அவன்…ஓ, பாருங்கள், அந்த திரைப்படத்தில் காணும்போது, அது மிகவும் அற்புதமாய் உள்ளதே என்று நான்—நான் எண்ணினேன். ஓ!

227 இப்பொழுது கவனியுங்கள். மாம்ச சிந்தை கொண்டவர்கள் எப்பொழுதும் அவர்கள் அறிவின் பேரிலேயே சார்ந்திருப்பார்கள். மாம்ச புத்திக்கூர்மை ஆவிக்குரியப் பக்கத்தை புரிந்துகொள்ள முடியாது, ஏனென்றால் அது அறிவுக்கூர்மையாகும். ஓ, மற்றெந்த காலத்திலும் அவ்வாறே இருந்து வருகின்றது. இப்பொழுதும் கூட அவர்களால் அதைக் காண முடிகிறதில்லை.

228 எலியாவின் காலத்தில் அவர்களால் அதை அறிந்துகொள்ள முடியவில்லை. எப்படி இந்த அவலட்சணமான முகம் கொண்ட வயோதிப தீர்க்கதரிசி…

இப்படி கூறினதற்காக தேவன் என்னை மன்னிப்பாராக. ஆனால் நான்—நான் தவறாக…நீங்கள் தேவனுடைய ஆவியானவரைக் காண வேண்டுமென்று கருதியே நான் எலியாவின் தோற்றத்தை

ஏளனமாகக் கூற முயற்சித்துக் கொண்டிருக்கிறேன் என்பதை தேவனறிவார்.

229 பவுல் கூறினது போன்று, “நான் உங்களிடம் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனத்துடன் வரவில்லை. அப்படி செய்திருந்தால், உங்கள் சிந்தை மனுஷ ஞானத்திற்கு திசை திரும்பியிருக்கும். உங்கள்—உங்கள்—உங்கள்—உங்கள் விசுவாசம் மனுஷ ஞானத்திலல்ல, இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையில் நிற்கும்படிக்கு, நான் இப்பொழுது காணப்படும் பரிசுத்த ஆவியின் வல்லமையுடன் வந்திருக்கிறேன்.”

230 எனவேதான் தேவனுடைய மகத்தான தேவபக்தியான தீர்க்கதரிசியை “ஒரு அவலட்சணமான முகங்கொண்டவன்” எனக்கூறி மிகவும் ஏளனப்படுத்துகின்றேன். காரணம் சிறந்த ஆடையணிந்த ஒரு ஆசாரியனின் பக்கத்தில் நிற்கும்போது, அவன் அவலட்சணமாகத்தான் காட்சியளித்திருப்பான். அப்படியிருந்தும் அவன் தன்னை ஒரு தேவனுடைய மனிதன் என்று அழைத்துக் கொண்டான்.

231 அவனை நோக்கிப் பாருங்கள். மாம்ச சிந்தையில் உங்களால் அந்த ஆசாரியனின் பரிசுத்தத்தைக் காண முடியும். அவன் தலைப்பாகை அணிந்தவனாய், *இங்கே* மார்பில் ஏபோத்தைத் தரித்துக்கொண்டுள்ளதை நீங்கள் பார்க்க முடியும். அந்த அபிஷேகத் தைலம் தாடியின் வழியாய் ஓடி, அவனுடைய அங்கியின் ஓரத்தை அடைவதை நீங்கள் காணமுடியும். அவ்வாறே பலியின் அக்கினி எரிந்து கொண்டிருப்பதையும், எல்லா ஆச்சாரங்களும் சரியான முறையில் அமைந்திருப்பதையும் நீங்கள் காணமுடியும். மாம்ச சிந்தையுள்ளவனுக்கு இவைகள் தாம் தேவையாயிருக்கின்றன.

232 இன்றைக்கும் அதைதான் அவர்கள் செய்து கொண்டிருக்கின்றனர். ஆத்துமாவிற்கு கண் வாசலாக அமைந்துள்ளது. ஆனால் நீங்கள் பாருங்கள், இந்தக் கண், இயற்கைக் கண்ணுக்குப் பின்னால் உள்ள ஆவிக்குரிய கண்ணாயிற்றே!

233 இந்த அவலட்சணமான தோற்றமளிக்கும் மனிதன், தன்னுடைய மார்பில் முடியோடும்; ஒரு பெரிய ஆட்டுத்தோலை தன்னை சுற்றிப் போர்த்துக்கொண்டு, அரையில் கச்சைக்கட்டிக் கொண்டு, அநேகமாக வெறுங்காலில் நடந்து, மெலிந்த கைகளையுடையவனாய், முதிர்வயது காரணத்தால் தசைகளெல்லாம் *இந்தவிதமாய்* தொங்கி, நரைத்த தாடி அவன் முகத்தில் வளர்ந்து, கோணலான கொம்பு ஒன்றைக் கையில் பிடித்துக்கொண்டு அங்கு நின்று கொண்டுடிருப்பதைக் அவர்கள் கண்டனர். ஆனால் ஆவிக்குரிய கண், அந்த சரீரத்திற்குள் தேவனுடைய வல்லமை அசைவாடுவதைக் கண்டிருக்கும், ஏனெனில் அது தேவனுடைய வார்த்தையுடன் பிழையின்றி இணைந்திருந்தது. அறிவுக் கூர்மை எதைக் காண்கிறது என்பதல்ல; ஆவிக்குரிய கண்கள் எதைக் காண்கின்றன என்பதே முக்கியமாகும்.

234 இன்றைக்கு மாம்ச கண் ஒரு பகட்டான ஸ்தாபன சபையையும், நகராண்மைக் கழகத் தலைவருடன் ஐக்கியங்கொள்ளுதலையும் கண்டு, இந்த ஸ்தாபனங்களின் அமைப்புகளில் உள்ள எதையெல்லாமோ காணுகிறது. மரித்தோரை உயிரோடெழுப்புதல், வியாதியஸ்தரை சுகப்படுத்துதல் போன்ற பரிசுத்த ஆவியின் வல்லமையை அவர்கள் காணத் தவறுகின்றனர். எப்படி…புரிகிறதா? அவர்கள்—அவர்கள் ஹாலிவுட்டின் நடத்தைகளையும், தெருக்களில் செல்பவரின் அலங்காரத்தையும் மாத்திரமே கவனிக்கின்றனர்.

235 இன்றுள்ள பெண்கள், "பாருங்கள், சுசி என்னும் பெயர் கொண்ட *இந்த* பெண்ணும் கூட சபையை சேர்ந்தவள்தான். அவள் தன்னுடைய தலைமுடியைக் கத்தரித்துக்கொண்டிருக்கிறாள். அவள் முகத்தில் வர்ணம் தீட்டிக்கொண்டிருக்கிறாள். பட்டிணத்திலுள்ள அனைவரும் அவளை விரும்புகின்றனர்" என்றெல்லாம் எண்ணுகின்றனர்.

236 ஆனால் பரலோகத்தில் எப்படியிருக்கும் என்று நான் யோசிக்கிறேன்? புரிகிறதா? தேவனுடைய வார்த்தைக்கு அது முரணாக அமைந்திருந்தால், தேவன் அதை ஒருபோதும் ஆமோதிக்க முடியாது. அப்படியானால் அவர்—அவர் தமக்கு விரோதமாகவே அதை ஆமோதிக்க நேரிடும். அப்படியானால் அவர் தமது சொந்த வார்த்தையை மறுதலிக்கும் நிலைக்கு ஆகிவிடும். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும், தேவன் அவ்விதம் ஒருக்காலும் செய்யார் என்பது அறியப்படுவதாக. தலைமுடியைக் கத்தரித்துள்ள, அல்லது ஆண்களின் உடையை அணிந்துள்ள எந்தப் பெண்ணும் தேவனுடைய பார்வையில் ஒரு சாபமாயிருக்கிறாள். புரிகிறதா? ஆவிக்குரிய கண் அதை புரிந்துகொள்கிறது. அவர்கள் இனிவரப்போகும் காலத்திற்காக வாழ்கின்றனர். ஆனால் மாம்ச சிந்தையோ, அதன் சிந்தனையின்படி, இன்றுள்ள மாம்சப் பிரகாரமான காரியங்களுக்காக யோசித்துப் பார்த்து வாழ்ந்துகொண்டிருக்கின்றது.

237 இப்பொழுது கவனியுங்கள், தேவன் கிரியை செய்துகொண்டு வருகின்றார். ஆனால் ஜனங்களோ அதை அறிந்துகொள்வதில்லை, மாம்சசிந்தை தனது யோசனையின்படி செயல்புரிகின்றது. இப்பொழுது தேவன் ஜனங்களை ஒரு ஆவிக்குரிய யாத்திரைக்காக அழைத்துக்கொண்டிருக்கிறார். உலகப் பிரகாரமான யாத்திரை ஒன்றுக்காக அவர் அன்று தமது ஜனங்களை அழைத்தார். ஆனால் இன்றோ ஆவிக்குரிய யாத்திரைக்காக, (யாருடையவர்களை?) தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களை, தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்டவர்களை மாத்திரமே அழைத்துக்கொண்டிருக்கிறார்.

238 இஸ்ரவேல் ஜனங்கள் செய்வது சரியென்று எகிப்தியரால் உணர்ந்துகொள்ள முடியவில்லை. ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசல்களிலும் நிலைக்கால்களிலும் பூசப்பட்டு காரியங்கள் சம்பவித்துக்கொண்டிருந்தன.

239 அங்கே கர்த்தர் தமது தீர்க்கதரிசிக்குள் அசைவாடி, ஒரு மனிதனுடைய வார்த்தையை ஏற்று நிறைவேற்றினார். மோசே அங்கு எழும்பி நின்று, அவன் சாய்ந்துகொண்டிருந்த அந்த கோலை எடுத்து கிழக்கு திசைக்கு நேராக நீட்டி, “வண்டுகள் எகிப்தியரின் மேல் சூழந்துகொள்ளக்கடவது” என்று கட்டளையிட்டு சென்றுவிடுவான்.

அப்பொழுது அதைக் கேட்கிற ஒவ்வொருவரும் “ஒன்றுமே சம்பவிக்கவில்லை. ஒன்றுமே சம்பவிக்கவில்லை” என்று கூறுவார்கள்.

240 ஆனால் சிறிது நேரத்தில் ஒரு பச்சை வண்டு பறந்து வந்து வட்டமிட்டிருக்கும். சிறிது நேரத்தில் ஒரு சதுர கெஜத்திற்கு இரண்டு பவுண்டு எடையுள்ள வண்டுகள் என்ற அளவில் வண்டுகள் அங்கு நிரம்பின. ஒரு மனிதன் பேசி வண்டுகளை சிருஷ்டித்து, அவைகளை வரவழைத்தான்.

241 அறிவு நிறைந்த ராமசேஸ் அதற்கு எதிராக அங்கு நின்று கொண்டிருந்தான், அவன் மிகவும் பக்தியுள்ள ஒரு மனிதன், அவன் ஜீவனுள்ள தேவனுடைய ஆவிக்கு எதிராக இருந்தான். மாம்ச சிந்தையால் ராமசேஸை மாத்திரம் காணமுடியும். ஆனால் ஆவிக்குரிய சிந்தையோ வாக்குத்தத்தம் அங்கு நிறைவேறுவதைக் காண்கின்றது.

242 யோசுவாவும் காலேபும், அமலேக்கியர், ஏவியர், எபூசியர் போன்றவர் அங்கு இல்லாதவர் போலவே கருதினர். இவர்கள் இஸ்ரவேலரைவிட உருவத்தில் இரண்டு இல்லை மூன்று அல்லது நான்கு பங்கு பெரிதாகக் காணப்பட்டனர். காதேஸ் பர்னேயாவுக்குச் சென்ற மாம்ச சிந்தை கொண்ட வேவுக்காரர்கள் அங்கு சென்றபோது, அவர்களுடைய தோற்றத்தைக் கண்டு, மனித சிந்தை கொண்டு, “ஆ, நம்மால் முடியாது. நாம்…அவர்கள்—அவர்கள் மிகப் பெரியவர்களாயிருக்கின்றனர். நாம்—நாம் அவர்களுக்கு பக்கத்தில் வெட்டுக்கிளிகளைப் போல் இருக்கிறோம்.” என்று கூறினர்.

243 ஆனால் யோசுவாவும் காலேபும் தேவனுடைய வாக்குத்தத்தத்தை மாத்திரம் நோக்கிப் பார்த்து, “நாம் அவர்களை எளிதில் வென்று விடலாம்” என்றனர். ஏன்? அவர்கள், “உங்களுக்கு அந்த தேசத்தை அளிப்பேன் என்று தேவன் கூறியிருந்ததை” மாத்திரமே நோக்கிக் கொண்டிருந்தனர். புரிகிறதா? மாம்ச சிந்தைக்கு இது புரியாது. ஆனால் ஆவிக்குரிய சிந்தையோ இதை கிரகித்துக் கொள்கிறது.

244 ஏன்? உங்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். எகிப்தியர்கள் ஏன் இந்தக் காரியங்களைப் புரிந்து கொள்ளவில்லை? ஏனெனில் அவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்படவில்லை. அது சம்பவிப்பதற்கு முன்னமே தேவன் ஆபிரகாமிடம் கூறினார். உறங்கிக் கொண்டிருக்கும் சபையே, இதைப் புரிந்துகொள்! தேவன் ஆபிரகாமிடம் அது சம்பவிப்பதர்கு முன்னமே, “உன்

சந்ததியார் எகிப்தில் நானூறு வருஷம் பரதேசிகளாயிருப்பார்கள். நான் அவர்களை வெளியே கொண்டு வருவேன்” என்று கூறியிருந்தார். அந்தக் காரணத்தினால் அவர்கள் அதைக் கண்டனர், ஏனென்றால் அதைக் காணும்படி அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டிருந்தனர். அவர்கள் தெரிந்துகொள்ளுதலில் இருந்தனர். தேவனுடைய அடையாளத்தைக் காண இஸ்ரவேல் ஜனங்கள் தெரிந்துகொள்ளப்பட்டனர். அவர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்தனர். ஆனால் அவிசுவாசிகளோ எகிப்திலே மாண்டுபோயினர்.

245 இன்றைக்கும் தேவனுடைய வார்த்தையில் ஆபிரகாம் கொண்டிருந்த விசுவாசத்தின் மூலம் அவருடைய தெரிந்து கொள்ளப்பட்ட, ஆவிக்குரிய ஆபிரகாமின் சந்ததியை தேவன் அழைத்துக்கொண்டிருக்கிறார். இன்றுள்ள ஆவிக்குரிய சந்ததியாரை உங்களால் காண முடிகின்றதா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] அது மனித ஞானம் கொண்ட ஸ்தாபனங்களைப் பார்க்கிறதில்லை. அது தேவனுடைய வார்த்தையையே நோக்கிப் பார்க்கிறது. அவர்கள் இந்த பெரிய ஸ்தாபனங்களிலிருந்து வெளியே அழைக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவின் சமூகத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். ஆமென். உங்களுக்கு அது தெளிவாயுள்ளதா? நீங்கள் அதை புரிந்து கொண்டீர்களா? [“ஆமென்.”] சரி, நாம் மேலும் தொடருவோம். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே!

வேத பாண்டித்தியம் பெற்ற பண்டிதர்களால், அவர்கள் இதை ஒருபோதும் காண்கிறதில்லை. அவர்கள் தெரிந்து கொள்ளப்படவில்லை.

246 நினைவிருக்கட்டும், இப்பொழுது நிகழவிருக்கும் இந்த தெரிந்து கொள்ளுதல் வேறொரு தேசத்திற்கு கொண்டு செல்லாது: அது மகிமைக்குக் கொண்டு செல்லும். அங்கே அவர்களுடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. இஸ்ரவேல் ஜனங்களை வெளியே கொண்டு வந்த இயற்கை ஆட்டுக்குட்டியின் கீழல்ல; அவர்கள் பின்வாங்கிப் போக நேர்ந்தது. ஆனால் இதில் அப்படி நிகழ முடியாது. ஏனெனில் இது உலகத் தோற்றத்துக்கு முன்னால் அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழுள்ளது. உலகத்தோற்றத்துக்கு முன்பே அவர்களுடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டுவிட்டன. தெரிந்து கொள்ளப்பட்ட அவர்கள் ஸ்தாபனங்களுக்குள் இருந்தனர். ஆனால் வெளிச்சம் அவர்கள் மேல் பிரகாசித்தவுடனே அவர்களைச் சுற்றிலுமிருந்த ஸ்தாபன சுவர்கள் இடிந்து விழுந்தன. இங்கே அவர்கள் வெளியே வந்தனர். “அவர்களை விட்டு வெளியே வாருங்கள்” என்று இக்கடைசி நாட்களில் பரிசுத்த ஆவியானவர் கூறினார். “அசுத்தமானதைத் தொடாதிருங்கள். நான்

உங்களுக்கு தேவனாயிருப்பேன். நீங்கள் எனக்குக் குமாரரும் குமாரத்திகளுமாயிருப்பீர்கள்.” இப்பொழுது, கவனியுங்கள்.

247 இஸ்ரவேல் ஜனங்கள் கவனித்துக்கொண்டே வந்தனர், தேவன் தீர்க்கதரிசிகளுடன் ஈடுபட்டார் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர்கள்...வார்த்தை தீர்க்கதரிசிகளிடத்திற்கு வருகின்றது என்றும், அவர்கள் அதைப் புரிந்துகொள்கின்றனர் என்றும் அறிந்திருந்தனர். அவர்கள் அதைக் கண்டனர்.

248 இப்பொழுது மனித ஞானத்தின் அடையாளத்தை நாம் இப்பொழுது காண்கிறோம். அவர்கள் தங்கள் ஸ்தாபனங்களின் மீது நம்பிக்கை கொண்டுள்ளனர். அவர்கள் இன்னும் ஸ்தாபனக் கோட்பாடுகளில் நிலைகொண்டுள்ளனர். அதே சமயத்தில் அவர்கள்...

249 பிலேயாமைப் போன்று, இஸ்ரவேல் ஜனங்களைக் காண்பதற்காக அவன் ஒரு மலைமேல் ஏறுகின்றான். இஸ்ரவேலர் ஒரு தேசமாக இராமல் ஒரு ஜனக்கூட்டமாக அங்குமிங்கும் நகர்ந்து, மோவாபியரின் தேசத்தில் நுழையும் குற்றத்தைச் செய்தவர்களாகக் கருதப்பட்டனர். அவர்களுடைய சகோதரராகிய மோவாபியர் புத்திசாதுரியமுள்ளவர்கள், தங்களை ஸ்தாபித்துக் கொண்டவர்கள், அவர்களுடைய ராஜா பிலேயாம் என்னும் இப்பேராயருடன், அல்லது தீர்க்கதரிசியுடன், மலையின் உச்சியை அடைகிறான். அவர்கள் அங்கு ஒரு பலிபீடம் கட்டி, இஸ்ரவேலர் வழக்கமாக செலுத்தும் அதே பலிகளை செலுத்தினர். ஆனால் அவர்கள் இஸ்ரவேலரின் மத்தியிலிருந்த அக்கினி ஸ்தம்பத்தையும், அடிக்கப்பட்ட கன்மலையும் காணத் தவறினர்.

250 இன்றைக்கும், அது அவ்வாறே இருக்கின்றது. மனித சிந்தை அங்கு நின்றுகொண்டிருந்த புகழ்வாய்ந்தவனைக் கண்டு கொண்டிருந்தது. ஆனால் அவர்கள் அடிக்கப்பட்ட கன்மலையைக் காணத்தவறினர். பேராயரும் கூட பரிசுத்த ஆவியின் வல்லமையையும், பாளயத்திலுள்ள ராஜாவின் ஜெய கெம்பீரத்தையும் காணத் தவறினான். அவர்கள் அதைக் காணத் தவறுகின்றனர்.

251 எனவே இன்றைக்கு அது மறுபடியும் அந்தவிதமாகவே உள்ளது. தேவன் தம்முடைய தெரிந்துகொள்ளப்பட்டவர்களை அழைத்துக்கொண்டிருக்கிறார். அவர்கள் இப்பொழுது தெரிந்துகொள்ளப்பட்டவர்கள். எதற்காக அவர்கள் தெரிந்து கொள்ளப்பட்டனர்? உயிர்த்தெழுதலுக்காகவே. எவ்விதமான ஒரு அடையாளத்தை அவர்களுக்கு அவர் காண்பிக்கிறார்? உயிர்த்தெழுதலின் அடையாளத்தை.

252 அப்பொழுது எந்த அடையாளத்தை அவர் காண்பித்துக்கொண்டிருந்தார்? அடிமைத்தனத்திலிருந்து அவர்களை விடுவிக்கும்படியான ஒரு விடுதலையின் அடையாளத்தை,

வானத்தை அடைக்கக்கூடிய அல்லது ஆகாயத்தை கருமையாக்கக் கூடிய ஒரு வல்லமையின் அடையாளத்தையே.

253 இந்தக் கல்லறையிலிருந்து அவர்களை உயிரோடெழுப்பவுதற்கென, நாம் இருக்கும் கல்லறைத் தோட்டத்திலிருந்து, அவர் நமக்கு வாக்களித்துள்ள தேசத்திற்கு செல்வதற்காக இப்பொழுது அவர் அவர்களுக்கு மத்தியில் ஜீவித்துக்கொண்டிருக்கிற தம்முடைய குமாரனின் உயிர்த்தெழுதலின் வல்லமையைக் காண்பித்துக்கொண்டிருக்கிறார். உயிர்த்தெழுதலின் அடையாளம், ஆவிக்குரிய எகிப்திலிருந்தும், ஆவிக்குரிய பாபிலோனிலிருந்தும் வெளியே வரும்படி அழைக்கின்றது என்பதை அறிந்துகொள்ளுதல்…

254 நீங்கள் இதை கிரகித்துக் கொள்ளும்படியாக நான் இதை அமைதியாகக் கூறுவேனாக. துவக்கத்தில் அவர் செய்த அதே முறையினால் அவர் செய்துகொண்டிருக்கிற அதேக் காரியத்தைச் செய்கிறார். அவிசுவாசிகளின் கண்களைக் குருடாக்கி, விசுவாசியின் கண்களைத் திறக்கிறார். அரசியலும் சபை ஸ்தாபனங்களும், அரசியலும், தேசங்களும், மற்றுமுள்ள ஒவ்வொன்றும் மனித ஞானம் என்னும் பாகத்தில் ஒரு சாராராக இருக்கின்றன என்பதைக் கவனிக்கவும்; எனவே ஆவிக்குரிய இலக்கு என்னும் மற்றொரு பாகம் அவர்களுக்கு மறைவாயுள்ளது.

255 தேவன் வனாந்தரத்தில் ஒரு மனிதனைத் தெரிந்தெடுத்து, அவனுக்குப் பயிற்சியளித்தார். அவனை வனாந்தரத்திலிருந்து கொண்டு வந்து, பொறுப்பேற்று, ஜனங்களை வெளியே கொணடு வந்தார். நான் கூறுவதன் அர்த்தம் உங்களுக்கு விளங்குகின்றதா? அவர் தமது திட்டத்தை ஒருபோதும் மாற்றுவது கிடையாது. அவர் தேவனாயிருக்கிறார். அவர் ஒரு குழுவுடன் ஈடுபடவேமாட்டார். இதற்கு முன்பு அவர் அப்படிச் செய்ததேயில்லை. ஒரு தனிப்பட்ட நபருடன் மாத்திரமே அவர் தொடர்பு கொள்கிறார். அவர் அப்படி தொடர்பு கொண்டார். அவர் இனிமேலும் அப்படியே தொடர்பு கொள்வார், மல்கியா 4-ல், அவர் அப்படிச் செய்யப் போவதாக அவர் வாக்களித்துள்ளார். எனவே அவர் அதை நிச்சயம் செய்வார். அது உண்மை. அவர் என்னவாயிருந்தார் என்றும், அவர் என்ன செய்வதாக வாக்களித்துள்ளாரோ, அந்த அவருடைய வாக்குத்தத்தம் அங்கே உள்ளது. இதோ நாமே இந்நிலையில் இருக்கிறோம். நாம் என்னே மகிழ்ச்சியுள்ள ஜனங்களாக இருக்க வேண்டும், தமது வாக்களிக்கப்பட்ட வார்த்தையின் அடையாளத்தை, வாக்களிக்கப்பட்ட வார்த்தையை அடையாளமாக அவர்களுக்கு அளித்துள்ளார். அவர் அதை செய்யப்போவதாக அவர் வாக்களித்துள்ளார். அவர்கள்…“ஜனங்களின் விசுவாசத்தை அவர் திரும்பவும் அளிப்பார். ஜனங்களுடைய இருதயங்களை பெந்தெகொஸ்தே பிதாக்களின் விசுவாசத்திற்கு அவர் திருப்புவார்.”

அவர் தமது அடையாளங்களைக் காண்பித்து, அதைச் செய்யப்போவதாக அவர் வாக்களித்தார்.

256 “சோதோமின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரன் வருகையிலும் நடக்கும்.” சபை ஸ்தாபனங்கள் சோதோமில் என்னவிதமான ஒரு அடையாளத்தைக் கண்டன? மனித ஞானம் கொண்ட சபை எதைக் கண்டது? இரண்டு பிரசங்கிகளை. தெரிந்துகொள்ளப்பட்ட ஆவிக்குரிய சபை, ஆபிரகாமும் அவனுடைய குழுவும் என்னக் கண்டது? தேவன் ஒரு மனித சரீரத்தில் வெளிப்பட்டு, மானிட மாமிசத்தில், ஆவியைப் பகுத்தறிந்து, அவருக்குப் பின்னால் இருந்த சாராள் என்ன கூறிக் கொண்டிருந்தாள் என்று கூற முடிந்ததைக் கண்டது. “லோத்தின் நாட்களில் நடந்ததுபோல, மனுஷகுமாரன் வரும் நாட்களிலும் நடக்கும்.” பரிசுத்த ஆவியானவர் அதே கிரியைகளை மனித சரீரத்தில் செய்து வருவதை நாம் காண்கிறோம். இதுவே அந்த வேளையாயுள்ளது. புரிகிறதா? நண்பர்களே, நாம் இங்குதான் இருக்கிறோம். அவ்வளவுதான். யாத்திரையோ துவங்கிவிட்டது.

257 ஆனால் இப்பொழுது கவனியுங்கள், எதைக்கொண்டு அவர் அப்பொழுது அதைச் செய்தார்? கவனியுங்கள், உங்களுடைய ஆவிக்குரிய சிந்தையை அணிந்து கொள்ளுங்கள். இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் தாமே உங்கள் சிரத்தையற்ற திரையை களைந்துவிட்டு, நீங்கள் கூர்ந்து கவனிக்கும்படி செய்வாராக. தேவன் ஒரு காரியத்தை ஒரு வழியில் செய்யவேண்டுமென்று தீர்மானித்துவிட்டால், அதை அவர் ஒருபோதும் மாற்றவே முடியாது.

258 ஏதேன் தோட்டத்தில் மனிதனை மறுபடியுமாக அவர் ஐக்கியத்திற்கு கொண்டுவரும்படி மீட்க விரும்பினபோது, அவர் ஒரு தீர்மானம் செய்தார். அது இரத்தமாயிருந்தது. அவர்கள் கல்வி முறையை முயற்சித்துப் பார்த்தனர். அவர்கள் ஸ்தாபனங்களை முயற்சி செய்து பார்த்தனர். அவர்கள் தேசிய மயமாக்கப் பார்த்தனர், மற்றுமுள்ள ஒவ்வொன்றையும் செய்தனர். ஆனால் அது ஒருபோதும் கிரியை செய்யவில்லை. தேவன் ஒரு மனிதனை எப்போதும் சந்திக்க ஒரே ஒரு இடம் மாத்திரமே உண்டு. ஏதேன் தோட்டத்தில் இருந்தது போன்று, அது சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழ், அது மாறவேயில்லை. யோபுவின் காலத்திலும் பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழ்தான் தேவன் மனிதனைச் சந்தித்தார். இஸ்ரவேல் ஜனங்களின் காலத்திலும், ஏதேன் தோட்டத்திலும் அவர் அவ்வாறே பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழ்தான் சந்தித்தார்.

259 இன்றைக்கும் அவர் ஒரே இடத்தில்தான் சந்திக்கிறார், அது ஸ்தாபனங்களிலல்ல; அவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்கின்றனர், அவர்கள் குழப்பமடைந்துள்ளனர். சபை மார்க்க முறைமையில் அல்ல; அவர்கள் இன்னமும் அதே

காரியத்தைச் செய்கிறார்கள். அறிவுக் கூர்மைகளில் அல்ல; அவர்கள் யாவரும் குழப்பமடைந்துள்ளனர். ஆனால் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் கீழே ஒவ்வொரு விசுவாசியும் ஐக்கியங்கொள்ள முடியும், அங்குதான் ஜீவன் உள்ளது.

260 யாத்திரையின் நாட்களில் தேவன் தெரிந்துகொண்ட ஒரு கூட்டத்தை அவர் வெளியே அழைத்தார். நீங்கள் ஒன்றை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அந்த குழுவிலிருந்த இரண்டுபேர் மாத்திரமே வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை அடைந்தனர். அவர்களை வழிநடத்த அவர் எதைத் தெரிந்து கொண்டார்? அரசியலையா? ஒரு ஸ்தாபனத்தையா? அவர் ஒரு தீர்க்கதரிசியைத் தெரிந்துகொண்டு, ஜனங்கள் தவறாகப் புரிந்துகொள்ளக்கூடாது எனக் கருதி, இயற்கைக்கு மேம்பட்ட அக்கினி ஸ்தம்பத்தின் அடையாளத்தை அவனுக்குத் தந்தார். தீர்க்கதரிசி கூறினது மாத்திரமே சத்தியமாக இருந்தது. தேவன் அக்கினி ஸ்தம்பத்தில் இறங்கி வந்து, தம்மை ரூபகாரப்படுத்தி, அவருடைய வார்த்தையைக் காண்பித்தார். அது சரிதானே? [சபையோர், "ஆமென்" என்கின்றனர்.—ஆசி.] அதைத்தான் அவர் தம்முடைய முதலாம் யாத்திரையில் கொண்டுவந்தார். அவருடைய இரண்டாம் யாத்திரை…

261 தேவன் எப்பொழுதும் மூன்றுகளில் செயல்படுகிறார். அவர் மூன்றுகளில் பரிபூரணமடைகின்றார். அது எப்பொழுதும் மூன்றுகளாகவும், ஏழுகளாகவும் இருக்கின்றன என்று நான் பிரசங்கித்ததை நீங்கள் யாவரும் கவனித்துள்ளீர்கள். உ—ஊ. *ஏழு* "முழுமையான" எண்ணாயுள்ளது. *மூன்றுகள்* என்பது அவருடைய "பரிபூரணமாயுள்ளது." முதலாம், இரண்டாம், மூன்றாம் இழுப்புகள். ஓ, எல்லாமே, ஒவ்வொரு காரியமும். புரிகிறதா? நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி…ஒவ்வொரு காரியமுமே! புரிகிறதா? கவனியுங்கள்.

262 முதலாம் யாத்திரையின்போது, அவர் என்ன செய்தார்? அவர் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பி, அவனை அக்கினி ஸ்தம்பத்தினால் அபிஷேகம் செய்து, அவருடைய ஜனங்களை வெளியே அழைத்து வந்தார். அதுவே அவருடைய முதலாம் யாத்திரையாயிருந்தது.

263 இஸ்ரவேலருடைய காலம் வந்தபோது, அவர் மறுபடியுமாக தேவனாகிய—தீர்க்கதரிசி அக்கினி ஸ்தம்பத்துடன் அனுப்பினார். அது பரலோகத்திலிருந்து ஒரு புறாவைப்போல் இறங்கி வருவதை யோவான்ஸ்நானன் கண்டான். அவர், "நான் பிதாவினிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன். மறுபடியும் பிதாவினிடத்திற்குப் போகிறேன்" என்றார்.

264 அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்; இவைகளுக்குப் பின்பு, தர்சு பட்டிணத்தானாகிய சவுல்

தமஸ்குவுக்குப் போகும் வழியில், அதே அக்கினி ஸ்தம்பத்தைக் கண்டான். அவன் ஒரு எபிரெயன்; அவன் தேவனுடைய வார்த்தையில் நன்கு போதிக்கப்பட்டிருந்த காரணத்தால், "ஆண்டவரே, நீர் யார்?" என்றான். அந்த அக்கினி ஸ்தம்பம் தான் ஆண்டவர் என்பதை அவன் அறிந்திருந்தான். அவன் ஒரு எபிரெயன், அவன், "நீர் யார்?" என்று கேட்டான்.

அவர், "இயேசு நானே" என்றார்.

265 இரண்டாம் யாத்திரையில் அவர் ஒரு தீர்க்கதரிசியை அபிஷேகத்துடன் அனுப்பினார். அது அவருடைய குமாரன், தேவனாகிய—தீர்க்கதரிசி. அவர் ஒரு தீர்க்கதரிசியாயிருப்பாரென்று மோசே உரைத்தான். அவரிடம் அக்கினி ஸ்தம்பம் இருந்தது. அவர் அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார். அந்த தீர்க்கதரிசிதான், "என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத்தானும் செய்வான்" என்று கூறினார்.

266 இந்த கடைசி நாட்களில் நிகழவிருக்கும் யாத்திரைக்கும் அவர் அதேக் காரியத்தையே இங்கு வாக்குத்தத்தம் செய்துள்ளார். அவர் அதை மாற்றவே முடியாது. விஞ்ஞானம் நிரூபித்ததன் மூலமாகவும், பரிசுத்த ஆவியானவரின் சாட்சியினாலும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளினாலும், அந்த மகத்தான அக்கினி ஸ்தம்பம் நமது மத்தியில் அசைவதை நாம் இன்று காண்கிறோம். உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவின் அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களை ஸ்தாபனங்களினின்று வெளியே அழைத்து கிறிஸ்துவின் சமுகத்தில் அவர்களைக் கொண்டு வந்து, ஒரு தேசத்திற்குச் செல்ல அவர்களை ஆயத்தப்படுத்துகின்றன. நண்பர்களே, இதில் எவ்வித பிழையும் இல்லை. இது நான் கூறுவதல்ல. நான் உங்கள் சகோதரன். தேவன் இதை உங்களுக்கு நிரூபித்து வருகிறார். எனவேதான் அது சத்தியமாயிருக்கிறது. மற்ற இரண்டு யாத்திரைகளுக்கும் அவர் உபயோகித்த அதே அக்கினி ஸ்தம்பம்; அவர் இக்காலத்தில் அதை உங்கள் மத்தியில் கொண்டு வந்து. விஞ்ஞானத்தின் மூலம் அதை நிரூபித்திருக்கிறார். கடந்த மாதத்தில் *ஃலைப்* பத்திரிகை அதை வெளியிட்டது. எங்கே…

267 அது சம்பவிப்பதற்கு முன்னமே என்ன நிகழுமென்று நான் அதைக் குறித்துக் கூறினதை இங்குள்ள எத்தனைபேர் கேட்டீர்கள்? ஏறக்குறைய சபையில் உள்ள எல்லோரும் என்று நான் நினைக்கிறேன்.

268 அங்குதான் காரியமே உள்ளது. மற்றவர்களுக்கோ அது என்னவென்று புரியவில்லை. விஞ்ஞானிகளும் அதை அறிய முயற்சித்துக்கொண்டிருக்கின்றனர். அது, "கூர்நுனிக்கோபுர வடிவில், இருபத்தியாறு மைல் உயரத்தில் உள்ள ஒரு மேகம்" என்று அழைக்கப்பட்ட அதைக் குறித்த ஒரு புகைப்படத்தை எவரேனும் வைத்துள்ளீர்களா? அதிலிருந்த ஏழு தேவதூதர்கள் உங்களுக்கு

ஆவியின் ஏவுதலின் கீழ் தேவனுடைய வார்த்தையைக் கொண்டு வந்தனர். நீங்கள் வாழும் இந்த மணி நேரங்களைக் குறித்து அது உங்களுக்கு அறிவிக்கிறது. ஆவிக்குரிய சிந்தை உடனே அதைப் பற்றிக்கொண்டு, புரிந்துகொள்கிறது. பாருங்கள். அது ஒரு யாத்திரை! இந்நாட்களில் ஒன்றில் நாம் இவ்விடம் விட்டுச் செல்லப் போகிறோம். தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக. நினைவிருக்கட்டும்.

நான் இன்னும் ஒரு நிமிடத்தில் முடிக்கவுள்ளேன். எனக்கு இன்னும் பத்து நிமிடங்களே உள்ளன.

269 அவர்களை வெளியே அழைத்த அக்கினி ஸ்தம்பத்தை கவனியுங்கள், ஒரு தீர்க்கதரிசியின் அபிஷேகத்தின் கீழ் அவர்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தினது. அவர்கள் நோக்கிப் பார்க்க முடிந்த ஒரு அக்கினி ஸ்தம்பம், அபிஷேகம்பண்ணப்பட்டிருந்த ஒரு தீர்க்கதரிசியின் தலைமையின் கீழ் அவர்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்கு வழிநடத்தினது. ஆனால் அவர்களோ அந்த தீர்க்கதரிசியை தொடர்ந்து புறக்கணித்தனர். அது சரியா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] நிச்சயமாக.

270 இப்பொழுது நாம் ஞானஸ்நான ஆராதனையை வைத்துள்ளோம் என்று எனக்குத் தெரியும். நான் குறிப்பு எழுதி வைத்துள்ள ஆறு பக்கங்கள் இன்னமும் உள்ளன என்று நான் நினைக்கிறேன். ஆனால் இப்பொழுது நான் இன்னும் ஒரு நிமிடத்தில் நிறுத்தப் போகிறேன்.

271 இதைக் கவனியுங்கள். நாம் வெளியே அழைக்கப்படும் கட்டத்தில் இருக்கிறோம். “என் ஜனங்களே, நீங்கள் பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்” என்று தூதனுடைய சத்தம் அழைத்தது. எதை விட்டு வெளி வருவது? குழப்பத்தை விட்டு. மெதோடிஸ்டு சபை சரியா? அல்லது பாப்டிஸ்டு சபை சரியா? அல்லது கத்தோலிக்க சபை சரியா? “அதை விட்டு வெளியே வாருங்கள்.” தேவனே சரியாயிருக்கிறார். உனக்கு எப்படித் தெரியும்? “எந்த மனுஷனும் பொய்யன்: நானே சத்தியபரர். அவைகளை விட்டு வெளியே வாருங்கள்.” உங்களுக்கு என்ன தெரியும்? அதே அக்கினி ஸ்தம்பம், அதே அபிஷேகத்தின் ஆவி, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு வழி நடத்திச் செல்கின்றது.

272 கவனியுங்கள். இஸ்ரவேலரை அது வெளியே கொண்டு வந்து, வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு அவர்களை வழி நடத்தினது.

273 அதே தேவன், அதே அக்கினி ஸ்தம்பம்! அது மாத்திரமே… “அவர்கள் கூறும்…அந்த புகைப்படம் எடுக்கும் அந்தக் கருவி…” நீங்கள் ஜார்ஜ் ஜே. லேசி என்பவரின் அறிக்கையை வாசிக்கும்போது, நான் கூறுவதை அல்ல. ஜார்ஜ் ஜே. லேசி அந்தப் புகைப்படத்தை ஆராய்ந்து பார்த்துவிட்டு கூறினதை நீங்கள் படித்துப் பாருங்கள். அவர் அரசியல் துறையரங்க புலனாய்வுத் துறையின் தலைவர்

(F.B.I)...அவர் அந்த துறையில் கைரேகை தஸ்தாவேஜுகளை ஆராயும் நிபுணர், அவருடைய அறிக்கை இங்கே உள்ளது. “சிலர், ‘அது இருமுறை படம் பிடித்து எடுக்கப்பட்ட புகைப்படம்’” என்கின்றனர். இலட்சக்கணக்கான ஜனங்கள் அதைத் தங்களுடைய சொந்த கண்களினால் நோக்கிப் பார்த்திருக்கின்றனர். நாம் இங்கே நின்று, அதை நோக்கிப் பார்த்துள்ளோம். நீங்கள் நோக்கிப் பார்த்திருக்கிறீர்கள். [சபையோர், “ஆமென்” என்று கூறுகின்றனர்.—ஆசி.] அதுவல்ல, “அவர்களோ, ‘அது ஒரு பொய்த் தோற்றமாயிருந்தது’ என்றனர்.” ஆனால் திரு.லேசி என்ன கூறினார்? “புகைப்படக் கருவியின் இயந்திரக் கண் மனோதத்துவத்தை படம் பிடிக்காது” என்றார். உ—ஊ. அது கண்கள் காணும் பொய்த்தோற்றமாயிருக்கவில்லை. அது அதே அக்கினி ஸ்தம்பம்.

அப்பொழுதும் அவர்கள், “ஓ, பாருங்கள், அது பொய்த்தோற்றமாயிருந்தது” என்கின்றனர்.

இப்பொழுது, புகைப்படக் கருவிகள், யாவுமே, டூசானில் நூற்றுக்கணக்கான மைல்களில் உள்ளதை எடுத்துள்ளனவே!

274 அது சம்பவிப்பதற்கு ஆறு மாதங்களுக்கு முன்னமே பரிசுத்த ஆவியினால் நான் அங்கு செய்தியை கொண்டுவருவதாயிருக்கும் என்பதை உங்களுக்கு கூறினேன். ஏனென்றால் அந்த சகோதரன் அதைக் குறித்து சொப்பனம் கண்டதுபோல, வெளிப்புறத்தில் கூர்நுனி கோபுரத்தில் எழுதப்பட்டதை, நான் அதை உங்களுக்கு வியாக்கியானித்தேன். அதுவே முழுமையான வியாக்கியானமாயிருக்கிறது. நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இவைகளைக் குறித்த இரகசியங்கள் அனைத்தும் விளக்கப்பட்டு முடிந்துவிட்டன. இப்பொழுது ஏழு முத்திரைகளில் மறைந்துள்ள தளர்ந்த முனைகளை கையிலெடுத்து, ஏழு சபை காலங்களல்ல. அந்த ஏழு முத்திரைகள் இரகசியங்களை வெளிப்படுத்திவிட்டன. அவர் அந்தக் கூர்நுனிக்கோபுரத்தின் மேல் பாகத்தைத் திறந்தார், அதற்குள் ஒரு வெண்பாறை காணப்பட்டது. ஆனால் அதில் ஒன்றும் எழுதப்படவில்லை. அது இரகசியமாயிருந்தது.

275 டூசானுக்குப் போ. அது நிகழ்வதற்கு முன்பு அதை முன்னறிவி. டூசானுக்கு வடக்கே நில். இங்கே அதற்கான சாட்சிகள் இருக்கின்றனர். அப்பொழுது ஒரு சத்தம் உண்டாகி, மலையை பூமியிலிருந்து பெயர்க்கும் அளவுக்கு அதை குலுக்கினது. அதே சமயத்தில் ஒரு ஒளி வட்டம் ஆகாயத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. விஞ்ஞானம் அதை புகைப்படம் எடுத்தது. “அது இருத்தாறு மைல் உயரத்தில் காணப்பட்டது.” பனி உண்டாகும் உயரத்தைவிட கிட்டத்தட்ட ஐந்து மடங்கு உயரத்தில் அது தோன்றினது. அது எதனால் தோன்றியது என்னும் உண்மையை அவர்களால் அறிந்து கொள்ள இயலவில்லை.

276 “சாயங்கால நேரத்தில் வெளிச்சம் உண்டாகும். நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டிருந்தால், மகிமைக்குரிய பாதையை நீங்கள் நிச்சயம் கண்டுகொள்வீர்கள்.” வழியருகே அல்லது கற்பாறைகளின் மத்தியில் விழுந்த விதையினால் பலன் ஏதுமில்லை. கல் போன்ற கடின இருதயம் அலட்சியப்படுத்த விரும்புகின்றது. ஆனால் விசுவாசம் என்னும் மிருதுவான நிலத்தில் அது விழும்போது, அது ஆவியின் கனிகளைக் கொடுக்கும் கிறிஸ்தவனைத் தோன்றச் செய்யும்.

277 தேவன் அதை எப்படிச் செய்தார் என்பதை கவனியுங்கள். அவர் உறுதிப்படுத்தப்பட்ட அதே அக்கினி ஸ்தம்பத்தையே இப்பொழுதும் கொண்டிருக்கிறார்.

ஒருவர், “அதை குறித்து ஏன் நீங்கள் விஞ்ஞானிகளிடம் கூறக்கூடாது?” என்று கேட்டார்.

278 அதை அவர்கள் நம்புவார்கள் என்று நினைக்கின்றீர்களா? “முத்துக்களை பன்றிகளுக்கு முன்னால் போடவேண்டாம்.” இயேசு போட வேண்டாம் என்று கூறியுள்ளார். விஞ்ஞானிகளிடம் இதைப் பற்றிக் கூறவேண்டுமெனும் ஏவுதல் எனக்கில்லை. நான் வாழும் அதே பட்டிணத்தில்தான் அவர்களும் வாழ்கின்றனர். அதைக் குறித்து அறிந்திருப்பவர்களுக்கு அவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர். நான் போகலாம் என்றுதான் நினைத்திருந்தேன். ஆனால் பரிசுத்த ஆவியானவர், “நீ போகவேண்டாம், அது அவர்களுக்காக அல்ல. நீ சென்று, அதை கூடாரத்திலுள்ளவர்களுக்கு அறிவிப்பாயாக” என்றார். சரி.

279 “அது நிறைவேறினால்...அவர்கள் கூறுவது நிறைவேறினால், நானே அதைச் சொன்னேன் என்பது நினைவிருக்கட்டும்,” கர்த்தர் கூறியுள்ளார், “பாருங்கள், அது நிகழ்வதற்கு முன்பே” அது முன்னறிவிக்கப்பட்டது. பின்னர் அது சமபவிக்கிறது. வேதம் கூறுவதற்கு செவி கொடுங்கள். இந்த நாளில் உங்களை அழைக்கும் தேவனுடைய சத்தமாக அது இருக்கிறது.

280 நீங்கள் இதை கவனிக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அதே அக்கினி ஸ்தம்பம் மறுபடியுமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்கு, ஆயிர வருட அரசாட்சிக்கு மக்களை வழிநடத்துகின்றது. ஆயிர வருட அரசாட்சிக்காக பூமியானது சுத்திகரிக்கப்பட வேண்டுமென்று நாம் ஆறாம் முத்திரையின் கீழ், பரிசுத்த ஆவியின் ஏவுதலினால் கண்டறிகிறோம். அதற்கு முன்பு அம்முத்திரையைக் குறித்து அவ்விதம் போதிக்கப்படவில்லை. அக்கினி ஸ்தம்பம் அவர்களை ஆயிரவருட அரசாட்சிக்கு வழி நடத்திக்கொண்டிருக்கிறது.

281 இஸ்ரவேல் ஜனங்களை அடிமைத்தனத்தினின்று அந்த யாத்திரையில் வழிநடத்தினது என்பதைக் கவனியுங்கள்; அக்கினி ஸ்தம்பம், தேவனுடைய வழிநடத்துதலின் கீழ்...தேவன்தான் அந்த

அக்கினி, அந்த அக்கினி ஸ்தம்பம்தான் தீர்க்கதரிசியை மாத்திரம் அபிஷேகம் செய்தது. மோசே அழைக்கப்பட்டிருந்தான் என்பதற்கு ஒரு பரலோக சாட்சியாக அக்கினி ஸ்தம்பம் நின்றது.

282 தாத்தானும் மற்றோரும், “நாம் ஒரு ஸ்தாபனம் தொடங்க வேண்டும். மோசே மாத்திரமே பரிசுத்தவானாக தன்னைக் காட்டிக்கொள்கிறான். மோசே, எங்களிடையே நீ ஒருவன் மாத்திரம் பரிசுத்தவான் என்று எண்ணிக்கொண்டிருக்கின்றாய். கர்த்தருடைய சபையோர் எல்லாரும் பரிசுத்தவான்கள். அப்படியிருக்க இந்தப் பொறுப்பை நீ மாத்திரம் எப்படி ஏற்றுக்கொள்ளலாம்?” என்று கூறினது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

283 அப்பொழுது மோசே முகங்குப்புற விழுந்து கதறித் துவங்கினான். அப்பொழுது தேவன், “அவனிடத்திலிருந்து உன்னைப் பிரித்துக்கொள். நான் பூமியைப் பிளந்து அவனை விழுங்கப் போகின்றேன்” என்றார். முன்னடையாளம். எப்படி…தேவன் கூறியிருந்ததை மாத்திரமே தான் எடுத்துக் கூறிக்கொண்டிருந்ததாக மோசே ஜனங்களிடம் உரைத்தான். தேவனும் அது உண்மையென்று ரூபகாரப்படுத்தினார்.

284 தீர்க்கதரிசினியாகிய மிரியாமும் கூட, ஆரோனும் கூட மோசே எத்தியோப்பிய பெண் ஒருத்தியை விவாகம் செய்ததற்காக அவனைப் பார்த்து சிரித்து, அவனைக் குறித்துப் பரிகாசம் செய்தார்கள். தம்முடைய தாசனுக்கு விரோதமாய் பேசினதற்காக தேவன் கோபம் கொண்டார். அவர் என்ன செய்தார்? அவர்களை கூடாரத்தின் வாசலுக்கு அவர் அழைத்தார். மிரியாம், அவள் அதே சமயத்தில் ஒரு தீர்க்கதரிசினியாயிருந்தாள். ஆனால் மோசேயோ ஒரு தீர்க்கதரிசியைக் காட்டிலும் மேன்மையுள்ளவன், ஒரு தீர்க்கதரிசியைக் காட்டிலும் மேன்மையுள்ளவன். அவர், “நீங்கள் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன். என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல. உங்களுக்கு தேவனிடத்தில் பயமில்லையா?” என்று கேட்டார். அவள்—அவள் அந்த நிமிடமே குஷ்டரோகியாகி, பாதி செத்தவளானாள். அது உங்களுக்குத் தெரியும்.

285 அவர், “யோவான் ஸ்நானன். நீங்கள் ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கப் போனீர்களா? ஆம், அவன் ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவன்” என்று கூறவில்லையா? ஏன்? அவன் ஏன் ஒரு தீர்க்கதரிசியைக் காட்டிலும் மேன்மையுள்ளவனாகக் கருதப்பட்டான்? அவன் உடன்படிக்கையின் தூதன், அவன் இரு யுகங்களையும் ஒருங்கே இணைத்த உடன்படிக்கைப்பெட்டி.

286 இன்றைக்கு…நமது மத்தியிலுள்ள இந்த மகத்தான பரிசுத்த ஆவியானவர் ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கிலும் மேன்மையுள்ளவர்.

தேவன் தமது வார்த்தையை நிரூபிக்க, வார்த்தையுடன் நமது மத்தியில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார். அவர் ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கிலும், தீர்க்கதரிசிகளைப் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு மேலான கிரியைகளைச் செய்து கொண்டு வருகிறார்.

287 எலியா, காலத்தின் தீர்க்கதரிசிகளில் மகத்தான ஒருவனாக, அவனது வாழ்நாளில், சுமார் எண்பது ஆண்டு காலத்தில் இயற்கைக்கு மேம்பட்ட நான்கு கிரியைகள் மாத்திரமே செய்தான். இரட்டிப்பான ஆவியைப் பெற்றிருந்த எலிசா, எட்டு கிரியைகளைச் செய்தான்.

288 நாமோ ஆயிரக்கணக்கான கிரியைகள் நமக்கு முன் நிகழ்வதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். அக்கினி ஸ்தம்பத்திலுள்ள கர்த்தருடைய தூதனைப் பாருங்கள். விஞ்ஞான ஆராய்ச்சி அதை உலகெங்கும் கொண்டு சென்றுள்ளது. அதன் மூலமாகவே அவர்கள் நியாயத்தீர்க்கப்படபோகிறார்கள் என்பதை அறிந்துள்ளனர். அந்த ஆட்டுக்குட்டியானவர், அந்த கர்த்தருடைய தூதனாவர், கிறிஸ்துவாயிருந்தவர் என்ன செய்தார்? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.]

289 பரிசுத்த யோவான் 6. அவர்களெல்லாரும் இந்த தண்ணீரைக் குடித்து, மிகுந்த களிகூருதலோடு இருந்தார்கள். அப்பொழுது அவர், “நானே வானத்திலிருந்திறங்கிய ஜீவ அப்பம். நானே வனாந்தரத்திலிருந்த கன்மலை” என்றார்.

290 அவர்களே, “நீ பையத்தியக்காரன் என்று இப்பொழுது நாங்கள் அறிந்து கொண்டோம், நீ—நீ பையத்தியக்காரனாயிருக்கிறாய். உனக்கு—உனக்கு பிசாசு பிடித்திருக்கிறது, நீ பிசாசோடுள்ள ஒரு பையத்தியக்கார மனிதன்” என்றனர். உங்களுக்குத் தெரியுமா, ஒரு ஆவி ஜனங்களை ஆட்கொள்ளும்போது, சில நேரத்தில் அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாகப் பக்தியுள்ளவர்களைப்போலக் காணப்படுகின்றனர். அவர்கள், “நீ—நீ ஒரு பிசாசு; உனக்குப் பிசாசு பிடித்திருக்கிறது. நீ ஒரு சமாரியன்; உனக்கு பிசாசு பிடித்துள்ளது” என்றனர். மேலும் அவர்கள், “உனக்கு இன்னும் ஐம்பது வயது கூட ஆகவில்லை. நீ ஆபிரகாமைக் கண்டதாகக் கூறுகின்றாயோ?” என்றனர்.

291 அவர் இரண்டு அடி பின்னால் வைப்பதை என்னால் காணமுடிகின்றது. அவர் **“நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்.** ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே **நான் இருக்கிறேன்.”** என்றார். அதாவது ஒரு எரிகின்ற அக்கினியாய், அந்த முட்செடியில் இருந்த அக்கினி ஸ்தம்பமாயிருந்தார்.

292 அவர் மரித்து, மூன்றாம் நாளில் உயிரோடெழுந்த பின்பு, சவுல் அவரைத் தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் சந்தித்தபோது, அவர் அப்பொழுது அக்கினி ஸ்தம்பத்திற்குத் திரும்பிவிட்டார்.

“நான் தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வந்தேன், மறுபடியும் தேவனிடத்திற்குப் போகிறேன்” என்றார்.

293 பேதுரு சிறைச்சாலையில் இருந்தபோது, அந்த அக்கின ஸ்தம்பம் அதனுள் பிரவேசித்து, கதவுகளைத் திறந்து அவனை வெளியே கொண்டு வந்தது. அது உண்மை.

அந்த அக்கினி ஸ்தம்பம் அவர்களை எங்கு வழி நடத்தினது?

294 மோசே அந்த அக்கினி ஸ்தம்பம் அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். அவன் அந்த அக்கினி ஸ்தம்பத்தின் கீழ் அபிஷேகம் பெற்ற தலைவனாயிருந்தான். அவனுடைய செய்தியை அக்கினி ஸ்தம்பம் மாத்திரமே அற்புதங்களாலும் அடையாளங்களாலும் ரூபகாரப்படுத்தினது.

295 அந்த அக்கினி ஸ்தம்பம் தேவன் வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு, ஒருநாள் அவரே மாம்சத்தில் தோன்றவிருக்கும் ஸ்தலத்திற்கு அவர்களை வழி நடத்தினது. அது சரியா? [சபையோர், “ஆமென்” என்கின்றனர்.—ஆசி.] அவர்கள் என்ன செய்தனர்? ஒரு சாதாரண ஆட்டுக் குட்டியின் இரத்தத்தின் கீழ் மாத்திரம் இருப்பதை அவர்கள் காண்பிக்கும்படி முறுமுறுத்தனர்.

296 ஆனால் இந்த சமயத்தில் (தேவனுக்கு மகிமை) நமது மத்தியில் நாம் காணும் இந்த அக்கினி ஸ்தம்பம், நம்மை ஆயிர வருட அரசாட்சிக்கு வழி நடத்தும், இந்த யாத்திரைக்குப் பிறகு, அந்த மகத்தான ஆயிர வருட அரசாட்சிக்காக அவர் தமது ஜனங்களிடம் திரும்ப வருவார். அங்கு நாம் அவருடன் நித்திய காலமாய் ஜீவிப்போம். அவர் எப்பொழுதும் பிதாவின் வார்த்தையை உடையவராயிருக்கிறார். அது சரியென்று அவர் எப்பொழுதும் நிரூபித்து வருகின்றார்.

297 நாம் ஒரு யாத்திரையில் பிரவேசித்திருக்கின்றோம். இன்னும் சிறிது நேரத்தில், ஒலி நாடாக்கள் பதிவு செய்வதை நாம் நிறுத்திவிடப் போகின்றாம். ஓ, என் நண்பர்களே, என் சகோதரரே, இங்கு வந்திருப்பவர்களே, இந்த ஒலி நாடாவைக் கேட்பவர்களே, நான்... உங்களுடைய சகோதரன் என்ற முறையிலும், தேவனுடைய இராஜ்யத்தின் பிரஜை என்னும் முறையிலும் இந்த யாத்திரைக்காக வெளியே வாருங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன், ஏனென்றால் இதில் கைவிடப்பட்டவர் அனைவரும் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்வார்கள். பாபிலோனை விட்டு வெளியே வாருங்கள்; இந்த குழப்பத்தைவிட்டு வெளியே வாருங்கள்; இந்த ஸ்தாபன முறைமைகளை விட்டு வெளியே வந்து, ஜீவனுள்ள தேவனை சேவியுங்கள். ...விடுங்கள்...

298 இந்த மகத்தான உடன்படிக்கையின் தூதனானவர்! “இயேசு கிறிஸ்து, தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணவில்லை.” அவர் முதலாம் யாத்திரையின்போதும், கொண்டு வந்ததும்,

இரண்டாம் யாத்திரையின்போது கொண்டு வந்ததும். அவர் முன்பிருந்த அதே ரூபத்தில், ஒரு அக்கினி ஸ்தம்பமாக நடத்திக் கொண்டிருந்தவர், இங்கே இந்த மூன்றாம் யாத்திரையோடும் இருக்கிறார்.

299 முதலாம் யாத்திரையின் போது அவர் என்ன செய்தார்? ஒரு இயற்கை தேசத்தை விட்டு வெளியே கொண்டுவந்து, மற்றொரு இயற்கை தேசத்துக்குள் வழிநடத்தினார்.

300 இரண்டாம் யாத்திரையின்போது, அவர் ஒருவகை ஆவிக்குரிய நிலையிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவந்து, ஒரு ஆவிக்குரியபிரகாரமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திற்குள் வழி நடத்தினார்.

301 இப்பொழுது அவர் ஆவிக்குரியபிரகாரமாக பரிசுத்த ஆவியின் அபிஷேகத்திலிருந்து நித்திய தேசமான ஆயிர வருட அரசாட்சிக்கு, இதற்குப்பின் மகத்தானதாயிருக்கப்போகிறதற்குள் வழிநடத்திக் கொண்டிருக்கிறார். அதே அக்கினி ஸ்தம்பம், அதே அபிஷேகத்தின் முறையைக் கைக்கொண்டு, அதே தேவன் அதே கிரியைகளைச் செய்கிறாரே! முதலாம் யாத்திரையைக் குறித்து உரைத்த, இரண்டாம் ஒன்றை உரைத்த, அதே வார்த்தை மூன்றாம் யாத்திரையைப் பற்றியும் உரைத்துள்ளது. இங்கே நாம் அதை நமக்கு மத்தியில் காண்கிறோம்.

302 வெளியே வாருங்கள். ஓ! அந்த குழப்பத்தைவிட்டு வெளியே வாருங்கள். ஜீவனுள்ள தேவனிடத்திற்கு வாருங்கள். தேவனுடைய வார்த்தைக்கு வாருங்கள். “வார்த்தை மாம்சமாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்.” இப்பொழுது அவர் நமது சரீரத்திற்குள் இருந்துகொண்டு, நமது மத்தியில் வாசம் செய்கிறார். வெளியே வந்து, ஜீவனுள்ள தேவனை சேவியுங்கள்.

303 நாம் நம்முடைய தலைகளை வணங்கியிருக்கையில், [ஒரு சகோதரன் அந்நிய பாஷை பேசுகிறார். மற்றொரு சகோதரன் அதற்கு வியாக்கியானமளிக்கிறார்.—ஆசி.]

304 உங்களுடைய தலைகளை வணங்கியவாறு இருங்கள். உங்கள் ஆத்துமாவின் ஆழத்திலிருந்து, உங்களுக்குள்ள எல்லாவற்றின் ஆழ்த்திலுமிருந்து, உலகின் காரியங்கள் அனைத்தையும் நிறுத்த ஆயத்தமாகி, தேவனுக்காக ஜீவிப்பதற்காக…நீங்கள் மனப்பூர்வமாய் நினைவுகூர விரும்புகிறீர்களா? இப்பொழுது, உங்களுக்கு அந்த எண்ணம் இல்லையென்றால், பெயரளவில் அவ்விதமாய் அதைச் செய்யவேண்டாம். ஆனால் நீங்கள் முழு இருதயத்தோடு அதைச் செய்ய வேண்டுமென்றிருந்தால், அதாவது நீங்கள் இப்பொழுது உறுதிகொண்டிருக்கிறீர்கள். இயேசு தமது ஊழியத்தின் முடிவில், “நீங்கள் இப்பொழுதாவது விசுவாசிக்கின்றீர்களா?” என்று கேட்டது போல். இந்த காரியங்கள் உண்மையென்றும், தேவனால் ரூபகாரப்படுத்தப்பட்டது என்றும், நாம் முடிவு

காலத்தில் இருக்கிறோம் என்றும் நீங்கள் உறுதிகொண்டிருந்து, இப்பொழுது நீங்கள் உண்மையாகவே கிறிஸ்துவினிடம் வர விரும்புகின்றீர்களா? அலட்சியத்தன்மையிலிருந்தும், ஸ்தாபன வகுப்பு வாதங்களிலிருந்தும், உலகத்தின் கருத்து மற்றுமுள்ள காரியங்களிலிருந்து வெளிவந்து, இந்த யாத்திரைக்குள்ளாக வாருங்கள். நீங்கள் முழு இருதயத்தோடு அவரண்டை சமர்பிக்க விரும்பினால், இந்த ஆசீர்வதிக்கப்பட்ட வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்கான யாத்திரைக்குள் செல்ல விரும்பினால், நாங்கள் ஜெபம் செய்யும்போது, நீங்கள் உங்கள் கரங்களை உயர்த்துவீர்களா? நீங்கள் ஒவ்வொருவரும் உண்மையாகவே வெளியே வரவேண்டுமென்று விரும்புகின்றீர்களா?

305 பரலோகப் பிதாவே, தங்களுடைய கரங்களை உயர்த்தியிருப்பவர்கள், கர்த்தாவே, இப்பொழுதே அவர்கள் வெளியே வரட்டும். பரிசுத்த ஆவியானவர் தாமே, தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தத்தின்பேரில், அவர்களுடைய இருதயங்களில் அசைவாடுவாராக. சபையாரின் மத்தியிலிருந்து ஏறக்குறைய இருபது கரங்கள் உயர்த்தப்பட்டன என்று நான் நினைக்கிறேன். பிதாவே இது—இது உண்மையென்று அவர்கள் அறிந்து திருப்தியடைந்துள்ளனர். அவர்கள் வெளியே வர விரும்புகின்றனர். அங்கே…

306 வெளியே வந்த இஸ்ரவேல் ஜனங்கள் இருபத்தைந்து லட்சம் பேர்களில் இரண்டுபேர் மாத்திரமே தேசத்திற்குள் பிரவேசித்தனர்.

307 இயேசு கிறிஸ்துவின் நாட்களில் அங்கே நூற்றிருபது பேர் சென்றனர்.

308 இப்பொழுது உலகத்தின் முடிவின் நாட்களில், நீர், "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர். கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" என்று கூறினீர். அந்த வார்த்தைகள் தவறமுடியாது. அவை உம்முடையவைகள்.

309 கர்த்தாவே, இப்பொழுது நான் அவர்களுக்காக ஜெபிக்கிறேன். இந்த நேரத்தில் பரிசுத்த ஆவியானவர்தாமே அவர்களுடைய இருதயங்களை விருத்தசேதனம் செய்ய வேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன். உலகத்தின் காரியங்கள் எல்லாவற்றையும் எடுத்துப் போடும். அவருடைய வார்த்தையின் மூலமாயும், இந்நாட்களின் வெளிச்சத்தின் மூலமாயும், அழைக்கும் தேவனுடைய சத்தத்தைத் தெளிவாகக் கேட்க அவர்களுடைய செவிகளை விருத்தசேதனம் செய்தருளும். கர்த்தாவே, இந்த கடைசி முடிவான தருணத்திலுள்ள தேவனுடைய மகிமையை அவர்கள் காணத்தக்கதாக அவர்கள் கண்களைத் திறந்தருளும். நீரோ, "என் பிதாவானவர் எனக்குக்

கொடுக்கிற யாவும் என்னிடத்தில் வரும்; அவர்களைக் கடைசி நாளில் எழுப்புவேன்" என்று கூறினீர்.

310 கர்த்தாவே, இன்னும் இதைப் புரிந்து கொள்ளக்கூடாத அனேகர் இங்கு இருக்கலாம், அவர்களுடன் நீர் ஈடுபட்டு, கர்த்தாவே அவர்கள் புரிந்துகொள்ள அவர்களுக்கு வேறொரு தருணம் அளிக்கவேண்டுமென்று நான் மன்றாடுகிறேன். நீர் உமது வார்த்தையின் மூலம் பேசி, உம்மை நிரூபித்துக் காண்பித்து, இயற்கைக்கு மேம்பட்ட சத்தத்தினால் எங்களிடத்தில் பேசி, பிறகு ஒரு வியாக்கியானமளித்து, உமது மகத்தான கிரியைகள் வேதப்பிரகாரம் உண்மையென்பதை நிரூபித்து வருகிறதையும் அவர்கள் செவிகள் கேட்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். தேவனே, எங்கள் பாவங்களை நீர் மன்னிக்க வேண்டுமென்றும், நான் என்னையே இந்த வார்த்தையின் மேல் உறுதியாக வைத்து ஜெபிக்கிறேன்.

311 தேவனே, ஒரு வாரத்துக்கு முன்பு, நான்—நான் தரையில் கிடத்தியிருந்த, மரித்துப்போயிருந்த ஒரு மனிதனின் மீது என்னைக் கிடத்தினதை நான் எண்ணிப்பார்த்துக்கொண்டிருக்கிறேன். அப்பொழுது அந்த மகத்தான பரிசுத்த ஆவியானவர் அவரை உயிரோடெழுப்பினதை நான் கண்டேன். அவருடைய கண்கள் மேல் நோக்கியவாறு போய்விட்டிருந்தன. அவர் மரித்துக் கிடந்தார். ஒரு சில வார்த்தைகளினால் உமது நாமத்தைக் கூப்பிட்ட மாத்திரத்தில் அவர் உயிர் பெற்றதை நான் கண்டேன். இதோ இன்றைக்கு இன்னமும் அவர் உயிரோடிருக்கிறார். கர்த்தாவே, நீர் மாறாத தேவனாயிருக்கிறீர், அதாவது பவுல் நீண்ட நேரம் பிரசங்கம் செய்தபோது, அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு வாலிபன் ஜன்னல் வழியாய் கீழே விழுந்து மாண்டு போனான். பவுல் அவன் மீது குப்புறப்படுத்தபோது, அவன் உயிர் அவனுக்குள் திரும்ப வந்தது. அவன் உயிரை மீண்டும் அளிக்ககூடிய அதே மாறாத தேவனாய் இருக்கிறீர். பிதாவே நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். ஒருகால்…அவிசுவாசி ஒருக்கால் விசுவாசியாமல் இருக்கலாம். ஆனால் கர்த்தாவே, நாங்கள் விசுவாசிக்கிறோம். உம்மை நீர் எங்களுக்கு நிரூபித்துக் காண்பித்திருக்கிறீர்.

312 இப்பொழுது என் இருதயத்தின் தியானமும், என் மனதின் சிந்தனைகளும், என் பெலனும், மற்றெல்லாமே தேவனுடைய வார்த்தையில் உருகி ஒன்றுபடட்டும். கர்த்தாவே, நானும் தேவனுடைய வார்த்தையும் ஒருமித்து, மக்களுடன் தேவனுடைய ராஜ்யத்திற்கு அணிவகுத்து செல்லட்டும். கர்த்தாவே, இதை அருளும். எங்கள் பாவங்களை மன்னியும், எங்கள் வியாதிகளைச் சுகமாக்கும், உமது ராஜ்யத்தின் பிரஜைகளாக எங்களை ஆக்கும்.

313 இப்பொழுது கர்த்தாவே, இவர்கள் உம்மண்டை வருகின்றபடியால், ஞானஸ்நான தொட்டித் திறக்கப்பட்டு, தண்ணீர் நிரப்பப்பட்டு, இன்னும் சிறிது நிமிடத்தில், ஞானஸ்நானம்

கொடுக்கப்படும். இதே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டபோது, “விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்” என்று வேதம் உரைக்கின்றது என்பதை நாங்கள் நினைவு கூருகிறோம்.

314 கர்த்தாவே, உறுமால்கள் இங்கு வைக்கப்பட்டுள்ளன. வியாதியஸ்தர் சுகம்பெற நான் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் இவைகளை ஆசீர்வதிக்கிறேன். அப்பொழுது…

315 நம்முடைய ஆராதனைகள் நீண்டு போவதால், நேரம் அதிகமாகிவிடுகிறது. விதைப்பதற்கு நிலம் இருக்கும்போதே, நாம் தேவனுடைய வார்த்தையை விதைக்கவேண்டும், ஏனெனில் குளிர்காலம் வரப்போகின்றது. நாம் அதைக் காண்கிறோம். இலைகள் உதிர்கின்றன. எனவே குளிர்காலம் அருகாமையிலுள்ளது என்று நாங்கள் அறிந்துகொள்கிறோம். நாங்கள் தரை மட்டத்தை உழுது, விதை விதைக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். எனவே பரலோகப் பிதாவே, ஒவ்வொரு இருதயத்தோடும் நீர் பேசவேண்டுமென்று நான் ஜெபிக்கிறேன்.

316 வேதம் “விசுவாசித்தவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள்” என்று உரைத்துள்ளது. கர்த்தாவே, இப்பொழுது இங்கே அநேகர் விசுவாசித்திருந்தும், உமது நேச பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தில் இன்னும் ஞானஸ்நானம் பெறாத அநேகர் இங்கிருப்பார்களாயின், அவர்கள் இந்தக் காலையில் இனிமையாகவும், தாழ்மையுடனும் தங்கள் பாவத்தை அறிக்கையிட்டு, உலகத்தின் காரியங்களுக்கு மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, இயேசுகிறிஸ்துவின் நாமத்தை தரித்துக் கொண்டவர்களாய், பரிசுத்த ஆவியின் ஒத்தாசையைக்கொண்டு, தேவபக்தியுடன் இனி எப்பொழுதும் வாழ கிருபையருளும். கர்த்தாவே, இப்பொழுது நாங்கள் அவர்களை உம்மிடம் இந்த நோக்கத்திற்காக இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சமர்ப்பிக்கிறோம். ஆமென்.

317 இப்பொழுது நாம் ஆராதனையை சகோதரன் நெவிலிடம் ஒப்படைக்கின்றோம். நாம் ஞானஸ்நான ஆராதனைக்கு ஆயத்தமாகும்போது, அவர் கூறவேண்டியது ஏதாகிலுமிருந்தால் கூறுவார்.

318 கர்த்தருக்குச் சித்தமானால், இன்றிரவு ஏழு—முப்பது மணிக்கு நான் மற்ற செய்தியை ஒலிப்பதிவு செய்ய விரும்புகிறேன். அதுவரைக்கும் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!

***மூன்றாம் யாத்திரை*** TAM63-0630M

(The Third Exodus)

இந்தச் செய்தியானது சகோதரன் வில்லியம் மரியன் பிரான்ஹாம் அவர்களால் 1963-ம் வருடம், ஜூன் மாதம், 30-ம் தேதி, ஞாயிறு காலையில், அமெரிக்கா, இந்தியானா, ஜெபர்ஸன்வில்லில் உள்ள பிரான்ஹாம் கூடாரத்தில் அளிக்கப்பட்டு, பின்னர் காந்த ஒலிநாடா ஒலிப்பதிவிலிருந்து எடுக்கப்பட்டு, ஆங்கிலத்தில் முழுமையான செய்தியாக அச்சிடப்பட்டது. இந்த தமிழ் மொழிபெயர்ப்பு Voice of God Recordings மூலமாக அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றது.

TAMIL

©2021 VGR, ALL RIGHTS RESERVED

VOICE OF GOD RECORDINGS, INDIA OFFICE
19 (NEW NO: 28) SHENOY ROAD, NUNGAMBAKKAM
CHENNAI 600 034, INDIA
044 28274560 • 044 28251791
india@vgroffice.org

VOICE OF GOD RECORDINGS
P.O. BOX 950, JEFFERSONVILLE, INDIANA 47131 U.S.A.
www.branham.org

# பதிப்புரிமை அறிவிப்பு

எல்லா உரிமைகளும் தனியாருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகம் தனிப்பட்ட உபயோகத்திற்கோ அல்லது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு ஒரு கருவியாக வெளியே விநியோகிக்கப்படவோ வீட்டில் பயன்படுத்தப்படும் மூலப்பிரதியிலிருந்து நகல் எடுக்கும் இயந்திரத்தின் மூலம் பிரதி எடுக்கலாம். இந்தப் புத்தகம் Voice Of God Recordings® நிறுவனத்தின் மூலம் எழுதிக்கொடுக்கப்பட்ட அனுமதி வெளியீடின்றி விற்கப்படவோ, பேரளவில் மீண்டும் அச்சிடப்படவோ, இணையதளத்தில் வெளியிடவோ, மீண்டும் பயன்படுத்த வேண்டும் என்ற முறையில் சேமித்து வைக்கப்படவோ, பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்படவோ அல்லது நிதி திரட்ட வேண்டுகோள் விடுக்கும்படி உபயோகப்படுத்தவோ இயலாது.

மேலும் கூடுதலான விபரங்களுக்கு அல்லது கிடைக்கக்கூடிய மற்ற பிரதிகளுக்கு தயவுகூர்ந்து தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:



Voice Of God Recordings
P.O. Box 950, Jeffersonville, Indiana 47131 U.S.A.
www.branham.org